T.D.R.C : 3284
RR No : 195-I-1882
DIGITIZED

ஸ்ரீராமஜெயம்.

அரிச்சந்திரோபாக்யான

நாடகாலங்காரம்

என்னும் கீர்த்தனை.

இஃது

கும்பகோணத்திலிருக்கும்

மணஞ்சேரி

நரசிம்மையரவர்கள் பௌத்திரரும்

சூர்த்திராமையரவர்கள் புத்திரருமாகிய

நரசிம்மையராலியற்றி

சங்கீதசாஸ்திரமுறைப்படி

ஸ்ரீங்கார-வீர-கருணை-அற்புத பய-ஹாஸ்யமென்கிற

ஷட்ரஸா பேதமாய்

இராகதாள ஸ்வர வர்ணங்களமைத்து

கோகுலாபுரம்

சரவணபண்டிதரவர்களால்

பார்வையிடப்பட்டுச்

சித்தூர்

வீரசாமிநாயுடு

அவர்களது வித்தியாவிநோத

அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விஷு-௵.

O-, 842MNN1;A
M82

உ

ஸ்ரீராமஜெயம்.

அரிச்சந்திரோபாக்கியோரா

நாடகாலங்காரம்.

125/52
874 4112
3289

விநாயகர் - துதி

விருத்தம்.

திருமருவும்பரிதிகுலத்திறைவனான
தீரன்அரிச்சந்திரன்தன்சரிதைதன்னை
அருமைமிகுகீர்த்தனமாயருளிச்செய்ய
அத்திமுகத்திருத்தமனையவதரித்த
பெருமைமிகுமேருவையேடதாகப்
பிடித்தொருகொம்பொடித்தெழுதி ...
ஒருமைமனத்துடன்முடித்த கடவுள்பொற்றாள்
உளங்கொள்வேன்சித்திமங்களங்கொள்ளவேனே. (௧)

௧ - தரு - இராகம் - காட்டை - ஆதிதாளம்.

பல்லவி.

திருவருள்புரிவாயே - ஞானத் - தேனினைச்சொரிவாயே

அநுபல்லவி.

இருவொழிந்திடுவாயே உத்த
விணையடி துணையெனக்கிங்கிடுவாயே (திருவருள்)

சரணங்கள்.

௧ அண்டர்கள் தொழுவோனே மிக
அருந்தவர்மகிழ வாருவினெழுவோனே
தொண்டர்கள் புகழ்வோனே - உன்னை
துதிப்போர்மனத்தி விருந்து மகிழ்வோனே (திருவ)

௨ மதியில்லா ... லோடன் - உத்தன்
மலர்ப்பதத்தொழுவது யாமைக்கேடன்
கதிசிறும்பாத பாடன் நிஷ்னோக்
கருத்திற்சேர்க்கவென்னரச்சுதாவிசேடன் (திருவருள்)

௫, சத்யவசன பாலன் - அரிச்
சந்த்ரன்வண்மைகள்சொல் வோர்க்கனுகூலன்
முத்தியளிக்குஞ் சீலன் நீயே,
மூலகாரணனாய் வந்தாதிமூலன் (திருவரு)

முருகர் துதி.

விருத்தம்.

வள்ளளவுமாறுதகீர்த்திபெற்ற
இனகுலத்திற்புகழ்படைத்து இணைவேறில்லா,
வள்ளலெனவர்துதித்த அரிச்சந்திரன்றன
வண்மைதனைநாடகமாய்வகுத்துரைக்க
உள்ளமகிழ்ந்திடுதிருமான்மருகனாக
வுமையவளீன்றருளி... தம்மைக்காத்த
கள்ளவிழுமலர்ப்பதத்தோன்முருகவேளைக்
கருதிமீதான்போற்றிசெயப்பொருந்தினேனே, (௨)

௨-தரு-இ-ம் தனாசரி-ஆதிதாளம்.

பல்லவி.

[illegible] அடியார்க்கன்பு-கூருந்தயாபரா,

அநுபல்லவி.

அமரர்கட்கதிபா அயிராவதத்தனதிபா
சமரபுரிவாஸா சத்ருஜயவுல்லாச (குமர)

சரணங்கள்.

௧, ஞானமுருதந்தாய் குருவடிவாய்ஞாலந்தனில்வந்தாய்
மானுபிமானு மாதவத்தோர்மோகனு
கோனுவன்மருகா ஞதனேமொழிமுருகா (குமர)

௨. புள்ளிமயில்வேலா கதிவிரும்பும் புனிதர்க்கனுகூலா
வள்ளிமனோகர வரதகருணாகர
தெள்ளியகல்விதற்ருய் தீரனெனப்பெயர்பெறறோய் (குமர)

௩, வெற்றிமிகப்படைத்தாய் வெகும்பிறின்ற- வேலைமிற்கண் (அடைத்தாய்
முத்திக்கோர்வித்தாய் மூவர்க்குமிக்குறித்தாய்
நித்தியமுனைப்போற்றும் விமலர்கவலைபாற்றும் (குமர)

௪, வண்மைதனின்மிகுந்த அரிச்சந்த்ரன்வளங்கள்சொல்லத் (தொகுத்த
உண்மையெனக்கருள்வாய் உனைத்தொழுதோரைவெருள்வாய்
நுண்மணியாகவந்தாய் கபாலனுக்கருள்தந்தாய் (குமர)

(உமாபதிதுதி.)

விருத்தம்.

நன்னெறியுடனயோத்தி நாட்டினையாண்டவேந்தன்
சொன்னெறிதவருச்செல்வன் சுருணனுமரிச்சந்திரன்றன்
தன்னிகரில்லாத்திவ்ய சரித்ரகீர்த்தனங்கள்பாடக்
கன்னியோர்பாகம்செம்பொற் கழலினைப்போற்றுவேனே (௧)

௩-தரு-இ-ம்-ஆனந்தபைரவி- ஆடதாளம்.

பல்லவி,

அரனேகங்காதரனே-உனைப்போற்றும்
அடியார்க்குபகாரனே

அநுபல்லவி.

பரனேசிற்பதமலர் பணிந்தேன்குறைதனிந்தேன்
பார்தருவாய்செழிப்பாய் பவக்கடலையொழிப்பாய் (அர)

சரணங்கள்.

௧, உனதுபாதமேகெதி விண்ணோர்கள் [illegible]
உளமகிழ்ந்ததபோநிதி
மனதுமிகமகிழ்வாய் மருத்துவமேநிகழ்வாய்
எனதுகன்மமுடிப்பாய் எழிலுறவேகடிப்பாய் (அர)

௨, சத்தியஅரிச்சந்திரன் சரிதைகீர்த்
தனஞ்சொல்லவோர்தந்திரம்
வெற்றியைமிகக்கொண்டேன் விரும்பிபுன்பதங்கண்டேன்
நித்தியமும்அபயம் நிறைந்தநன்மையேஜெயம் (அர)

௩, பட்டகடன்றீரவே தவியேற்றுப்
பாரில்புகழ்சேரவே
இட்டமாயிதுசொல்லத் திடங்கொண்டேன்வேறல்ல
இட்டவனுக்குப்பொருள் எவ்விதத்தாகியருள் (அர)

திருமால் துதி.

விருத்தம்.

அனைத்துலகெங்குந்தானாய் ஐவகைப்பூதமாகி
நினைத்தவருளத்துதிக்கு நெடியமால்பாதம்போற்றி
தனத்தினில்மிகுந்தயோத்தித் தாரணிசெங்கோலாண்ட
கனத்திலன் அரிச்சந்திரன்றன் கதைகீர்த்தனஞ்செய்வேனே.

க-தரு - இ-ம்-பியாக்-அடதாளம்.

பல்லவி.

ஆராவமுதனே ஐயன் அமர்ந்தகுருநாதனே

அநுபல்லவி.

ஆதாரப்பொருளே உந்தன் அடியார்திருவருளே
தீராவினை தீர்ப்பாய் பொல்லாத் தீம்பனைக்கதிசேர்ப்பாய் (ஆரா)

சரணங்கள்.

க, வல்லரக்கரைச்செறுத்தாய் வாழ்வை வானவர்க்குப்பகுத்தாய்
நல்லவரந்தருவாய் மிக நன்மைசெய்யவருவாய்
புல்லறிவாளனெனைக் - காக்கப்போற்றினேனுன்னை (ஆரா)

உ, ஆதிமூலமானவா-தந்திக் கருள்தந்தகோனவா
கோதிலாச்சுடரொளியே முத்திக் குதவும்பரவெளியே
தீதிலாதபாதனே-மிகத்தெளிந்தஞான போதனே (ஆரா)

ங, சத்தித்தாம்பாலனே பூர்ண சந்த்ரவதிலோலனே
நித்யமாய்புகழ்ச்சரிதை-சொல்லும் தெய்வநிவேதனை
சத்யமாயென்னுவில் நின்று சாற்றுவாயிப்புவியில் (ஆரா)

சரஸ்வதிதுதி.

விருத்தம்.

அரசரிற்சத்யந்தானே அரும்பிதாகுருவென்றென்னும்
குரிசிலரிச்சந்த்ரன்றன் குலவுநற்சரிதைதன்னைத்
தரணியிற்புகழ்ந்திடுக்கீர்த் தனமெனப்பாடுதற்குச்
சரஸ்வதிதுதியென்னுமிற் சாற்றுவேன்போற்றுவேனே (இ)

உ-தரு-இ-ம்-ஸ்ரீ-ராகம் ஆதிதாளம்.

பல்லவி.

வாணியென்னுவிருந்தருள்வாயே வனஜாஸனித்தாயே (வாணி)

அநுபல்லவி.

எணிலோசனியே எக்கலைக்கும்-இறைவிநீயே
எளியேன் தெளியேன் எம்பாய்காப்பாய் (வாணி)

சரணங்கள்.

க, உலகமாதாவெனவந்துதித்தாயே உளங்களித்தாயே உலக
நிலைகண்டிடச்செய்குவாய் நிறைமதிதந்துய்குவாய்
நீவா மூவா இறைவீ நறைவீ (வாணி)

உ. வேதபுரிசீர்தங்கமனையாளே வெள்ளைத்தாமரையாளே
ஆதரவெனக்குநீயே அன்பாய்நுண்கிரமேயாயே
அறியேன்சிறியேன் அமலை கமலை (வாணி)

ங. எக்கலைக்குமிறைவியாய்நின்றாயே எளியோனைக்காத்தாயே
வக்கணைச்சொற்களையாவும்வழுவாதென்னுமிற்பொருள்
வகையை அகையை வைப்பாய் ஒப்பாய் (வாணி)

குருஸ்வாமி துதி.

விருத்தம்.

தருமநெறியுள்ளவனுந்தவறிலாத
தருமன் அரிச்சந்திரன்பெருமைசொல்ல
பரமரகசியப்பொருளைப்புகுந்துரைக்கும்
பரமகுருபதமலரைப்பணிகுவேனே (க)

ங-தரு-இ-ம்-சாவேரி ஆதிதாளம்

பல்லவி.

போதகுருநாதா புனிதர்துதிக்கும்பாதா
போற்றிசெய்தேன் ஸர்வாதிதா

அநுபல்லவி

ஆதரவாயென்றனை நகத்துயர்தணித்தாயே
ஆக்ரமிக்குமெண்மலர் அடக்கியபயந்தாயே (போ)

சரணங்கள்.

க. அண்டரும்முனிவரும் எண்டிசைக்கதிபரும்
அருந்தவமிருந்தோர்களும்
கொண்டேசமெய்ம்மியாக் குறிபடவேதற்காத்தாய்
குவலயந்திகெனது குறைகளையுமாற்றாய் (போ)

உ. உனதாவிட்சணத்தாலே உயர்ந்தோர்சிதமன்மேலே
நிதவெளிதோவென்றலே
மனதமகிழச்செய்தாய் மாயாவிகளைவதாய்
மாய்க்கவுகந்தாணையெய்தாய் மகாநுபாவாஉய்தாய் (போ)

ங. ஒப்பாக்கவலையான உத்திதனிலென்றென்னும்
உழன்றுதயியேனை யின்னும்
நியாதேவெமந்தேற்றி நியோர்வநுமையாற்றி
காசைமகவைக்காற்றுயே நாதையேபோற்றி (போ)

நாட்பெருமை.

விருத்தம்.

மிகுத்தசுத்தியுற்ற மேன்மக்களெவருக்கேனும்
வகுத்தகல் அரிச்சந்திரன்றன் வண்மையீர்த்தவமதாகத்
தொகுத்தபல்லிசைகளாலே தொல்புவிதன்னிலிக்க
மகத்துவக்கேட்போர்செத்த மனக்களிப்படைகுவாரே (௭)

எ-தரு-இ-ம்-மருட்டி-ஆடதாளம்,

பல்லவி.

மகிமையிருக்க அரிச்சந்திரன்சரிதங்கேட்க
மனதுஞ்சலித்தவர்களுண்டோ

அநுபல்லவி.

நகைமையில்லாதுணர்த்தும தம்முளம்வெறுப்பாரோ
தம்பியின்னொருதரம் தயவாய்ச்சொல்வாயென்றுரோ

சரணங்கள்.

௧, உன்னவுன்னத்தெவிட்டாதவமுதாயிது
உம்பர்சோறுமெவரும் உண்டாசேபுவிமீதே
உம்பாகன்ஜெகன்மோகன்ஒருவரும்இணையில்லா
ஒருமுனிவனைக்கண்டு கெந்தானேகெடும்போது
பண்ணவரியாருஜாபலமடைந்ததுபோல
பார்த்திபன்முனிதவத்தில் பாதிகொண்டானப்போதே
பார்த்தேர்நினைத்தஇம்மாநிறுச்சவலகற்றி
பதிவாய்த்தொழுதேத்திப் பணிக்கானோமிகச்சாது (மகி)

௨, ஆண்பின்னைதாத்திறமிக்கவத்தினத்தினில்
ஆத்மஞானியாயதரித்தர் னெக்குஞ்செழிக்க
அண்டருமமுனிவரும் எண்டிசைக்கதிபரும்
அதிசயித்தானந்தம் கொண்டாடிகள்கொழிக்க
விண்பழிவிதவிஸ்வாமித்திரமுனிக்கேதோதி
வினைவினையுமெய்தரு தவத்தோரெலாம்பழிக்க
வெத்தவிலவொருவனுலேசதபதர்மங்கள்
விளங்குயினியென்றே சூழலகுந்தபமொழிக்க (மகி)

௩, பசித்தழுந்திசுவைத்தால் மூலைதங்காதரித்தாப்போற்
பஞ்சவர்க்குமார்க்கண்டரிது சொல்லத்தொடுத்தாரே
பத்திவிஸ்வாசமர்மவிஞ்ஞயுளக்களித்து
பரிதாபமகன்றவர் பதத்தினைபடித்தாரே

புவித்தலைதகவயின் அருமைமபிசுத்தெவிட்டும்
புணையமைவயமுறைதப் புகட்டுமென்றெடுத்தாரே
பிறப்புயிறப்புமில்லா புகழ்ச்சியென்றென்றுமுணர
புனிதமேங்கபிளையென்று புகழ்தனைக்கொடுத்தாரே (மகி)

அவையடக்கம்.

விருத்தம்.

கருடனிருசிறகினையும் விரித்துவானில்
கனதோற்றமாய்ப்பறந்ததுகொட்டிட
தருணமதிலக்குப்பூச்சியுந்தன்றெக்கை
தனைவிரித்துப்பறந்திடவெத்தனித்தாப்போல்
வருணடைபோர்பாதாக மங்கலமகேதர
சருந்தவத்தோர்முன்னெம்மனையாசையாலே
பொருளறிவியனிதபுகழும்பிழைபொறுத்து
யோர்ந்துவிசேஷமேசெய்து (௮)

அ-தரு-இ-ம்-மத்தியமாவதி-ஆடதாளம்.

பல்லவி,

மகிழ்ச்சிகொள்வாய்மொழிகேட்டுப்பிழைசொல்லினும்
மதலைச்சொல்லென மீட்டீர்

அநுபல்லவி.

இகழ்ச்சியாப்பாதேசிக்கிங் கொஞ்சுகிச்சொல்லை
புகழ்ச்சியாகக்கொண்டாடும் புண்யமாதாபிதாப்போல் (மகி)

௧. எளிசிறகமுகர்தம்மூ டிச்சுக்கமாடுங்கொஞ்சும்
எந்திழையர்மொழியை இனிப்பாய்ச்சொல்லதுபோல
இமைந்தழுவுக்கள்ளப் புருஷர்கடும்புணலை
எதும்போதவன்கூறும் இனியவசனம்போல
விளிகளைவார்த்தைகள் காசொன்றுபொய்கையெல்லை
கேட்டுள்ளங்களித்திடும் செம்பீர்தனைப்போல
இலேசமகத்துமகிச் சந்திரமன்னனசரித்
தீர்த்தமேசொல்லக்கேட்டு ரென்மனம்போல (மகி)

௬, பலதுளிபெய்த்தொரு பெரியநதியாகியே
பாரிற்றீய்ந்தபயிராய் பண்பாய்க்காப்பதுபோல
பரிவுள்ளசிங்கந்தங்குங் குகையிற்பார்சைக்குக்குடி
ப்ரபலமாச்சுதாமென்னும் பழமொழியாதுபோல
ஜலதாரையிலுயிர் லோகந்தனைச்சேரில்
ஜாதியென்றேற்விடும் ஜாதியினைக்கம்போல
ஜெகத்திலுள்ளவரிற் செல்லாபுருஷனென்றென்
சத்ருதனைக்ரஸிக்குஞ் சாதுக்கண்மனம்போல (மதி)

௭, அரியவரங்கள்பெற்று ஆயுள்மிகவடைந்த
அருந்தவமார்க்கண்டர்பால் அன்றுபஞ்சபாண்டவர்
அருமில்வந்தடைந்துசேர் வடைந்துமிகமெலிந்து
ஐயநவரல்சிறைத்தோ மையாவெனவாண்டவர்
தெரியவேயவர்க்கருள் செய்துமாறைமிதனால்
தெளிந்தகத்துயர்தீர்ந்து திருந்தாள்பணிபூண்டவர்
தேறுதலையான்மன மாறுதலையடைந்து
தெவிட்டவமுதினைத் தேடியுண்டுமீண்டவர் (மதி)

ஆக்கியோன்பெயர்.

ஆசிரிய விருத்தம்.

சீர்மருவுகலியுக நாலாயிரத்துத்
தொள்ளாயிரத்தன்பத்தொன்பான்
நிகழ்ராயிரத்தெண்ணூற்றெழுபத்தொன்பதிற்
சிறந்தசாலிவாகனம்.
ஏர்மருவுகாளயுக்தியி லிகழுமார்கழியி
லியல்பாணபூர்வபட்சம்
எழிலுற்றபஞ்சமி யிருகுவாரமகளி
லியம்பாத்திருக்கூட்டமை
பேர்மருவுகரிஸ்ருக்லேதியனெனப்புகழ்
பெற்றநரஸிம்மாரியன்
பெருமைமிகுதேவர்களை முனிவர்தணர்தமைப்
பிரியாதகவிஞர்களையும்
கார்மருவுலகத்துள்ளசிவனடியாரைக்
கண்ணனடிதொழுதாளரைக்
கழலதொழுதிறைஞ்சியரிச்சந்தரன் கீர்த்தியைக
கவினிவிவோதினனே (௪)

மார்க்கண்டரியல்புகூறல்- விருத்தம்.

உமையவளோர்பாகன்றுட் படைத்திரேழு
லகோருதும்புகழவென்றும் பதினாறுயவாழ்
வமையவரந்தருகவென்த் துதித்திறைஞ்சி
யடியவருக்கடியவராய் மார்க்கண்டேயர்
சமையங்களெவற்றையு மாராய்ந்துணர்ந்து
ஜகமுழுதுஞ்சிவமயமே யெனத்தெளிந்து
இமையகிரிக்கடுத்தவில்வ வனத்திற்சென்று
இருந்திட்டாரவர்களுக்கும் விருந்திட்டாரே. (௫)

௯-தரு இ-ம் தோடி-ஆதிதாளம்

பல்லவி.

வனத்தில்வந்திருந்தாரே-மார்க்கண்டர்வில்வ-வனத்தில்வந்திருந்தாரே

அநுபல்லவி

அனைத்துயிர்க்குமீசனும் அரன்றிருவடிதனை
வினைகளப்புதித்தப்போற்றி
விலத்தில்வீழ்த்தியேயனை (வன)

சரணங்கள்

௧, அவனிமீதினிலரனடியார்க்கடியனாகி
ஆயிரத்தெட்டுசிவஸ்தலமுமன்புடனேகி
தவநிலையிற்குறையாதன்மைதனக்கிறையாய்
பவனிவாவுகந்தபத்தர்களிற்சிறந்து (வனத்தில்)

௨. இந்திரன்முதற்றேவரெவர்களுமகிழ்ந்திட
ஈசன்மாலயனோர்களொன்றென்றும்புகழ்ந்திட
மந்திரமுறைநீதிமார்க்கமெவர்க்குமோதி
தந்திரமதிபூதவத்தோரெவர்க்குந்தியாதி (வனத்தில்)

௩. மாதவத்தோரெவருமலரடிதொழுதேத்த
மணிமுடியரசர்சர்மமேனுமலர்தூவிப்போற்ற
பேதவபேதத்தீதப்பிறப்பிறப்பைநீருக்கி
ஆதிவன்மதிருமுமருந்தவத்தோர்களாமும் (வனத்)

பஞ்சபாண்டவர்மார்க்கண்டர்ஆச்ரமஞ்சேர்ந்தமைகூறல்.

விருத்தம்.

மதிமிகுந்ததர்மபுத்ராதியர்களாண்ட
மாநகரவிட்டெழுந்தமதிமயக்கமுற்று
கிதிமிகுத்தவனவாசியாகியென்றுசில்
லமவனடியேற்றிதர்மநிலையைச்சாற்றி
நதிமிகுந்தவாச்ரமங்களெல்லாவையுந்தேடி
சுற்றமறவோர்தமைநாடிநலங்கொண்டடி
௨

விதிமிகுந் தமார்க்கண்டராச்சிரமத்தை
விரும்பினர்மனமகிழ்ந்து திரும்பினரே (௰௧)

௰-தரு-இ-ம் ஆரபி

பல்லவி.

தலையடிவாகப்பஞ்சபாண்டவர்கள்மார்க்கண்டர்
தமைக்காணவந்தாரே

அநுபல்லவி.

செடிவனமிதென்று தேடித்தேடிச்சென்று
சிந்தைதனில்மதித்துச் சேவடியைத்துதித்து

சரணங்கள்.

௧. மன்னன்தர்மபுத்ரன்செய்தயாத்திரைதன்ஞானிகள்
மனமொத்துமிகவாட-யெவருங்காட
ஆய்கைகட்டுமொழிபதைத்துக்கொண்டோடிவந்து
ஆசையுடனபுணாஜவர்க்குமுகந்து (தலைய)

௨. இன்பமாகராஜசூயமகமியற்றவென்று
எழுதியவோலையைமேல-அயலோர்போலே
அன்பாய்வந்துபோதருமியனைக்கைத்து
ஆசியுஞ்செய்ததிறலேமிகத்திசைத்து (தலைய)

௩. சகுனிமாமன்சொற்கேட்டுச்சபையுண்டாக்கிக்கௌரவர்
சதிருக்கிழுந்தாலே-அவருடன்
வெகுநீதியாய்ச்சூதாடிவிளங்குமரசைத்தோற்று
வேந்தனருந்தவச்சையபாத்திரந்தனையேற்று (தலைய)

பாண்டவர்க்குமார்க்கண்டர்-அரிச்சந்திரன்

சரிதைகூறல்-விருத்தம்.

வந்தபஞ்சபாண்டவரைமார்க்கண்டேயர்
வருந்தியழைத்ததற்றரியவணைமேயெல்லாம்
தந்தவர்கள்முகவியல்வைத்தாவறிந்து
தயங்கவேதோபுரவலர்கள்தன்மையென்று
பிர்தவனைகெபரிதல்லவிகற்குமேலா
வியம்பக்கேளிதிதுரமீசவிசித்திரமென்று
கொக்ககன்னைப்பகழிலந்தார்நமாய
கொடிக்கின்றார்ஆகுளுறப்படிக்கின்றாரே (௰௨)

௰௧-தரு இ-ம் மோகனம்-அட்டதாளம்.

பல்லவி.

உங்கள்மனக்குறை மீட்பீர் மிக வுசிதமாயிதிகாஸ
மொன்றுண்டதைக்கேட்பீர் (உங்கள)

அநுபல்லவி.

உங்கள்குலத்தோர்க்கித் தீவினையில்லை
தெளிந்திதைக்கேட்போர்க்குத்தீருமேவெகுதொல்லை (உங்கள்)

சரணங்கள்.

௧, சீர்மருவுமயோத்தி சிமையாளச்சிறந்த
செங்கதிர்குலத்துற்ற செல்வனரிச்சந்திரன்
செங்கோலேந்திராஜ நீதிசெலுத்துநாளில்
சிறந்தவருந்தவத்தோர் சேர்ந்துவந்தாபூசித்தான்
பேர்மருவுவாயென்று பெருகவாசிவதித்து
பெருமைசேர்மதிதயன் பெற்றபேர்தறைத்துதித்து
பெண்கட்கரசிசந்திர மதியைமணம்புரிந்து
ப்ரியமாய்வாழ்வாயென்றப் பெண்குணமறிவித்து
நேர்மருவுமதிதய மன்னர்க்கின்னேர்மை
நெறிதவறுதுணர்த்தி நிருபன்றன்மனங்கண்டு
நிறைசெல்வனரிச்சந்திர மன்னர்க்கிந்நெறிசொல்லி
நிலையாளசதுரக்க தானத்தையளித்துக்கொண்டு
ஏர்மருவுமோர் உலகத்திடையறுகையில்
எழிலுயர்துர்க்கையின் கோயிலொன்றைக்கண்டு
எல்லவருமன்றும் சொல்லவருந்தவம்
இயற்றினேமென்றுளம் தேற்றிக்களிப்புகொண்டு (உங்க)

௨, அர்த்தபாசத்தி தந்தபொற்றேரேறி
அடக்கமகிழ்ச்சிகொண டடைந்தானேகன்றோனே
அன்பத்தாறுதேசத்தரசருங் கொண்டாட
அழைத்தானேமதிதயன் செலித்தாகவிருவாசி
இந்திராசனத்துக்கினை யிந்திரனுவானென்ன
எழிலுயர்கனகத்தேரேறி யூர்வலம்வந்து
இலகுதினிலுவமையில்லாச் சந்திரமதியை
யேற்றுமனைந்துபள்ளி யெழுச்சிக்கொலுவடைந்து
சுந்தரமமலரம்போற் காயன்களறிகூடி
களித்துதிர்யாகத்தக் கட்டிலோடிசைத்து
கண்ணேநிகாடாளன் தந்திதனையகெனே
களித்துச்சேனைகளுடன் காதலங்காகுவித்து
அந்தகர்லோகாகடற் சடர்வனமபூந்சேர்லே
அனைத்துமடைந்துகாளி யம்மன்பொற்பதம்போற்றி
ஆனைசேனையுடன் ஆதரம்அயோத்தியை
அடைந்திடக்கண்டோர் மகிழ்மகிழ்ந்தார் (உங்க)

௧, சிங்காதனமேறிச் செங்கோலுருளவிங்கச்
சிரபாணிசபையிற்கோ சிகவசிஷ்டர்சபதஞ்
செய்ததிறல்வன்மைக் கொண்டரிச்சந்திரன்
செமையாவுங்கொள்ளக்கோ சிகன்செய்தான்விபரீதம்
தங்காமல்மறுகவேகச்செய்தவல்லியில்
தாங்கொணுத்துன்பத்தாற் றளர்பிவேதம்பெயழ
தாயுஞ்சேயையுமறை யவருக்கடிமையாக்கித்
தந்தானேபுலையனுந் தார்வேந்தன்கைதொழ
அங்காதரவான சந்திரமதிமகனை
அடர்வனத்தேகச்செய் தரவாலுயிர்செகுத்து
அண்டர்கள்திகைத்திட வாதித்தன்குலமாதை
அவள்கணவன்கையா லகந்துணிக்கவருத்து
கங்காதரன்முதற்கடவுளரெவர்களும்
கண்டதைத்தடுத்துக் களித்துமலர்கள்தூற
கனகநாளன் கையாலமுடி சூட்டி
கனங்கொண்டவரிச்சந்திரன் கதைகேட்டுக்களிகூற(ஸின்)

விருத்தம்.

வேதமுனிமார்க்கண்ட முனிவரிந்த
விதம்யம்பக் கேட்டதர்மபுத்திரனைவர்
பேதமறவிளங்கவெமக் கின்னொருக்கால்
பிரித்துரைக்கவேண்டுமெனப் பேசுவோரை
போதமுறத்தழுவியரு ளிருத்திமெத்தப்
புண்ணியருநகையலதிப் புவியிலுண்டோ
காதலெனத்துதித்தவர்க்கு நன்மையாக
கவிதுவர்முகமலர்ந்து கவிலுவாரே. (௰௧)

சுத்தமங்களம்.

சங்கரன்முருகனுக்குமரனயன்றிருமாலுக்குஞ்
செங்கரனிந்திரனுக்குஞ் செப்பகாரதமுனிக்கும்
பொங்கியவிசுவாமித்திரர் புகழ்பெறுவசிஷ்டர்சுக்ர
ரங்கனுமுறைந்தவானோ ரெவர்க்குமங்களஞ்சொல்வேனே (௰௨)

இதுவுமது.

அத்தியும்பரிதேர்சேனை யனைத்துடனவனியாண்ட
சத்தியரிச்சந்திரனுக்குஞ் சந்திரமதிமங்கைக்கும்
சத்தியகீர்த்தியென்னுஞ் சதாரனுமந்திரிக்கும்
நித்திய[illegible]களஞ்சொல்வேனே; (௰௩)

சுத்தமங்களம்.

௰௧-இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

தேவாதிதேவருக்கு ஜெயமங்களம்-சகரும
திங்களணிவேணியர்க்கு சுபமங்களம்.

அநுபல்லவி.

மூவர்முதலானவர்க்கு முத்திதரும்யோகர்க்கு
மேவுதவத்தோர்களுக்கு மேலவர்களுக்கும்(தேவா)
கணநாயகனுக்குக் கந்தனாகாரசர்க்கும்
விண்ணோர்புகழ்கௌசிக விசுவாமித்திரமுனிக்கும்(தேவா)
வேதகாலமுநூலும வினங்கியவசிஷ்டருக்கும்
நாட்சத்ததாயருக்கும் உத்தமர்பாணவர்கட்கும்(தேவா)
சத்தியவரிச்சந்திரனுக்குஞ் சந்திரமதிமங்கையர்க்கும்
புத்திரலோகிதாசனுக்கும் புகழ்சத்தியகீர்த்திக்கும்(தேவா)

பாயிரம்-முற்றியது.

ஆக-விருத்தம்-௰௩-தரு-௰௨.

௧.

முதலாவது.

அரசாட்சிகாண்டம்.

கடவுள்வணக்கம்.

விருத்தம்,

காசிபபுகழ்பெற்றோங்குசோர்திரனரிச்சந்திரன்றன்
சீரியசரித்திரத்தை சிறைந்நாடகமாய்ப்பாட
கூடியவிவேசைச்சொற்குலவுமுத்தமிழினாலே
சூடியகவிமாலைக்குத் தோட்டமசொல்லுவேனே, (௧)

தோட்டமங்களம்,

௧-இ-ம்-நாட்டை-தாளம் ஜம்பை,

ஜெயஜெயசுஜம்புகேச ஜெயஜெயகுமரேச
ஜெயதேவதேவேச ஜெயஜெகநிசா-ஆ-ஆ
ஜெயஜெயவாரணேச ஜெயபட்சமிபிரமனேசநிசே-ஆ-ஆ
ஜெயலர்வலோகேச ஜெயஜெயஜெகதீச ஜெய ஜெய

வானவசிஷ்டமுனிவர் — வாழ்த்துமரிச்சந்திரனைநாம்
கோனவன்றன்சரித்திரத்தை — கூறவருமாறபாட-ஆ-ஆ
ஆனவசிகளாரு — மரியனைவர்புவர்-பசேர-ஆ ஆ
ஆனவொருவனைத்தினரு — மேடிபணிகுவேனே-ஜெய
இலங்கையுலகெங்கும்புகழும் — இறைவனரிச்சந்திரன்றன்
கலைபெருகுங்கதையுதனை — காதலாற்றப்பாட-ஆ ஆ
உலைபயன்னொடசபிவாணி — உத்தமியாளிருமடியர்-அசேர ஆ ஆ
நலையுனதிவருமபோற்றித் — தாமரைத்தாளிதமுருமை ஆ ஆ
தருமநெறிதவறாத — சத்தியஅரிச்சந்திரன்றன்
அருமைசரித்திரமதனை — யகமகிழ்ந்துபாட-ஆ ஆ
குருமுனிவர்பெரியோர்கள் — திருவடியர்மறையோதும்
அருமையதுதவபிய — மையர்பதந்துணையே-ஜெயஜெய

வசனம்-அகோகேளுஞ்சபையோர்களேராஜாதிராஜனான அரிச்சந்திரமகாராஜனதுபுகழ்பெற்றசரித்திரத்தை ஆடிப்பாடிமுடியுமளவும் யாதொருவிக்கினமும்வாராமற் பாதுகாக்கும்பொருட்டு சர்வேஸ்வரியாகிய விக்கினராஜர்வருகிறவிதங்காண்க,

விருத்தம்,

மெத்தியையமிசப்படைத்தவருடைய திண்சேமபடைத்தோன்
சித்தமாருவாகனத்தோன் செக்கவோர்செங்கோலாண்டோன்
பத்திசெய்பவர்கட்செல்வம்பாக்கியமளிக்கக்காப்போன்
வித்தகன்மைந்தனானவிக்கினராஜனும்வந்தானே, (௨)

உ-தரு-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்,

பல்லவி,

ராஜராஜமகாராஜனானவிக்கின-ராசன்சபையில்வந்தானே

அநுபல்லவி

போஜன்முதலாகிய — ராஜராஜர்துதிக்கும்
தேஜோமயனுடட — ரச்ஜன்றவத்துதிதக ராஜ ராஜ

சரணங்கள்,

௧. இஷ்டமாமுனிவசிஷ்டர் — விசுவாமித்திர
திருவருமிமையவர்க் — கெதிரேசெய்யவிஷ்டர்
அஷ்டகாலத்துணையநிக்க — அருளர்புத்திர
அரிசசந்திரராஜனுக்கனுகூலமானமித்திரர் (ராஜ)

௨. கிம்புருஷர்களர் — இதக்கம்பாட
தும்புருநாரதர் — துதித்துக்கொண்பாட
தம்புருவீணையிசை — நடச்சபையிலாட
அரம்பையூர்வசி — சங்கராபரணம்பாட(ராஜ)

௩. நெற்றியிற்றூயவெண்ணீற்றி — னொளிவிளங்க
கொத்துமுடியிற — சந்திரகாந்திமிகத்துலங்க
உற்றபுயத்திலுக — யக்ஞோபவீதமிலங்க
சித்திரருபமதத்தில் — பத்மபூஷிதமிலங்க(ராஜ)

வசனம் இவ்விதமாயெழுந்தருளியவிநாயகமூர்த்தியை குருக்களையர்பூசைசெய்கிறவிதங்காண்க

விருத்தம்

சம்புவின்பதந்துதித்துச் சாயுவிலஸ்நானஞ்செய்து
அம்புவிபோல்லபோற்கமடையுள்குருக்களையர்
தம்மையம்பாரத்தைகொண்டைத்தலைமாலிகையுஞ்சூடி
தும்பியாமுகவன்பாதம் துதித்துநற்பூசைசெய்தார் (௩)

௩-தரு-இ-ம்-ஆனந்தபைரவி-ஆடதாளம்,

கண்ணிகள்.

ஆதிதேவனானவிநாயகனே-சிவசாம்பசிவ
ஐயனேயுனைப்பூசைசெய்குறேன்
பாதிமதியைப்புனைத்தாயீசனே-சிவசாம்பவசிவ
பண்புடனேனைக்காரும்பரமனே
உமையவளருக்குகந்தமைந்தனே-சிவசாம்பவசிவ
உளமகிழ்ந்துமை பூசைசெய்குறேன்
இமைப்பொழுதமைமறவிடாமலே-சிவசாம்புவசிவ
இதமதயிர்தத்தையாளுமீசனே
சௌலயுலம்முல்லைமல்லிகைமலரால் ஐங்கணபதி
நேசமாயுனைப்பூசைசெய்குறேன்
வல்லமைதனையுடைத்தில்லைவதநமா-வரதவிக்னேசா
வாருடனேனைக்காருவரதனே
எப்பிழையும்பொறுத்தருளுமீசனே-சிவசாம்பசிவ
ஏழைக்கிரங்குமீசன்மைந்தனே
முப்பழமோதகமப்பமவல்பொரியும் - ஐங்கணபதி
ஒப்புடனுமக்குத்தப்பாமல்தான்தருவேன்

வசனம்-இவ்விதமாகப் பூசைசெய்கிறசமயத்தில் குருக்களும்அர்ச்சகரும் சபதந்செய்வதுகாண்க.

குருககள்சொல்லுகிற பூசை சுலோகம்

மூஷிகவாகனமோதகஅஸ்வதா சாமதகாணவிலம்பிதசூத்ரவாமனருபமகேஸ்வரபுத்திர-விக்னவிநாயகபாதநமஸ்தே-

யக்ஞோபவீதம்-பூணூல்,

அர்ச்சகர்சொல்லுகிற-பூசைசங்கோகம்,

தசாநாம்திவ்யருசிணும் சடகோபாதியோகிநாம்
தேசிகேந்த்ராத்தயாசித்தம்வக்தேகம்சைசியநாயகம்

(குருக்கள்) ஏதுகாணும்இல்லாதவாடிக்கையெல்லாம் பண்ணுகிறீர்
(அர்) என்னெனக்குமில்லாதவாடிக்கைஇப்போ என்னகாணுமுண்டா
ச்சு,

(குரு) விக்னேசுவரருக்குவைத்தவாள்பூசைபண்றது அகம்பிரதி
த்தியந்தானே.

(அர்ச்சகர்) விஷ்வக்ஸேநருக்குசைவாகம்பூசைபண்றது ஆகாத்திய
ந்தானே,

(குருக்கள்) வயிற்றுவலிக்கிடம்கொடுத்தாலும்வைஷ்ணவனுக்கிடங்
கொடுக்கப்படாது,

(அர்ச்சகன்) சைத்யோபத்திரவத்துக் கிடம்கொடுத்தாலும்ஸ்
மார்த்தனுக்கிடங்கொடுக்கப்படாது.

(குருக்கள்) தத்துபுத்திரனெப்வந்தவனேஇல்லையோ அதான்தத்தூபி
த்தென்னுடனடிவழியிரான்,

(அர்ச்சகர்) கடம்தண்டவந்து கண்டகாசுரனேயில்லையோ அதா
ங்கபிகம்பிகிடென்றுகண்டகன்டவாக்கேகதரான்,

(குருக்கள் ஏண்டாசவுங்கள்பிதாமகாளகாணியாட்சியோ

(அர்) அடேஇல்லாதேபோனு உங்கம்மாதாமகாள் பிதுரார்ச்சி
தமோ

(குருக்கள்) போடாபோடாஜாதிப்ரஷ்டஜடாமுனியே

(அர்ச்) விடுவிடுஷிடாதிப்ரதிஷ்டமஹிஷாசுரா

(குருக்) பொங்கலும்புளியோரையும்தின்னத்தான்தெரியும்பூஜை
பண்ணிப்பிட்டாய்பூஜைபதாவிதி சிவராணுக்குத் தான்தெரியும்.

(அர்ச்) சவுசபுஷ்கரணியிலேஸ்தானம்பண்ணி சவுண்டிசோடச
ந்சாப்பிடத்தான்வரும் அர்ச்சனைபண்ணிறுய் அர்ச்சனைபூஜாவிதாக
பருஷோத்தமனுக்குத்தான்தெரியும்.

(குருக்) இனிமேல் கேள்விலுக்குள்ளேவந்தால் குடுமியையறுத்
து கோமயத்தைக்கரைச்சுத்தி முள்வயும்பல்லைப்பிடுங்கி மேசை
யை மூளியாக்கிப்பிடுவேன்,

(அர்ச்) சன்னிதிக்குள்ளேவந்தால் சாணியைக்கரைச்சுத்திசண்
டாள அபிஷேகம்பண்ணி முழங்கால்கில்லைப்பேத்து முழியைவாட்
டிமூணுவருஷம்முப்பத்தாறுமாசம் மூலையிலேபோட்டிவிடுவேன்,

குருக்கள் ஏண்டா - திருப்பட்சி பொங்கல் கெடடாமல்திண்ணி
ந்தேசா.

அர்ச்சகன் ஏண்டா திருவாக்களிவில்லுண்டைபோலேதிறம்பா
விழுந்தெப்போ.

குருக்கள் போடாபோடா சாப்பாட்டுராமா

அர்ச்சகன் போடாபோடா ஹபுரதிண்டி குண்டோதரா

பராசாரியன்சொல்லும்-வசனம்.

பட்டமார்களே நீங்களிருவரு மிப்படி ஒருவருக்கொருவர் சண்
டை செய்து கொண்டிருக்கிறீர்களே தேவஸ்தானத்தார் கண்டால்அ
பராதம்போடுவார்கள் சீக்கிரமாய்ப் பூசைக்கு யத்தனப்படுங்கள் சு
வாமிகளே.

குருக்கள் நான்நான் பூசைபண்ணுவேன்

அர்ச்சகர் நான்நான் பூசைபண்ணுவேன்

குருக்கள் ஏதுடா ஒண்டவந்த பிடாரி ஊர்ப் பிடாரியைதுரத்தி
னதுபோலே யிருக்கிறது ஸ்வாரஸ்யந்தான்.

அர்ச்சகர் ஏதுடா மழைக்கொதுங்கி மனைக்கிழுக்கிறது போ
லே யிருக்கிறது பலேபலே சபாசு சபாசு

பராசாரியன்-வசனம்.

ஓய் சுவாமிகளே இப்படி நடக்கிறது பார்த்தபேருக்கு மரியாதை
தப்பிப்போய்விடும் சுமுக்கமாய் நான்சொல்கிறபடிகேட்பீர்களா

பட்டமார்-வசனம்.

ஆகா நல்லது நீசொல்றபடியே கேட்கிறோம்.

பராசாரி-வ.ம்-சரிதானு பாட்டர்-வ.ம்-சரிதான்

பராசாரி சுவாமிக்குப்பெயரென்ன நிசமாய்ச்சொல்லுங்கள்.

பாட்டர் சுவாமிக்குப்பெயர் சங்கரநாராயணதாமோதர குருநாத
பிள்ளையார்

பராசாரி ஆகா நல்லதையா இது நீங்களிட்ட பேரா பெரியவா
ளிட்டதா.

பாட்டமார் இந்தப்பேர் எத்தனையுகமோ ஆயிருக்கும்

பராசாரி நல்லதுதான் இரண்டுபேருமாகப் பூசைபண்ணிப்போ
ட்டு சீக்கிரமாயலங்கிர்தஞ் செய்துக்கொண்டு தூபதீபத்தைவேத்தியா
திஷோடச உபசாரங்கள்செய்துகொண்டு அவரவர்கள்ஆச்ரமத்துக்
குளருந்தருளுங்கள்சுவாமிகளே.

(பட்டமார்) அப்படியே ஆகட்டும்பிள்ளாய்.

பட்டர்கள்செய்கிற அர்ச்சனை

ஓம்சுமுகாயநமஃ
ஏகதந்தாயநமஃ
கபிலாயநமஃ
கஜகர்ணிகாயநமஃ
லம்போதராயநமஃ
விகடாயநமஃ
விக்நராஜாயநமஃ
கணாதிபாயநமஃ

ஓம்தூம்கேதவேநமஃ
கணாத்யக்ஷாயநமஃ
பாலசந்திராயநமஃ
கஜாநநாயநமஃ
வக்ரதுண்டாயநமஃ
சூர்ப்பகர்ணாயநமஃ
ஏரம்பாயநமஃ
ஸ்கந்தபூர்வஜாயநமஃ

சித்திவிநாயகாயநம நாநாவிதமந்த்ர புஷ்பாணி சமர்ப்பயாமி

வசனம். இந்தப்பிரகாரமாய் விக்னேசுவரர் பூஜாவிதிகளைப்பண்ணிக்கொண்டு அவரவர்கள் ஆசிரமஞ்சேர்ந்த பின்பு அரிச்சந்திரமகாராஜாவினது துவாரபாலகனான கட்டியக்காரன் வருகிறவிதங்காண்க.

விருத்தம்.

கொட்டியமுரசுசின்னங் கொண்டுதான்முழங்கயோத்தி
மட்டிலாப்புகழ்படைத்த வாழரிச்சந்திரன்வாசல்
கட்டணையாளதீரனடைவழிசெலுத்திவைக்கும்
கட்டியக்காரன்வந்துகளிப்புடன்றோன்றினனே.

௩-தரு இ-ம்-சுருட்டி தாளம்-ஆதி

பல்லவி.

கட்டியக்காரனும்வந்தானே-ஒய்யாரமாகக்
கட்டியக்காரனும்வந்தானே

அநுபல்லவி.

கட்டியக்காரனும்வந்தான் கைகளில்விருதுகட்டி
சட்டமாயயோத்தியாளுஞ்சத்திய அரிச்சந்திரன்வாசல் (கட்)

சரணங்கள்.

௧, பாதச்சிலம்பொலி பன்ன-இடையினில்வெண்
பட்டுச்சல்லடமு முன்ன
சோதிமார்பில்மகமல்செக்காய்ப்பச்சென்றுமின்னக்
கோதில்லாமுடிமீது குண்டுமண்டாசுதுன்ன (கட்)
௨, பிண்டிபாலமும் எடுத்து-மருங்கினிலே
பின்னர்க்கச்சையு முடுத்து
வெண்டயம்பொற்கொலுசு தண்டைசிலம்புடுத்து
பண்டுவில்லம்புதொடுத்து பசப்புமொழியடுத்து (கட்)

௩, சிறக்கப்புகழ்ந்து பேசியே-சித்தியதாளங்கள்
செய்யுங்கைகளை வீசியே
துறக்கத்தவரைக்கூப்பித் தொழுதுநின்றவாசியே
உறக்கத்திலுமறவா உளவுக்கள்ளனையேசியே (கட்)
௪, மந்திரிப்ரதானிமார் கூடி-தினமும்போற்றி
மகிழ்ந்திடுஞ்சமுகத்தைத் தேடி
சுந்தரந்தனைக்கொண்டாடிச் சுருட்டிராகம்பாடி
வந்தனஞ்செய்திடுமரி சந்திரன்சபையைநாடி (கட்)

கட்டியக்காரனுக்கும்-பாதசாரியனுக்கும்-தர்க்கவசனம்.

(கட்டியக்காரன்) ஸத்துஸத்து அரோமியா அஜாதீங்களியார்வோய் நம்முடைய அரிச்சந்திரமகா ராஜனுடைய அரண்மனைவாசலிலே ஆட்டமென்ன பாட்டமென்ன நாட்டமென்ன கூட்டமென்ன கடபிடாயென்ன லோடபிடாயென்ன யெவ்வளவாவது பயமச்சமில்லாமல்மரிகாலத்திலே மதிச்சுப்போன தவளைகளைப்போலே தலைதெறிக்கக்கத்துறீங்கோ அச்சா சூப்பரதோ நீங்கள்யார்வோய்,

(பாதாசாரியன்) நாங்களெல்லாரும் உம்முடைய புத்திரசிகாமணியினுடைய விவாக முகூர்த்தத்துக்குவந்த வித்துவாம்ஸாள்.

(கட்டி) நீங்கள் யெத்தனைபேர் வந்தீங்கோவோய்.

(பாத) இந்த சபையிலே வந்திருக்கிறவர்களெல்லோரும் எங்களைச்சேர்ந்தபேர்கள்தான் வோய்.

(கட்டி) அடேயப்பா இத்தனைபேருக்கு எங்கேயிருந்து சர்பராயண்ணுனீங்கோ அரோவோய் நீங்கள் வருகிறவழிகளிலே காடுசெடிகல்லு கரடுபள்ளம்-படுகுழி-கரடி-புலி பாம்பு தேள் இதுகளிலே ஒண்ணுமில்லையா.

(பாத) ஏண்டா அப்பா இவ்வளவுகடுமையாகக்கேட்கிறாய்

(கட்டி) உங்களத்தனைபேருக்கும் வைகுந்தத்துக்குவழிகாட்டத்தான்வோய்.

(பாத) எங்களையேண்டாப்பா அப்படிசொல்கிறாய்,

(கட்டி) இல்லாவிட்டால்ஒங்களப்பன்பணம்சேர்த்துவட்டிக்கிப்போட்டிருக்கிறீங்களோ,

(பாத) அரண்மனைசொத்தெல்லாம் உங்களப்பாட்டிகொட்டை நிறந்தோ,

(கட்டி) அடவோய் நீங்கள் வருகிற வழியிலே ஆறுகுளங்களுண்டா,

(பாத) மூடிகொண்டான் குடமுருட்டி-திருமலைராஜன்-அரசலு காவேரி கொள்ளடம்இதுகள்தானிருக்குது.

(கட்டி) இந்த ஆறுகளிலே தண்ணீர் யெவ்வளவுயிருக்குதய்யா

(பாத) இடுப்பளவு-மார்அளவு-கழுத்தளவு-வாய்யளவுயிருக்குதும்

(கட்டி) இன்னமதாலுகிறதடைதண்ணிபஞ்சமாய்ப்போச்சா,

(பாத) ஏண்டாப்பா இவ்வளவுபரிதாபப்படுகிறாய்

(கட்டி) உங்களை யிப்படிந்தானே அடித்துக்கொண்டு போகாமல் போச்சேயென்கிற என்கிறதுக்குந்தான் சாப்.

(பாத) நாங்கள் வேண்டுமானால் சொல்லாமற்புறப்பட்டு ஓடிப்போய்விடுகிறோம் நீயேன் இவ்வளவுமனசலிக்கிறாய்,

(கட்டி) பஞ்சகாலத்திலே ஒருத்தர்வீட்டுக்கு ஒருத்தர்வந்தால்பரிகாடமாயிருக்குதா ஒருத்தரா இரண்டுபேராதாங்குகிறதற்கு இந்தப்பக்கத்திலே இருக்கிறவுங்களெல்லாம் யார்வோய்

(பாத) அவர்களும் வித்வாம்சான்தானையா

(கட்டி) ஆஹாஹா வித்துவாம்சின்மச்சங்களாயெத்தனைகருவாட்டுக்குவோய்,

(பாத) என்னவோய்சாத்திரம்பொய்யானாலும் சாதிபொய்யாதாமீர்யார்குடிமக்களிலேகரையோரத்துலபைக்கூட்டமோ

(கட்டி) அரோபாபுமாகுலமுதோடிமிசேமிகாவலபி உண்டாதிமிரோவருவோய்,

(பாத) மேழுபாகவதலமண்டி.

(கட்டி) ஆ-ஆ-ஆ-ஆ-ருபாயிக்கினத்தினிபடி விக்கிரங்கோமாதரியெங்கேகாட்டுவோய்பார்ப்போம.

(பாத) தன்மதங்கொண்டதடியா பிள்ளையென்னவோய் வாதகம்பண்ணபுறப்பட்டாய்பார்த்தமுகங்களெல்லாம் வேத்துமுகமாகுதோ என்னவோய் பாககாவத்தில்கேட்கிறாய்.

(கட்டி) அரோதாத்தேரி மாவிலேபெல்லம் சனவர்லேபிச் அரோபாய் நைதோதும்யொபோலே

(பாத) நாங்கள்ஹரிபஜனைபண்ணுகிறவிஷ்ணுபக்தாள்வோய்

(கட்டி) அரியபபத்தாதேபோனால் ஆக்கினால்ஒருசட்டி எப்படிகாணும்ஐய்,

(பாத) என்னவோய்உங்கள்விட்டிலே பொங்கலுக்குபொங்கல் அடிப்பூதுகிறதும் தீபாவளிதண்ணீர்மோர்க்கிறதுதான்வழக்கமோ என்னதைதவோய் அரியப்பந்தாது ஆக்கப்பத்தசென்கிறாய்

(கட்டி) அரிப்பசனைக்கீரைதான் ஓய் அரிப்பசனைக்கீரைதான்

(பாத) அசுயவருஷத்திலேயல்லவோ அஞ்சரிப்பஞ்சம்இப்போயென்றுவோய் உமக்கு அரிக்கீரைபஞ்சம்வந்தது,

கட்டி பின்னை நீசொன்னதென்னவோய்.

பாத என்னவோய் தட்டுகெட்டமுட்டிப்பாந்தாஉமக்கு காதிலேகல்லும்முள்ளும் கலந்துதைத்திருக்குதோ நாங்கள் பரதநாட்டியஞ்செயகிறபாடகாள்ஐய்,

கட்டி ஆ ஆ ஆ ஆ அரோமியா பௌத்சச்சர் அம்மைகனேபலே பலே சபாஸ் சபாஸ் உங்களுக்குபாரம்பரியமாய் இதுதானபிழைப்பு.

பாத ஆம் எங்கள் குடும்பந்தோணியாள் முதலாக இதுதான்பிழைப்பு,

கட்டி எய்காமமேதும்குகியாளபஹோனு ஒருத்திக்குபாடிகாதலம் பண்ணினால் உங்களுக்கு என்னுவோய் தாருகொடுப்பாங்கோ.

பாத என்னடாதட்டுகெட்டபயல் தாருமாருமாய்ப்பேசகிறான்அடவோய் நாங்கள் சங்கீதசாஸ்திரமறிந்து பரதநாட்டியங்கற்றவித்துவாம்சர்கள்ஐய்,

கட்டி இவ்வளவுசொற்பகாரியத்துக்கு வாயிலேவந்ததெல்லாம் உளறுவானேன் நாங்கள் அரிச்சந்திரமகாராஜாவினிடத்திலே ஆடிப்பாடித்யாகம்வாங்கிக்கொண்டுபோகவந்தோமென்றுசொல்லுகிறதுதானே இப்போதான் கற்றறிமோழையென்பது கண்ணுக்குக்கண்ணாடி வைத்ததுபோலிருக்கிறது நல்லது உங்களுக்குத் தெரிந்த வித்வத்தென்னவோய் நம்முடைய அரண்மனையிலே யிருக்கிற வித்துவாம்சானைப்போல பாடுவீர்களா என்னென்னராகம் தெரியும்ஐய்

பாத நாட்டைகவரோசு-துஜாவந்தி செஞ்சுருட்டி - குருஞ்சி-நாதநாமக்கிரியை - சைந்தவி - மாளவம் - சங்கராபரணம் - இப்படி இன்னம் அநேகவிதராகங்களும் பாடுவோம்.

கட்டி அரோகியாரோ லரப்கறுப்லிக்ஹே - நம்பள்து இப்படியிருக்காதுவோய் ரொம்பசம்மத்தா இருக்கும்வோய்

பாத ஆனால்உங்களுக்குத்தெரிந்த இராகதாளங்களிலே கேட்டாலும் பாடுகிறோம்.

கட்டி ஆ ஆ ஆ ஆ பல்மஜாக் உவாபல்குளிமே ரக்தாகும் அரோபியாகுநோ சாக்கடைராகம் - நாயிராகம் - தோண்டிராகம் - குண்டுசட்டிராகம - இதுகளெல்லாம் பாடும்ஐய்பார்ப்போம்.

பாத இதுகளெல்லாம்எங்கேவோய்பாடம்பண்ணினீர்.

கட்டி அரோவோய் அவுங்கபேர் மகா அருமையானபேர் வோய் அந்த மகாவித்துவானுடைய பேர் அங்கதீன அலங்காரஞ்ராகாந்தகவி ர்தத்தகுண்டரோர்ப்பாகவதர்ளுய்,

பரத சபாசு உம்முடையவித்வத்துக்கு நாரதாதிகளும் சடன்ல மகாராஜாவினுடைய சமுகத்துக்கு எங்ஙனே அழைத்துக்கொண்டு போய் பேட்டிபண்ணிவையும் கட்டியக்காரரே.

(கட்டி) அப்படியே அழைத்துக்கொண்டுபோய் மகாராஜாவினி டத்தில் தயாளம்வாங்கிக்கொடுத்தனுப்பிவிக்கிறேன் இங்கேதானே யி ருமகள் கொலுச்சபைக்குப்போய்வருகிறேன்.

அரிச்சந்திரமகாராஜன்-அரசாட்சிசெய்தல் - விருத்தம்.

மகராஜன்கதிர்குலத்தி லுதித்தயோத்தி
மகராஜன்திரிசங்கு மகாராஜனபெற்ற
மகாராஜன்சத்ய அரிச்சந்திரனென்னும்
மகாராஜனரசியற்றி மகிழ்கின்றானே.

அ-தரு-இ-ம்-சாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

ராஜராஜமகாராஜன் அரிச்சந்திர ராஜன் செங்கோலாண்டானே

அநுபல்லவி.

க்ஷேமாயன்பத்தாறு தேசத்துள்ளராஜரும்
நிறைந்துகங்கணங்கட்ட நெடியமுடிபூண்டானே (ராஜ)

சரணங்கள்.

க வேதாகாலுமாறு நூற்களுங்கற்றுணர்ந்த
வேதியர்மறையோதி மகிழவே
விளங்குமக்ஷத்திரியர்கள் கலங்கமில்லாமறு
விதிகளையாராய்ந்து புகழவே
சோதிலர்தவைசியர்வாணிபமதிற்
கொள்கைதவறாமல் திகழவே
குடியானவர்கள் வேளாண்மைத்தொழில்களில்
குறைவிலாமலே திகழவே(மகரா)

௨ கற்புமிகுந்தபெண்கள் கணவனுயட்குன்றாமல்
காலமறிந்துநோன்பு நோற்கவும்
கழல்தொழுவோர்க்குதேவர்வேண்டும்வரங்கொடுத்து
கலுஷம்போக்கியெவையுங் காக்கவும்
சற்பனையாவெல்லாருஞ்சிந்தை நொந்துருகாமல்
சதாகாலமுங்கிருபை பார்க்கவும்
தர்பாரருள்படைத்தொப்புறவடைந்தோர்கள்
தண்ணீர்திருவுளத்தைக் கோர்க்கவும்(மகரா)

௩ கருங்கடற்போலவேதனையெங்களுந்கசிந்து
கசிந்துபுனல்மிகப் பெருகவே
காலகாலத்திற்பயிர்கள்தழைத்திட
கருதுமுழவர்க ளுருகவே
நெருங்கவிளைந்திடுகவதியும் நாட்டில்
நிறைந்துமிகமிக வருகவே
நீர்வளமும்நிலவளமுங்குறைவிலா
நெறிவளமெய்வர்க்குந் தருகவே

ஸரயுநதியின்மகிமை வருசிவிருத்தம்.

பரவியநாட்டில்விரவினிற்பாந்த
சரயுவினியல்பைக்கரவிலாதுரைப்போம்

ஆ-தரு-இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

புவியில்மிகமகிமை பெற்றநதியில்நல்ல புண்யநதி ஸரயுவாம்.

அநுபல்லவி.

இரவுகுலத்தரசர்கள் அரசாட்சிசெய்துதரும்
ராஜ்யத்திலயோத்தியாயு நத்தினிற்பரவிய(புவியில்)

சரணங்கள்.

க. விசும்பிற்குலதரன்போல் வெளுத்துபரவிமேகம்
விரிவாங்கடலிற்சென்று விரும்பியமுதருந்தி
விமலன்விண்டுவைப்போல் மேனியெல்லாங்கறுத்து
விளைவிற்றிரும்பிச்சூர்யன் வெறும்பாலிமயமன்னான்
பசும்பொன்னிகர்மெய்நைந்து பரதவித்தாரொன்றெண்ணி
பஞ்சதீர்த்தாபிஷேகம் பண்ணிவைப்பதுபோலப்
பருவதத்திற்பொழிந்த மழையின்புனற்றிரண்டு
பகரும்தியாகிகள்போல பாரிலருவிபாய்ந்து
விசும்பிச்சரயுதனில் வேகமாகவேபாய்ந்து
விளங்குமிருகரையும் வெடிக்கவினைந்தோடையில்
விண்ணுமண்ணுள்ளோர்களும் வியந்மேதென்றெண்ண
வெற்றிமிகுந்தரசர் விளங்கும்கௌசலமன்ன
நுகம்பார்மலையின்மீது துலங்குபொருட்களெல்லாம்
தூறுட்னேயழித்துத் தொல்புவியிற்புரட்டத்
தோதகமாடும்விலை மார்க்கடையையொத்து
தூயபூவிற்பரவித் தொல்லுலகோரைக்காக்குந்

சோதியே தவசிகள்செய்யும்
நீதியேமகங்கள் விளக்கும்-அ
ராதியே நிஷ்டானுபூதியை, (புவியில்)

உ. நிலம்வைரம்வைடூரியம் — சித்திலங்கோமேதகஞ்செம
கோலந்திகழுந்துகிர்க் — கோமளம்பத்மராகம்
நீதிமிகுபுட்பராகம் — பச்சைமாணிக்கமுதல்
நிறைந்தவர்நிடுமாவ — ரத்னவிதமநேகஸ்
சாலநீரிற்பிறந்தசருவும் — ஜலசெந்துக்கள்
சன்னைசெய்யுமுயிர்கள் — சாட்டைவாலின்நிருக்கை
சடுதியிற்கொட்டுஞ்தேவி — மடலைவாளையுளுவை
சராளாஸர்ப்பமுதனா — சரிந்துவருமநேகம்
தாலம்ஏலம்லவங்கம் — தக்கோலந்தேவதாரம்
தாதகிவசவாசி — தாளிகர்ச்சூரங்கோஷ்டம்
தவளம்மல்லிகைமுல்லை — தாமரைமலர்கொன்றைத்
தருவுங்கொடியும்அந்தத் — தனும்பில்வருமநேகம்
ஞாலமீதினிற்றந்தி — யாளிபுலிகரடி
நாளிகேசரிநாகம் — ஞமலிஞாய்கலைமான்
ஞானமிகுமன்னப்புள் — ஞலவனுடன்மன்னிகம்
ஞாபகமிகுகுயில் — ஞாட்புக்களுமநேகம்

நாட்டமே — கரையோரத்திலைகள்
கூட்டமே — தேடும்யோகியர்களின்
தேட்டமே — ஆட்டபாட்டமே (புவியி

௩. அத்திருநதிக்கரை — யருகேயானகர்மாதர்
ஆனந்தஜலக்கிரீடை — ஆகமகிழ்ந்தாடுவார்
ஆத்மஞானிகள்கூடி — அருணையத்தின்முனே
ஆதித்தனன்புகூற — அன்புடனேகூடுவார்
முத்திருவழியிலும் — முப்பொருளுணர்ந்தோர்களு
முன்னவர்கள்கடமை — முடிக்கவந்தாடுவார்
மூவேழுதல்முறை — மூப்பர்கள்கதிசேரும்
முத்திவழியைநாடி — முனைந்துஸ்நானம்பாடுவார்
ஒத்திருந்தரசர்மக்கள் — பத்திபத்தியதாக
ஓதும்வேதாகமங்கள் — உரைவிதிகள்தேடுவார்
ஓங்குபுகழ்வேதியர் — யாவருமன்புடனே
ஒப்புறவாமொழிவி — லோபிக்கமதிகூடுவார்
இத்திருநகர்க்கிணை — இலகும்வைகுந்தமென்ன
இமையோருளமகிழ்ந்து — இயம்கையாய்க்கூத்தாடுவார்
இவ்விதமாம்சரயு — மகிமையெய்ந்துளாக்க
என்னலாகுமோஆதி — சேஷனொருவர்க்கல்லால்

ஈசனே — அயோத்திநகர்
வாஸனே — கவிவாணர்கள்
நேசனே — சத்யவிலாசனே (புவ

அயோத்தியா புரவர்ணனை புராணவிருத்தம்.

மகரதோரண வாயிலுங்காஞ்சியும
சிகரமாமதி லுஞ்செறிப்போசும்
சகரர்வான்புகழ் சாற்றுமயோத்திமா
நகரமேன்மை சிறிதுரைத்துவாம்.

ஈ-தரு-இ-ம-அடாணா-ஆதிதாளம்

பல்லவி.

மருத்துவக்தனின்மிகுத்த மாதவத்தோர்புகழும
மாநகரிதுதானே-அயோத்தி மாநகரிதுதானே-கலைவாணே,

அநுபல்லவி.

மிகுத்தபெருஞ்செல்வமும்-மேலாமேன்மைபடைக்கத்
தொகுத்தபுராணமங்க — ளுலங்குமுறைகளெல்லாம் (மரு)

சரணங்கள்.

௧. வேதவாக்கிய — வோசையும் — வேதியரோதி
விளங்குங்கலைக — ளோசையும்
போதஞ்செய்திடு — மோசையும் — வெகியோரோதும்
புனிதமந்திர — வோசையும்
கீதமுழக்க — வோசையும் — கின்னரர்கூடி
கொண்டும்பாடலி — னோசையும்
காதமீதெனு — மோசையும் — கன்னிகையர்கூடி
நடித்திடும் — பதவோசையும்
நீதிநெறி — யோசையும் — நிறைமங்களவோசையும்
காதிற்கேட்டிடும்நித்ய — கல்யாணவோசையும் (மரு)

௨. ஓமசாலைகள் — காணுமே — சோமயாகஞ்செய்
தண்ணுஞ்சாலைகள் — தோணுமே
வாமச்சாலைகள் — காணுமே — ராஜர்களின்
ஸங்கச்சாலைகள் — தோணுமே
ஹோமச்சாலைகள் — தோணுமே — பலகலைகளுற்
இசைக்குஞ்சாலைகள் — தோணுமே
காமச்சாலைகள் — காணுமே — கணக்கில்லாக்கண
நாட்சிசாலைகள் — தோணுமே
கோமகன்குணங்கலைக் — கொண்டாடிக்குதித்தவும்
கேமக்ஷிதெளிய — நின்றுடமயில்தாவும் (மரு)

௩. அத்திரு — நகரத்திலே — அதியுன்னத
மாசவகேக — முத்திலே

சித்திரப் பதுமைபோலே அமைத்திட்ட
அத்தமண்டப மீதிலே
நித்யதான தர்மத்திலே மிகுத்தமுறு
வற்றநீதி நெறியிலே
சத்ய நிதகனத்திலே நிறைந்தநவ
ரெத்நசிம் மாதனத்திலே
சித்திரமணித்தவிவன் முத்திரைலங்கிருந்தசெம்பொற்
சந்திரமுற்றவரிச் சந்திரமன்னனிருந்த (மகு)

அரசாட்சிகாண்டம்-முற்றிற்று

ஆக-விருத்தம்-எ-தரு-எ.

இரண்டாவது.

விவாககாண்டம்.

—※—

தபோதிகள்வருகிறவிருத்தம்.

பொருந்துநன்னெறிதப்பாக பூபனுமரிச்சந்திரன்றன்
திருந்தியசெங்கோலேந்தித் திறமுடனாளுநாளில்
அருந்தவத்தோர்கள்போற்றும் அமரர்கடொப்பதாக
கருந்தவத்தவரநேக ரயோத்திமாநகரடைந்தார்.

க-தரு-ழ-ம-மத்தியமாவதி-ஆதிதாளம்

பல்லவி.

யோகிகள்வந்தார் தவமிகுத்த யோகிகள்வந்தார்

அநுபல்லவி.

போகிமுகலோர்கூறும் புண்யநெறியினிரு
வாகிகளானபெரு வாழ்விற்சிறந்தஞான (யோ)

சரணங்கள்.

க. முப்புரிநூன்மார்பர்சிலர் தப்பிலாவாசகர்சிலர்
செப்பருந்தவத்தோர்சிலர் ஒப்பிலாக்குழையர்சிலர் (யோகி)
உ. வேதமோதுவோர்சிலர் இதம்பாடுவோர்சிலர்
நாதமுணர்ந்தோர்சிலர் பாதம்பணிந்தோர்சிலர் (யோகி)
ந. விபூதிதரித்தோர்சிலர் தொடுத்தசடையர்சிலர்
உடுத்தவுரியர்சிலர் எடுத்தகோலினர்சிலர் (யோகி)

குசலப்பிரசனை பொதுவிருத்தம்.

வந்தமாதவத்தோர்தம்மை வரமரிச்சந்த்ரனோக்கி
சிந்தைமிகக்களிப்படைந்து சேனையுடெதிர்கொண்டேகி

அந்தமாமுனிவர்பாதந் தனிமுடிமலரைத்தூவி
விந்தையாய்த்துதித்துப்போற்றிவிரகமுற்றுரைசெய்வானே

வசனம்.

அகோகேளும் தர்மபுத்திராதிகளே இந்தப்பிரகாரமாய்வந்தயோகிசுவரர்களைப்பார்த்து அவர்கள் வருகையையறிந்து எதிர்கொண்டழைத்துவந்து சுகாசனமளித்து அர்க்யபாத்யாசமனாதி ஷோடசஉபசாரங்களைப்பண்ணிக் குசலப்பிரச்னை பண்ணுகிறவிதங்காண்க.

உ-தரு-இ-ம-சாவேரி ஆதிதாளம்.

பல்லவி.

(வினு) வந்தகாரியஞ் சொல்லீரையா - மாதவர்களே வந்தகாரியஞ்

அநுபல்லவி.

எந்தன்பந்தமகல முந்தநாளில்வெகு
தொந்தம்போலவுங்கள சிந்தைமகிழ்ந்திவடம் (வந்த)

சரணங்கள்.

க. அறியாசனத்திருக்க லையா உங்கட்குரிய
மரியாதைசெய்யவல்லேல் லையா
சரியாசனத்திருக்க லையாமுனிவர்களே
பரியாசம்பண்ணவேண்டாமையா
பெரியோரையானறியே னையா எத்தனையென்றும்
பிரியாவரந்தாருங்க லையா
சுருதிமுறையறிந்த சோதிமுனிவர்களே
கருதியிங்கர்தனைக் கணடுகவிதிவடம் (வந்த)

இராசன் வசனம்.

சுவாமிமகத்துக்களேஎந்தனது பிறவித்துன்பமகல அநேககாலையாயிரமேனிதர்கள் போலேசந்தோஷமாய் இவ்விடத்துக்கு வந்தகாரியமென்ன நீங்களெல்லாரும் இந்தநேத்தியான நவரத்தின கசித்மான சிம்மாசனத்தின் மீதெழுந்தருளுங்கள் உங்களுக்குரிய மரியாதை செய்யும்படியான முறையறிந்தவனல்ல பரியாசம்பண்ணாதையுங்கள் உங்களைப்போலுள்ள மகத்துவமாக்களை என்னாலறிந்தவனல்ல என்னையென்றும் இனைபிரியாதிருங்கள் சுருதிஸ்மிருதிகளினியல்பறிந்த யோகீஸ்வரர்களே மனவம்போடு இந்தஅயோத்தியாபுரிக்கு வந்தகாரியமென்ன திருவருள்புரிய வேண்டும் முனிவர்களே,

விடை.

மன்னுவுன்மகிமையைவினவியேவந்தோம் - சத்தியரிச்சந்திர - மன்
உன்னிதமாய்வநாரு மிக்கெம்புவிதனில்
உன்னைப்போலரசர்கள் பின்னையொருவருண்டோ (மன்)

தேசதேசமாய்சுற்றிவந்தோம் உந்தனுடைய
நேசவிசுவாசம தறிந்தோம்
ஆசையெனுங்கடலிலாழ்ந்தோம் மனமகிழ்ந்துன்
வாசகரயோத்திவந்தோம்
மாதரும்மாரிக்கண்புகூர்ந்தோம் மனமதனில்
மாநிலாமணியென்றுனைத்தேர்ந்தோம்
கூடிடாச்சிலவார்த்தை பேசவெண்ணியேவிசு
வாசமுடனேவந்தோம் தாசனுதாசனுன (மல்)

முனிவர்வசனம்.

அரிச்சந்திரமகாராசனே உன்னுடையப்ரபாவங்களைக் கேழ்வியுற்றுஉனக்கிணை இந்த அன்பத்தாறுதேசத்திலும் இராசாக்களில்லையென்று மதித்துவந்தோம் உனக்கிணையான ராசாக்களாிருக்கிறார்கள் ஒவ்வொரு தேசமாய் சுற்றிவந்தோம் உன்மீதினுற்ற ஆசைவலையிலகப்பட்டு நீவாசமாயிருக்கிற அயோத்திக்குவந்தோம் மாதரும்மாரிதவறுமற் பெய்யும்படிக் கருள்தந்தோம் களங்கரகித னென்பதையுமறிந்துணர்ந்தோம் உன்றுவம்சாபி விருத்தியாகும்படியான சிலசேஷமசமாசாரங்களைக்குறித்துபேசவேண்டி மகாவிசுவாசத்துடனே இவடத்துக்குவந்தோம் தாசானுதாசனே.

௧, எந்தெந்தத்தேசங்கள் கண்டீர்கள் கண்டுமகிழ்ந்து
எந்தெந்தத்திசைதனிற்சென்றீர்கள்
எந்தெந்தத்தீர்த்த மாடினீர்கள்-ஆடியநீங்கள்
எந்தந்தலங்கள் சேவித்தீர்கள்
எந்தெந்தமகிமையைக் கேட்டீர்கள்கேட்டறிந்தோர்கள்
எந்தெந்தமருத்துவ மறிந்தீர்கள்
விந்தையாவையு மாதியந்தமாயுரைத்தால்
எந்தன் அன்பமகன்று சந்ததமுமிருப்பேன் (வந்)

இராசன்சொல்-வசனம்

எந்தெந்ததேசம் போய்வந்தீர்கள் அங்கே என்னென்னஅதிசயங்கள் கண்டீர்கள் எந்தந்ததீர்த்த மாடினீர்கள் எந்தெந்த ஸ்தலங்கள்சேவித்தீர்கள் எந்தந்த மகிமையைக் கேட்டீர்கள் எந்தெந்த மருத்துவமுணர்ந்தீர்கள் அந்தந்தஅதிசயமான விசித்திரங்களை கிருபைசெய்து புகன்றால் ஜென்மாந்திரங்களில் பண்ணின பாபவிமோசனமாய் க்ஷேமத்தைபடையுவேன் மகத்துக்களே.

௨, அதிகநாகரீகமாங் கண்ணோசி எனும்நன்னாட்டிற்
கதியளிக்கும்புண்யகண்டகி
நதியெனுமதிற் றீர்த்தமாடி நன்மையதாய்ப்
பதியாளும்மதியவனைநாடி

விதியாகச்செய்தபூசை கொண்டோம் அவன்பெண்சந்திர
மதியாளும்மனையாளாக வெண்கொண்டோம
துதிபெறுமன்று அவளிருபயிருப்பதி
மதிகளைவர்ணித்திட விதித்தவனுலுமாமோ (மல்)

௩ முனிவர்சொல்-வசனம்.

அகோகேளும் அரிச்சந்திரமகாராசனே நாங்களிந்தபூமண்டலமெங்கும்யாத்திரைபண்ணிவந்தோம் அப்படிவரும்போது மிகுந்தநாகரீகமாயிருக்கிற கண்ணோசிராச்சியத்திலிருக்கிற கண்டகிநதியில் ஸ்நானம்பண்ணி அந்தராஜாதிபதியான சந்திரதயமகாராஜனைடைக்குப்போயிருக்கையில் அவர்செய்த வேதவிதியான பூஜையானையுமடையும்போது அவருடையமகளான சந்திரமதியினது ரூபலாவண்யசவுந்தரியாதி வைபவங்களை யாராய்ந்துணர்ந்து உனக்கு அக்கன்னிகையைபாணிக்கிரகணம் பண்ணிவைக்க வெண்ணங்கொண்டு உன்சமுகத்துக்குவந்தோம் அந்தமகாபதிவிரதையை வர்ணிக்கவேண்டுமானால் அவளைப்படைத்தபிர்மாவுக்காலும் அருமையாகும்மகாராசனே.

விருத்தம்.

மிகுத்தவருந்தவத்தவரித்தன்மைகூற
மெய்த்தவன்ஆதவன்குலத்தோன்மிகமகிழ்ந்து
தொகுத்துரைத்தஉங்கள்மனத்தோற்றம்போலே
துடங்குகருமங்களெலாந்துரிசிற்கூடும்
பகுத்தறியாவடியேற்கப் பாவைக்குற்ற
பற்பலநற்குணவொழுக்கவடிவமெல்லாம்
வகுத்துரைக்கவிரும்பியடிதொழுதேனென்று
வணங்கினன் அவர்கள்மருங்கிணங்கினனே. (௧)

வசனம்.

இவ்விதமாய்ப்புகழ்ந்துகொண்டாடிய யோகீஸ்வரர்களைப் பாதபூசைபண்ணி உபசரித்து மதியமகாராசன்மகளுடைய வைபவங்களை அரிச்சந்திரமகாராசன் விவரமாய்க்கேட்பதுகாண்க.

௪ - தரு-இ-ம-கேதாரகவுளை-ஆதிதாளம்.

பல்லவி.

அருள்வாக்கிய மீதுங்களன்பே எனதுபாக்கியம்
ஐயாமிகவும் சிலாக்கியம்

அநுபல்லவி.

திருவாக்குக்கெதிர்வாக்கு தேடிச்சொல்வாருண்டோ
தெளிந்தமுனிவர்களே தெரிசனந்தந்தீர்களே (அருள்)

சரணங்கள்.

க. அந்தநாளிலெங்கள்முன்னோர் முயன்றுசெய்த்
அருந்தவமிது தானே
ஆணபிள்ளைபெண்வடிவா யவனியிலெனையீன்ற
தறிந்தோறும்நீங்கள் தானே
இந்தநாளிலுங்க ளெழிலுயர்வசனத்தால
எவர்க்குமதிபன் நானே
எட்டுமொணமெரியா ஏழைமதியேனெனை
ஏற்றிப்புகழ்ந்தீரோநான் எக்குறையுந்தீர்ந்தேனே (அருன்)

உ, திங்களொளிமுகமும் செங்கமலபாதமும்
தேவரீனாக்கள் போலே
திகழுஞ்சடைமுடியும் தெளிநீர்க்காவிபுடையும்
தெரிசித்தேனொருக் காலே
எங்கள்மூவேழுதலை முற்றையுங்குமொழிந்தேன்
இனியுங்களரு ளாலே
ஏர்வையான துரைக்கி லிப்போமனங்கொள்ளுவேன்
இகபரத்துள்ளார்ககொப்பர் தென்னிலதைத்தள்ளுவேன் (அ)

ங. கன்னியின்நல்லுருவும் குணமும்சவுந்தரியமும்
காணமனது கோறுதே
கருதும்நற்கற்பும்பொற்புங் காக்கும்தர்மசிந்தையின்
கருத்தறியவுட் சோறுதே
உன்னியகருமங்கட் கொபபவுரைப்பர்ளோவென்
றுள்ளமிக வயறுதே
உங்களாலேயிதெல்லா மழிந்தாலென்மனமுய்வேன்
உபசரிக்கவறியேன்உள்ளம்பாய்த் தொண்டுசெய்வேன் (அ)

விருத்தம.

உத்தமநீ துரைத்திடலும் நற்றவத்தோர்
உமைபாகன்வரம்படைத்தமதியேந்திரன்
பெத்தமகட்குத்தவிசேட்களயாவும்
பேதமகன்றிடக்கேளாய்பெம்மானேயென்
றத்தலத்திலமச்சர்முதலோர்கொண்டாட்
அகமகிழ்ந்தேயாதியந்தமாயுரைக்க
சித்தமகிழ்களிப்புற்று ரெவருமோர்பால்
சேர்ந்திட்டார்வள்ளலன் முன்சேர்ந்திட்டாரே (௩)

ச-தரு-இ-ம-௩ தநாமக்கிரிகைதிரிபுடைதாளம்.

பல்லவி.

அவனிதனிற்சந்திரமதிக்கிணை அரிவையரரரா அதிந்துரைட்கூறா

அநுபல்லவி.

தவனதித்திற்றுரோபதை தானிவட்கிடோ
தாரைமாதகலிகை தமக்கெனிற்சரோ
கவனமாயிவளவ தரித்ததுசேரு
கல்யாணபுருஷனு இருந்தாசாறு (அவனி)

சரணங்கள்.

க. செந்திருமகளோ புலோமிசைப்பெண்ணேவெனத்
தோனும் இவர்கட்கிணை
செப்பவெனிலிப்புவியிலொப்புவோரில்லாமல்மனப்நானும்
சுந்தரவனங்கள்வேத மந்திரமேகதிகணந்த
ரதியோ அவனைச்சொன்னால்
சொர்க்கத்திலில்வாழுந்தேவர்வர்க்கத்தோரி லிவற்குநற்கதியோ
கந்திருவமாதர்களு மிவள்கற்புக்கிணையோ
கதிதரும்பிசன்பாதம் பெறவொருதுணையோ
சிந்திக்கப்பாரின்னமுந்தன் மதிசனக்கிசைந்த
சித்திரவிசித்திரர்கள் எத்தனைகோடியுண்டிந்த (அவ)

உ. கார்முகிலெழுமிவள் கருங்குழல்தனக்கிணை
யாமோ கடலோரத்து
கரியதெள்ளரலச்சைவனத்தைஎனிலும்சொல்லரிபோமோ
ஆரிருக்கிறுரெனக் கிணையெனவாக்ரமித்
ததட்டும் மதியகுத்து
அருந்தவத்தோர்க்குமிவள்மீதிலாசைகொள்ள மனங்கிட்டும்
நேரிருக்குமோயிவள் கூர்விழிக்கெமன்வேல்
நெடியவஞ்சனஞ்சமும் நெறியொழிந்திடின்மேல்
கூரிருக்குமோகாமன் கணைக்கெனிற்சொல்லு
குதலைமென்மொழியாளைக் கொண்டாடப்புல்லு (அவனி)

௩, இந்திரன்கைச்சிலைதனைப் பழிக்கவெழுந்திவள்
புருவம் ஆகாஎன்சொலவோம
எழிலுயர்தபோலமோ யிசைந்தகண்ணுடியினுருவம்
சுந்தரத்திலதப்பூ வினையொத்தபூங்குமிழ்
நாசி வள்ளைப்புட்பத்தை
சுருக்கில்முனிந்துநகைத் திடித்தேயவள்காதின்வாசி
புந்திமகிழ்ந்தருந்தும் செழுங்கோவைக்கனியை
பூவையரணியும்செம் பவளத்தின்மணியை
சிந்தியமகரந்தந் தருமரவிந்தச்
செழுமலரெனத்த ரமுடையாளிந்த (அவனி)

௩. சித்திரத்தைச்செம்மாதரோ முத்தினைப்படிக்குமவள்
பற்கள் ஆரவமுதை
நேராகுந்தேனைக்கண்டமுப்பழத்திரும்மதுரச்சொற்கள்
முதல்பாகட்டுக்குவளைசந்திக்குஞ் சங்கினையொத்த
கழுத்து பிரமனன்று
முக்கணன்வரத்திருப் பவளத்துளிதனைச்செழுத்து
அத்தினத்தினிற்பிரமன் ஆலிலைமுப்படைத்து
அடிமுகடிதனைக்கிரு கைகளையுந்தடைத்து
அத்திமத்தகத்தைச்சக்கரவாளத்தைப்பொன்பொருப்பை
அதின்பின்படைத்தனன்தானிவள்முலைப்புறப்பை (அவ)
௪. வடத்தினைத்தனிரியன் வயிற்றினைக்கண்டுகட்ட
சேரும் ரோமத்தாரைகள்
வரியெறும்பைபக்காரெள்ளவாறுகள்செய்தேதொட்டுவிட்டசேரும்
தொடுத்தவைகளைத்துற்றும்நாரையின்கைக்களையெனும்
உந்தி தோள்களிரண்டும்
துலக்கும்வானையளாவி விளக்கும்மூங்கிலையொத்தபந்தி
தடக்கைகளிரண்டுஞ்செங் காந்தளின்மலரோ
தையலிடைகாணல்சொற் பனமென்பார்பிலரோ
துடைகள்செங்கதலியைத் துதிக்கையைப்பழிக்கும்
தோற்றும்பதங்களாமைமுதுகை நகுக்கொழிக்கும் (அவ)

இவைமேகங்களின்பெயர்.

சம்வர்த்தம் ஆவர்த்தம் புட்கலாவர்த்தம் சங்காரிதம் துரோணம் காம்முகி நீலவருணம் இவைமுறையே மணிநீர் பொன்பூமணகல்நீ.

பொது-வசனம்.

இந்தப்பிரகாரமாய் மாதவத்தோர்களால் சொல்லக்கேட்டஅரிச்சந்திரமகாராசன் மதியக்கிளையல்பெருகி காதல்மிகுத்து கனிந்துநி சந்திரமதியின்மீதுள்ள விரகதாபத்தினால் வெதும்புண்டு அந்தபோதனர்களை அடிபணிந்து சொல்லுகிறவிதங்காண்க,

இராசன்சொல் விருத்தம்.

அருந்தவத்தனைக்குமேலாமவ்வரிவையானாலே
பொருந்தமாலைசூட்டப்பூபாலன்மனதிறந்து
வருந்தியிங்கேபோய் வன்மைகளீந்தவந்தால்
இருந்தனமகிழ்ச்சியேமன்மை எங்காளுந்தாங்கட்காமே (௬)

வசனம்.

அகோவாருங்கள் தபோதனர்களே அருந்ததியேசித்தும் அதிகமான பதிவிரதாதர்மத்தை யுடைத்தான அந்த சந்திரமதியை

எனக்கே மாலையிடும்படியான ஏதுகரஞ்செய்யும்பொருட்டு நீங்களே அந்தமதிதயமகாராஜனிடத்திற்குப்போய் வருவதையமுனோராவாறித்துக்கொண்டுவந்தாலன்புமனோவிஷ்டத்தைத்தகைவேற்றினால் அதினாலுண்டாகப்பட்ட சகலநந்திராதாதிமகிமையும் புகழ்ச்சியுமுலகளுக்குக்கிடைக்கும் மகத்துக்களே.

முனிவர்கள் சொல்-விருத்தம்.

முல்லையிளநகையாய்மன்ற முகைமலர்த்தாரைத்தவுந்தன்
சொல்லையுமதிதயன்பாற சுருகினில்மொழிந்துவார்தான்
தொல்லையைவிட்டுச்சந்திர சூரியருள்ளமட்டும்
எல்லையில்லாதுசித்திக் கிடக்கேடிவருகுவோமே. (௫)

வசனம்.

அகோவாரும் அரிச்சந்திரமகாராஜனே-நீமகாசந்தோஷத்தோடேசொன்ன சொற்களை மதிதயமகாராஜனிடத்தில் அதிசீக்கிரத்திலறிவித்து உன்னுடைய விரகதாபத்தைத்தீர்த்து சந்திராதித்தருள்ளமட்டுக்கும் நிலைபெறச்சித்திக் கிடக்கேடிவருவோம் அரிச்சந்திரமகாராஜனே,

பொதுவிருத்தம்.

சந்திரமதிதன்பாரந் தனங்களுஞ்சைலதாமஞ்
சுந்திரமாரமின்னும்பூச் சூட்டுவோமென்கவலைத்தி
மந்திரமுனிவரெல்லா மணம்பமகன்றுதேவ
இந்திரபுரியிதென்று மெழினகர்கடக்கின்றாரே. (௭)

வசனம்.

அகோகேளுந் தர்மபுத்திரர்களே இந்தப்பிரகாரமாய் சந்திரமதியையே உனக்குக் கல்யாணம்பண்ணிவைக்கிறோமென்று எழுந்தருளியமுனிவரர்கள் யாவரும் இந்திரநகருக்கிணையான அயோத்தியாபுரியைவிட்டுப் புறப்பட்டு கன்னோசிமாநகருக்கு வருவதுகாண்க.

௫-தரு இ-ம்-ஆநந்தபைரவி ஆதிதாளம்.

பல்லவி.

மன்னன்வாசகங்கேட்ட-மாமுனிவர்கன்னோசி
மாநகர்தனைத்தொடர்ந்தார்-வழிநடந்தார்

அநுபல்லவி.

சொன்னமொழிதவறாச் சுகுணன்சத்யஅரிச்சந்திரன்
தன்னைச்சந்திரமதிக்குத்-தகவாய்க்கலியாணஞ்செய்ய (மன்)

சரணங்கள்.

௧. வாவிகூபதடாகம் வளிபருகைபோலடைகள்
செவிக்குத்தேவஸ்தலங்கள் நிறைந்தவழிநடந்து (மன்
னி)

௨. குன்றாசன்மேதிகள் — குதிக்குமந்திகளும்
செவ்வகரிசனந் — செய்யுமவேள்கடந்து (மன்)
௩. நந்தனவனங்களும் — நாகநன்தசக்களும்
அந்தமானபூஞ்சோலை — யடர்ந்தகாவுங்கடந்து (மன்)

பொதுவிருத்தம்,

முனிவர்கள்போனபின்னர் முன்னவன்கொலுவைநீங்கி
இனியசாப்புசிப்புமுண்டு எழிற்றிருப்பள்ளிசென்று
கனிவுளமாகன்றங்கைக் கன்னைகளாலெய்தல்கண்டு
தனியனுயுள்ளத்தோடுந் தானிதுவுரைத்திட்டானே. (௮)

வசனம்

இவ்விதமாய்ப்போனதவத்தவர் நெடுந்தூரம்நடந்து கன்னோசிகா டையும்போது இங்கே அரிச்சந்திரமகாராஜன் விரகதாபத்தினல் வெதும்பி தன்னுடைய கொலுச்சமுகத்திலிருந்து அரண்மனைக்குப் போய் உண்டுதாம்பூலந்தரித்துப் பள்ளியறையிற்சேர்ந்து படுத்திருக் கும்போது தன்னிலேதானே சொல்லிக்கொள்வதுகாண்க.

எ-தரு-இ-ம்-தோடி-திரிபுடைதாளம்

பல்லவி,

உள்ளத்தோவேரைத்தானே - உருவிலிக்கணை - உடம்பெங்குந்தரித்தா (னே

அநுபல்லவி.

கிள்ளைமீதேறிமாரன் — வள்ளலரிச்சந்த்ரன்றன்
பள்ளியறைசேர்ந்தபின் — சல்லைசெய்தவையாவும் (உள்)

சரணங்கள்.

௧, மயங்கிவருந்திமனம் — வாடிமன்மதனம்பாற
தியங்கிவளருங்காமந் — திமிறுஞ்செயலற்றுத்
தயங்கித்திராதமோக — தாகத்தாலசனிசோர்ந்து
வுயங்கியயங்கிமெத்த — வுருகியுருகித்தானே (உள்)

௨. சந்திரதயனன்பால் — வந்தமாமுனிவரோடு
வந்தவன்மாயமாகி — யெந்தனுளத்தைவவ்வி
தொந்தம்போலுட்புகுந்து — தோதகஞ்செய்திருந்து
வந்தமாமுனிவர்பின் — னடந்ததுயேனென்று (உள்)

௩. மாதுயாடசயென்னையும் — மாதுசிரோமணி
வேறுமிப்படியனேக — விதஞ்செய்தயாவுஞ்சொல்லி
ஆறுதலெவரோடென் — றயர்ந்துமிகப்பயந்து
ஏதுமோகுறையுமோ — வெஞ்சமனந்தளர்ந்து (உள்)

பொதுவிருத்தம்.

மானவனுமாச்சந்திரமன்னவனிவ்வண்ணமுற
மாலேதமீச்சாற்றவென்றுமகிழ்ந்தெழுந்த
ஞானமிகுயோகீசர்கள்தானடந்தவழிகடந்து
ஞாலமுமயர்கன்னோசிநகரடைந்தார்
மாகரிற்றேர்கரிசெம்மாசிகைச்சேனையொடு
மன்னமன்னரடிவணங்கமகிமைகொண்ட
வானவர்கள்வாழ்த்திடவும்வையகத்தோர்போற்றிடவும்
வண்மையுளகொலுவில்மதிதயனும்வந்தான் (௯)

வசனம்.

இவ்விதமாயரிச்சந்திரமகாராசன்காமன்கணையால் உள்ளமுருகிமெ தியழிந்து மனந்தளர்ந்து ஏங்கிநெடுங்கி நெறிதயங்கி தனக்குள்தானேபுல ம்பிசந்திரமதியினுடைய ரூபலாவண்ணியசவுந்தர்யாதிகளை நினைந்து ருகினன், யோகீஸ்வரர்களும் நெடுந்தூரம் நடந்துகன்னோசிமாநக டைந்தார்கள். இப்படியாக வரக்கண்டமதிதயமகாராஜன்கொலுவி ல்வந்திருந்துராஜரீகஞ்செலுத்துவதுகாண்க.

அ-தரு-இ-ம்-ஆரபி-ஆதிதாளம்,

பல்லவி.

மதிதயனெனமிகவதிகமகிமைபெற்றமன்னவன்கொலுவில்வந்தான்.

அநுபல்லவி.

பதிதவாவனனை — பாநுகுலேசனெனும்
பாலனரிச்சந்திரற்குப் — பாணிக்கிரகணம்பண்ண (மதி)

சரணங்கள்.

௧ மேருகிரியைவெளிச்செய்ததெனவுமுயர் — மேனிலேமணிமாட்
வரிதியிதுவெனவந்துகப்பணங்கட்டி — வருமரசர்கொண்டாடக்
காருங்கடல்போலக் — கதிர்மணிமுரசாடத்
தேருமயானையும்பரித் — திரள்களுநடமாட (மதி)
௨, செங்கதிரொளியெனப்புங்கவன்சிரமீது — தங்குமகுடமின்ன
செங்கரமிரண்டினும்வங்கிகடகமுந் — தோள்வளைகள்சிறந்துதுன்ன
செங்கமலபதத்திற் — றங்கப்பிரகாசமென்ன
அங்கமுழுதுந்நிறைந் — தொங்கனுமொளிபன்ன (மதி)
௩, செம்பொற்குடம்போற்கொங்கை சிறந்திலகுமாதர்கள்- செழுங்க (வரிகளவீச
கும்பற்கும்பலாய்மந்திரிப்ரதானிதானுபதியர்கொண்டாடி போற்றிப் (பேச
அம்புவிகாமறையோர் முனிவர்வாழ்த்தும்விலாச
ஸம்ப்ரவமாகச்சிம்மா — ஸனந்தின்மீதுவுல்லாச (மதி)

பொதுவசனம்.

இவ்விதமாய்கொலுவிருக்கும்மதிதயமகாராஜன் - சபைக்குவந்ததபோதனர்களின்பாதிவணங்கி பதம்பணிந்து உபசரித்துசிலவர்த்தமானங்களை இராஜன்வினவுதல்காண்க.

மதிதயராஜன்வினவுதல்-விருத்தம்.

வானநீர்பொழிந்துமூத்தமணிகொழித்தருவிபாய்ந்த
கானநீர்பெருகுந்தெய்வக்கண்டகியென்னுந்தீர்த்தத்
தானநீராடியெந்தன் றலைக்கடிமுடிகள்சூட்டிப்
போனநீருடனேமீண்டபுதுமையைப்புகலுவீரே. (௰)

ஆகோவாருங்களையா சுவாமி தபோதனர்களே-நீங்களெல்லாருங்கண்டகிநதியில்தீர்த்தமாடி எனக்குத்தெரிசனங் கொடுத்துப்போய்வருகிறோமென்று விடைபெற்றுக்கொண்டுசென்று மறுபடியும் உடனே வந்தகாரணம் திருவுளம்பற்ற வேணுமையா சுவாமி.

மாமுனிவர்நன்சொல்-விருத்தம்.

அரசனேபுகலக்கேளாயவனியிலயோத்தியாளுங்
குரிசிலரிச்சந்திரன்றன் கொலுசபையதனிற்சென்று
பரிசரித்துன்மகட்குப்பதியவனெனக்குறித்தோம்
அரசரிலனேகர்தம்மு ளவனலதில்லைத்தானே. (௰௧)

வசனம்.

ஆகோகேளும் மதிதயமகாராஜனே உமமுடைய கொலுச்சபையைவிட்டு அயோத்தியாபுரியைநோக்கி நடந்தோம் அங்கே அரிச்சந்திரமகாராஜனைக்கண்டு அவன்செய்த அத்யபாத்தியாதி ஷோடசோபசாரங்களையும் மனக்களிப்போடேகைக்கொண்டோம அவனிருக்கிறசிருஷ்டி ஆசாரவிவகாரங்களையும் ரூபலாவண்யாதி சுணதிசயங்களையுமறிந்தோம் மதில்மிகுந்தஆனந்தபரவசமாகினோம் இந்தலோகத்திலேஅவனைப்போலேசிலனையும் குணக்யனனவனையும் நாங்கள்எந்தேசத்திலுங்கண்டதில்லை ஆகையால் அவனுக்கு உன்னுடையபுத்திரியாகியசௌபாக்கியவதிசந்திரமதியைவிவாகஞ்செய்துகொடுத்துசந்தோஷிக்கவேணுமென்கிற எண்ணமுற்றுமறுபடியும்வந்தோம் மகாராஜனே.

மதிதயமகாராசன் முனிவர்களுக்குச்சொல் - விருத்தம்.

ஐபனலமைந்தவாரி லனுவேனுந்தவறிடாது
தெய்வராசியங்காதன்னைத் தெரிந்தறிந்துரைக்கவல்லோர்
தையலென்மகட்குக்கேள்வர் தரணியோரியவரேனுந்
துய்யதோர்நீகைகொந்தன்தொல்சபைக்கழைத்துவாரீர். (௰௨)

வசனம்,

ஆகோகேளும்முனிவர்களே, பிரமாவினாலே சிருஷ்டிக்கப்பட்டபிரமாணங்களிலனுப்பிரமாணமாவது பிசகுவதாகு, எமக்குமுன்னோலேசுவரனால் கொடுத்திருக்கப்பட்டதிருவருட்படிக்கு எவர்களினிமையாய்ந்தறிந்து இயல்புடன்சொல்வார்களோ அவர்களே எனதுசவுந்தர்யவதியாகிய சந்திரமதிக்குப்பிராணநாயகராவார்கள் ஆகையினால்யாவராகிலும் பூலோகத்திலேயுள்ளவர்களுடைய மனதுக்கிசைந்தவர்களையழைத்துக்கொண்டு அதிசீக்கிரத்தில வாருங்களையாசுவாமிகளே.

பொது-விருத்தம்.

மாதவர்கள்சத்யரிச்சந்த்ரனையழைத்துவர
மகிழ்ச்சியொடுசென்றபோது
மதிதயனும்மகளினதுசுயம்வரமேயோரேழுநாள்
மத்தியிலிருக்குதென்று
தூதுவர்கள்கையிற்கலியாணவோலைவிடுத்து
தொல்புவியுள்வேந்தர்க்கெலாம்
அரிசிலறிவித்துவர வெள்ளசுபமங்களம்
சொல்லியாக்ஞாபித்திடும்
போதவர்களன்பத்தாறுதேசத்திறைவர்
புந்தியில்மகிழ்ந்துபொங்க
பொற்புடையகல்யாணஓலைகொடுத்தப்புறம்
புகழுமங்களசோபனம்
ஆதரவதாகமதிதயன்மகட்கென்னவே
அதிசயித்தாசரொவரும்
ஆனைசேனைகளுடன்கன்னோசிநாடாளன்
அரண்மனையில்வந்தமர்ந்தார்

வசனம்.

இந்தப்ரகாரமாய் வந்த யோகீசுரர்கள் அரிச்சந்திரமகாராஜனையழைத்துவரப்போனபோது மதிதயமகாராசன் அன்பத்தாறு தேசத்துஇராசாக்களுங்கல்யாணஓலையனுப்பிஇன்னம் ஏழுநாள் முகூர்த்தமிருக்குதென்று அறிவித்தசேரது அவரவர்களறிந்து ஆனைசேனைசைன்யங்களோடுகன்னோசிநாட்டை நோக்கிப்புறப்பட்டுவந்து அரண்மனைக்குள்வருவதுகாணக.

தேசாதிபதிகள்வருதல்.

௬-தரு-இ-ம் கௌளிபந்து-அடதாளம்.

பல்லவி.

அஷ்டதிசையாளுமரசரெவர் ரும் -ஆசைமிகுத்துவந்தார்

அநுபல்லவி.

சிஷ்டபரிபாலனஞ் செய்யுஞ்சந்திரதமையன்
இஷ்டமாயச்சுயம்வர மியற்றுஞ்சபைதனில் (அ)

சரணங்கள்-

க, சிங்களர் கேரளர் சீனர்களுடகர்
சிந்தர் குலிங்கர் சூரசேனர்
கொங்கணர் தெங்கணர் நேபாளர்கூச்சரர்
கோயர் மகதர். குருதர்கையிடர் (அ)

உ, காந்தாரர் காஸ்மீரர் காம்போஜர்நேப்பாளர்
கலிங்கர்வங்களரோட்டர் காசர்
ஆந்த்ராயுகாந்தரர் யவனரவந்தியர்
அருணர்பிலாடர் மராடர்அங்கர்வங்கர் (அ)

ங, பல்லவர்சாலவர் பாஞ்சாலர்திராவிடர்
பாண்டியர் விதர்ப்பர் பப்பரர்சேரர்
கொல்லர் துளுவர் குடகர்மச்சர்விராடர்
கோசலர்செளராஷ்டரர் கொங்கர்குருகர் (அ)

பொதுவிருத்தம்.

இன்னவாறெழிற்கன்னமாபுரிதனையடைந்த
மன்னமன்னவாயாவருமதிதயான்விடுத்த
வன்னமாமணிமேடையில்வந்தமர்ந்திருந்தார்
சொன்னமாதவரயோத்தியைச்சுகத்துடனடைந்தார் (௰ச)

வசனம்.

அகோகேளும்தருமபுத்திரர்களே- இந்தப்பிரகாரமாகவந்தஅன் பத்தாறுதேசத்தரசர்களுஞ்சந்திரதயன்பட்டணத்தில்வந்து அவரவர் களுக்குவிடுத்தவீடுதியிலமர்ந்தார்கள் முன்வந்திருந்தமுனிவர்கள்யா வரும்அயோத்தியாபுரியைச்சேர்ந்தபிற்பாடு நடக்கிரவிதங்காண்க.

இதுவுமது

வந்தமாதவத்தோர்நற்றுளிவணக்கியேஇரிச்சந்துமைந்தன்
அந்தமாய்மதிதயன்பாலடைவுடன்சென்றுவந்த
விசனையாம்வாத்தமானவிவரங்கள்சொல்கவென்ன
புந்தியிலுவகைகொண்டுபுனிதர்கள்புகலுவாரே. (௰டு)

வசனம்.

அகோகேளுஞ்சபையோர்களே-இவ்விதமாய்வந்த மாதவமுனி வர்களைவணங்கிய அரிச்சந்திரமகாராஜனானவன்மதிதயமகாராசன் ச பைக்குப்போய்விவாகசமாசாரங்கள் விசாரித்ததை விபரமாகச்சொ ல்லவேண்டுமென்று வேண்டும்போது மாதவமுனிவர்கள் சொல்லுகி றவிதங்காண்க.

செஞ்சுருட்டி ராகம் சாபுதாளம்.

பல்லவி.

சேதிகேட்டகமகிழ்வாய்- ராஜகுமாரா கேள் சேதிகேட்டகமகிழ்வாய்

அநுபல்லவி.

சோதிகுலத்துதித்த சுந்தரா அரிச்சந்திர
நீதியதாயபிரமன் நெஞ்சினினினைந்த (சேதி)

சரணங்கள்.

க, அதிகுணவானெனும் மதிதயனுமொரு
விதிமதியதுவின விபோகித்தெடுத்தசேதி (சேதி)
உ, சந்திரமதியெனும் சுந்தரவதிக்குநீ
மந்திரவிதிமாலை தந்திடவிசைந்தாய் (சேதி)
ங, முன்னமுன்னமுந்தவ பின்னதென்றறிதலை
மன்னவருணைநி மணிகளுமவராய (சேதி)
ச, மங்களமாதய பூமங்கமுஞ்சத
ரங்கதனயநேர டங்குறுவினைசலவாய் (சேதி)

மாதவமுனிவர்கள்சொல்-வசனம்.

அகோவாரும் அரிச்சந்திரமகாராஜனே உம்முடையமனதில் நினை த்தபடியே பிரமஸங்கற்பமுமிருந்தது மதிதயமகாராஜனும் நாங்க ள்சொன்னவர்த்தமானங்களை யங்கீகரித்து மந்திரமுறைதவறாமல் சந் திரமதியைப் பாணிக்கிரகணம்பணணிக்கொண்டு சீக்கிரமாய்வருவீர் உம்முடையசதுரங்கதளங்களுடனே கல்யாணஞ்செய்துக்கொண்டுவ ரலாம் வாரும்மகாராஜனே.

பொதுவிருத்தம்.

உத்தமமுனிவரிவ்வா றுரைத்திடவயோத்தியாளும்
சத்யரிச்சந்திராஜன் சதுரங்கதளத்தினோடு
முத்தியைச்சேர்ந்தபோற்சேனை முழுவதுங்கூட்டிக்கொண்டு
வெத்தியின்மிகுகண்டுனி வேந்தனைக்காணவாரார்.

வசனம்,

அகோகேளும் தர்மபுத்திரர்களே இவ்விதமாகக்கேட்ட அரிச்சந் திரமகாராஜனானவன்தன்னுடையசதுரங்கதளங்களுடனேகண்டுனி கடாளப்பட்ட மதிதயமகாராஜன் சபையைநாடிவருவதுகாண்க

பல்லவி,

மகாராஜன்அரிச்சந்திரமகாராஜன்மதிதயமகாராஜன்சபைக்குவாரார்,

அநுபல்லவி.

மிகராஜர்போற்றவர ஜெகராஜனுந்திரிசங்கு
சுகராஜர்வாழ்த்திய மகராஜனற்தவத்தின் (மக)

சரணங்கள்.

௧, சந்திரவிம்பநிகர்முகமாதர்கள
  சாந்துபனிநீர்கலந்து — தெளிக்க-வேத
மந்திரமுறைதவறுதமாமுனிவர்கள்
  மங்களஞ்சொல்லிமனங் — களிக்க மேலே
அந்திரத்தமரர்களனைவருமனங்களித்
  தபயாஸ்தமரசனுக் — களிக்க-பு
ரந்தரனைக்கண்டசம்பரன்பேரலேவேமா
  ரன்மன்னவனானத்தி — ஜொலிக்க(மகாரா)

௨, முத்துப்பவழமாவரத்னங்கள்கலந்தநூ
  லாத்திகவாசினிகள் — சுத்த-அங்கே
சப்தமேகமும்மேகோபித்துகொச்சித்தல்போலச்
  சகலவாத்யகோஷமும — நத்த-வங்கும்
மெத்தப்பெருஞ்செல்வம்பேற்றகெடிமன்னர்
  மெத்தகப்பணங்கட்டி — வைத்த-புகள்
பெறறவெற்றிவீரர்கள் பத்தியதாய்வரப்ர
  ஜிதலாளென்செயபெத்த — வரிச்சந்திர(மகாரா)

௩, ஆனைகுதிரைசேனைகளுமவ்
  கணியணியாய்நின்று — கொண்டாட-உயர்
வானையளாவும்நிசான்மகரதோரண
  லாலவட்டச்சுருட்டிக — ளசைந்தாட-பேசுந்
தேனைப்பாலைநிகர்ப்பொழியும்மொழிகள்பேசுந்
  தெரிவையர்தோடிபாடி — யாட-தேவர்
தேனைநிகர்த்தகுணவானைச்சத்தியவானை
  மானைப்பழித்தமடமான்சந்திரமதிதேட — (மகாரா)

பொதுவிருத்தம்.

சொர்க்கரிற்றவருமன்னன் சுகுணனுந்தனதுசேனை
வற்கதகூடெழுந்தடர்ந்தவனமதில்வரும்போது
மற்கடமதின்மேற்றுலை மயிற்குயிற்கூவுந்தேவ
துற்கையின்கோயில்கண்டு தொழுதெழுந்திறைஞ்சலுற்றார்

வசனம்,

இந்தப்பிரகாரமாய் கல்யாணத்துக்குப்புறப்பட்ட அரிச்சந்திரம காராஜனவர் சதுரங்க தளங்களுடனே யெழுந்து நெடுந்தூரங்கடந்து அடர்ந்தவனமத்தியில் வரும்போது அங்கிருந்ததுற்காதேவியின் கோயிலைக்கண்டு சிவிகையினின்றுமிறங்கி அம்மனைவணங்குதல்காண்க,

௰௨-தரு-இ-ம்-கெண்டா-ஆதிதாளம்

பல்லவி.

துர்க்காவதிதேவித்தாயே-எனதுபக்கத்- துணையாய்நீவந்துநித்தாயே

அநுபல்லவி.

பொற்கழல்களபணிந்து — போற்றிசெய்யும்பாற்கலன்
வற்கத்தவர்களிக்க — வரப்ரசாதமளிக்கும்(துர்)

சரணங்கள்.

௧. சமபுவாகனமேறியே — அலகைக்கொடி
சாற்றியிசனை மீறியே
தெம்புபடைத்தகுலி — தேவியெனத்தேறியே
கும்புகும்பாய்க்கூளிகள் — கூடிவிருதுகூறியே(துர்)
௨. அன்னைபிதாகுருதெய்வம்நீயே — எவ்வுயிர்கட்கும்
ஆதாரபூதமும் நீயே
உன்னைப்பணிந்தோர்நீரோழுலகாளும் — வகைசெய்வாயே
என்னையிடேற்றவுந்த — னிதையமகிழ்ந்துய்வாயே(துர்)
௩. எந்தன்கவலையைத் தீர்ப்பாய் — எனக்கெந்நாளும்
உந்தன்பரந்தந்து காப்பாய்
சுந்தரிசூலிதேவி — யந்தரியம்பனத்தி
செந்தாமரைப்பதத்தி — செய்யசக்ராயுதத்தி(துர்)

பொது-விருத்தம்.

சிந்தனைசெய்துவந்த சீருளவயோத்தியாளன்
சந்தனம்புட்பங்கூறை சகலவாபரணங்கொண்டு
எந்தனைப்பாதுகாப்பா யென்னவேயிறைஞ்சியேற்றி
வந்தனஞ்செயதுபோற்ற வனதுர்க்கைவருகின்றாளே — (௰அ)

வசனம்.

இந்தப்பிரகாரமாய் கந்தபுஷ்பஅக்ஷதாதி சகலபரிமள சுகந்தவஸ்திராபரணங்களோடு துர்க்காதேவியைப் பூசித்து மனப்பூர்வகமாய்த்தோத்திரஞ்செய்யும்போதுஅம்மன்பிரத்யக்ஷமாய் சுயரூபத்தோடு வருகிறவிதங்காண்க

௰௩-தரு-இ-ம்-கௌளிபந்து-சாபுதாளம்.

பல்லவி.

இனகுலத்தினன்மிகக்கனவானரிச்சந்திரன்முன்
வனதுர்க்கைவந்தாளே

அநுபல்லவி.

அனுகூலசாதுரை — ஜனபரிபாலி
அதியோகசாவித்ரி — சூலஹஸ்தகபாலி(இன)

சரணங்கள்.

க. ஒருக்காலும்விபுதர்கண் டொருக்காததிரிபுர
வருக்காதிகளீசன் வருத்தும்வகைதோணுமல்
பெருக்கநகைத்தெரித்த பெருந்தீயும்
ஒருவராலும்வெல்லொண்ணு துருகும்வகையெய்திடு
உருவலியெனும்பொல்லா வுளவறிகளவன்ந்த,
திருநுதற்கணுளிசன் றீய்த்ததீயும்
பெருக்கமாயலைவீசி ப்ரளயம்போலப்புனலை
முருக்கமாகத்தெறிக்க முனைகின்றகடல்நடு
விருக்கும்வடைவையினு லெழுந்ததீயும்
ஒருக்காலேயெழுந்தோ ரூலகும்பரித்தாற்போல்
தரிக்குஜெஜ்தரித்த தழிங்கணத்தோமென (இனகு)

உ. ஒருகைதனிற்பட்டைய மொருகைதனிற்சொட்டையும்
ஒருகைதனிற்பத்திர மொருகைதனில்மழுவும்
இருகைதனிற்சக்கர மெடுத்திலங்க
ஒருகைதனில்வச்சிர மொருகைதனிற்கரகம்
ஒருகைதனிற்பேய்க்கொடி யுடன்வரவெவர்களும்
ஒருக்காதகனற்கொழுந் தெரிந்திலங்க
பெருகுங்காதினேலைகள் பிணைத்தசரப்பணிகள்
மருவுமஸ்தகடக மணித்தோள்வளைச்சூடகம்
பருத்தபதங்களில்நூ புரமிலங்க
பெருத்தபாடகந்தண்டை பின்னற்கொலுசுபூண்டு
தரிக்குஜெஜ்தரித்த தழிங்கணத்தோமென (இனகு)

௩. ஆடுஞ்சிலபூதங்கள் பாடுங்கெவுளிபந்து
போடுஞ்செழுங்கவரி கூடியிருபுறமும்
ஓடுமலர்களைக்கொண் டுளமகிழ்ந்து
சூடுந்திருப்பதத்தை நாடுந்துதிசெய்துகொண்
டாடுமஞ்சலிசெய்து தேடுமிடாகினிகள்
கூடும்விதவிதமாய்க் கோடாகோடி
வாடும்நரபலிகொடுத் தாடுமெக்களித்துக்கூத்
தாடுமேவலாற்சில சாடும்வாயல்முகப்பிற்
போடுங்காவலில்மிகப் புகழ்ந்துபேசி
முடுகுதுந்துமிபேரி முழங்குமூன்றுலோகமும்
மூடுகுதப்புகள்திடு முதிடெனமுழங்க(இனகு)

வசனம்.

இவ்விதமாக பிரத்தியட்சமாய் எதிர்கொண்டுவந்த தூர்க்காதே

வியையும் எதிரேயிருந்த தேரையும் அரிச்சந்திர மகாராஜன்பார்க்கு ங்காலத்தில் சம்பவிப்பதுகாண்க,

புராண-விருத்தம்.

கற்றேரைவிட்டிறங்கி நாயகியைத்தொழுதிறைஞ்சி நண்ணிராஜ ன், முற்றேரைநோக்குதலும் முடிவேந்தன்கருணைவிழி முனைகடாக்க த்,கற்றேருங்கற்பரியுங் கற்சிலையுங்கற்கணையுங் கன்னிமுன்னே, பொ ற்றேரும்பொற்பரியும் பொற்சிலையும் பொற்கணையும் பொலிந்ததா மால்

வசனம்.

இப்படியாக பரதேவதையையும் சன்னிதானத்துக்கு நேரேயிரு ந்த கல்லினுலுள்ள தேரையும் குதிரையையும், வில்லையும். கணையை யும் பார்த்தமாத்திரத்தில் முன்னுருவமாறிபொற்றேராயும் பொற்கு திரையாயும் பொன்வில்லாயும் பொற்கணையாயுமானதுகண்டு அதிச யித்து மதிபிரமணமடைந்து நின்ற அரிச்சந்திரமகாராஜன் முன்னு ம்பின்னும்பார்த்து யாதொன்றுந் தோற்றும விதுசொல்லும்போது நடப்பதுகாண்க.

புராண-விருத்தங்.

முன்னுவிற்கல்லானமுடித்தேரும்வாம்பரியும்மூறிவில்லும்
பொன்னுகக்கண்டிறைவன் புந்திமகிழ்ந்ததிசயித்துப்புளகமெய்தி
என்னுகவந்ததிதுவெனக்கருதிமவ்வளவிலிருண்டமேனி
பொன்னுருங்களபமுலைப் புரிசடையாள் மணிவாயற் புறத்துவந்தாள்

வசனம்.

இவ்விதமாய் கல்லாயிருந்ததெல்லாம் பொன்னுகக்காரணமென் னவென்று அதிசயித்து மதிமறந்து புளகடைந்து எவ்விதமாயுண்டா ச்சுதென்று ஆலோசித்துக்கொண்டிருக்குமளவில் தூர்க்காவதிதேவி யானவள் கோபுரவாயிலில்வந்து நின்றதுகண்டு அரிச்சந்திரமகாராஜ ன் தோத்திரஞ்செய்வதுகாண்க.

இராஜன்சொல்-தேவாரம்.

முச்சுடருதயம்போலென் முன்வந்ததாயேபோற்றி
அச்சுதன்றன்பினுற்ற வமலியேபோற்றிபோற்றி
நச்சுமிழரவாபரணன் நகைப்புடனடமுகந்து
மெச்சுதற்கரிதாமுந்தன் மெய்ப்பதம்போற்றிபோற்றி (உச)

அரிச்சந்திரமகாராஜன்-அம்மனைவினவுதல்விருத்தம்.

பொற்குலைப்போற்றவந்தபோதுவுந்தன்சன்னதியிற்
புகழுமொருபெருமலைபோற்பொலிந்துநின்ற
கற்றேரைக்கற்பரியைக்கற்சிலையைக்கற்கணையைக்
கண்டவுருமாறிபெருங்காட்சியாகப்

பொற்றேராம்பொற்பரியாய்பொற்சிலையும் பொற்கணையாய்ப்
பொற்புமிகத்தோன்றமிந்தப்புதுமைதன்னை
நற்றுளிற்றெரண்டுபடுமநாயேனுமுணர்ந்தறிய
நன்மனத்தோய்களங்கமறவிளுவாயே (௨௨)

வசனம்.

அகோவாரும்மா லோகமாதாவே உமது பிரகாசமாய் மின்ங் கநின்ற வரமிகுத்த பாதாரவிந்தத்தை தெரிசனஞ்செய்து தோத்திரஞ் செய்ய யான்வரும்போது உம்முடைய திருவாலயத்து முகப்பின் னின்ற சற்றேரினையும் சற்குதிரையினையும் கல்வில்லினையும் கற்கணையினையும் காணும்போது கல்லைப்போலிருந்தது உம்மைதோத்திரஞ் செய்கையில் தற்செயலாய்த்தோன்றிய ஒளியைக்கண்டு ஜிவ்வென்று திரும்பிப்பார்க்கையில் அவை யாவையும்பொன்னுருவாகக்காட்டிய கன்காட்சியைத் திருவுளம்பற்றவேணுமம்மாதாயே.

அர்க்காவதியம்மன்சொல்லும்-விருத்தம்

தவமிகுத்தவருணமன்னன் தரணியிஞசையையொழித்து
தற்பரத்துக்கேகுமக்காட்டனதாயாரும்
தவராதுபொற்றேரைக்கற்றேராகச்செயித்து
கடல்சூழ்ந்தவையாகத்தென்கண்முன்காட்டி
எவராணுமிதுநோக்கினிவ்வுருப்போய்முன்னமுரு
வெய்திடலாமவர்தமக்கென்றியம்பிப்போனர்
உவராழிசூழுலகாளுமரிச்சந்திரனே
யுந்தனதாமிவைகள்கைக்கொண்டுய்குவீரயே. (௨௩)

வசனம்.

அகோவாரும் அரிச்சந்திரமகாராஜனே மாதவமிகுத்தவருணமகாராஜனானவர் முப்பொருளாசையையும் ஒழித்து தேவலோகத்துக்கேகும் போது தனக்கிருந்தபொற்றேரையும்பொற்குதிரையையும் பொன்வில்லையும் பொன்னம்பையும் அவைக்குடையவர்களை யல்லாமல் வேறேயாராவது அபகரித்துக்கொண்டு போகாமல் அவைக்குடையவர்கள் வருமளவும் கல்லாய்ச்செயித்தோம் உடையவர்கள் வந்தால் பொன்னுய்விடுமென்று யென்னிடத்தில் ஒப்பித்துப் போய்விட்டார், ஆகையா லிந்தநாலுருவங்களும் உம்முதாகையால் இதுகளைநீரெடுத்துக்கொண்டுசுகமாகப் போய்சந்திரதயன் பெண்ணைக்கல்யாணஞ்செய்துக்கொண்டுக்ஷேமமாய்வாரும்மகாராஜனே

இராசன்-வசனம்.

அப்படியேமகாபாக்கியமம்மா அர்க்காதேவிதாயே

அரிச்சந்திரன்-மதிதயமகாராஜன்
சபையைநோக்கிவருகிற-விருத்தம்.

உன்னியகருமந்தன்னை உரிமையாய்ப்பாதுகாக்கும்
தன்னியனரிச்சந்திரன்றன்றளங்களைக்கூட்டிகொண்டு
கன்னிமாதேவிதந்த கனகத்தேர்மீதிலேறி
மன்னியமதிதயன்றன் மாநகர்நோக்கிவாரார் (௨௪)

வசனம்,

இந்தப்பிரகாரமாய் அர்க்காதேவியினிடத்தில்வரப்பிரசாதம்பெற்றுக்கொண்டு சதுரங்கதளத்துடனே அம்மன் கொடுத்தபொன்னின் தேரிலேறி மதிதயமகாராஜனுளபட்டணங்கண்ணேறுசெல்லக்குவருகிற விதங்காண்க,

ஒசை.தரு-இ-ம்-சாவேரி-அல்லது-தோடி-ஆதிதாளம்.

பல்லவி,

மன்னவனரிச்சந்திரமன்னனன்மதிதயன் - மாநகர்நோக்கிவந்தானே

அநுபல்லவி.

மின்னிடைச்சந்திரமதியாள் மீதில்மிகமோகமீறிக்
கன்னிமாதேவிதந்த கனகத்தேர்மீதிலேறி(மன்ன

சரணங்கள்.

௧, சிஷ்டர்துதித்திடும் வசிஷ்டமகாமுனிவரும்
அஷ்டமந்திரிமாரும் இஷ்டமுடன்வெகுசந்
துஷ்டியதாகவர அஷ்டாதசவர்த்தியமும்
சட்டமதாய்முழங்கப் பொன்மாரிகள்
திட்டமதாய்வழங்க
கட்டியங்களடிக் கடிநின்றுகூறக்
கருணசாவேரிபாடிக் கவிவாணர்சேர
வட்டமாகவரு மட்டில்லாபடைகள்
எட்டுத்திசையுமேவ மலர்கள்தூவ
விசும்பிற்றுவ கணைகளேவ(மன்ன)

௨, அச்சுதனரன்பிரமன் வச்சிரபாணிமுதலாய்
மெச்சிப்புகழும்வெகு உச்சிதமாமணிகள்
தைச்சரத்தின்மேலே வச்சிரவன்னம்போலே
பச்சைப்பரிகளாலே பூட்டிய
செச்சையினிசையாலே
முச்செகத்தவரு மிச்சையொடுவரவே
முழங்குமோசைபெட்டு முகங்களுமதிரவே
எச்சரிக்கைசொல்லி மொச்சுமன்னவர்கள்

வச்சகப்பணத்தாலே	பூவைமேலே
ஆசையாலே	மலைபோலே(மன்ன)
௩, மத்தமதகரியும்	நித்தமிடிபரியும்
சத்தியங்கிழ்கொடியும்	ரத்னமணிமுடியும்
உத்தபூசக்ரக்குடையும்	நத்திவரும்படையும்
மெத்தமகிழ்ச்சிகொண்டு	அறுசுவை
யுற்றவமுத	முண்டு
பத்தியாகயிரு	ப்க்கமும்வருக
பார்க்குமாதர்மனம்	பதைபதைதுருக
சித்தமானதுபிர	மித்துசந்திரமதி
நத்தும்வகையையாடி	மெத்தமோடி
செய்துகூடி	கொண்டாடி(மன்ன)

வசனம்.

அகோகேளும் தருமபுத்திராகளே இந்தப் பிரகாரமாய் இரதகஜ துரகபதாதி சேனைசேனாபதிகளோடு தேவேந்திரனுக்குச் சமானமான பிருதுகளோடுங் கூடியிருக்கிற அரிச்சந்திரமகா ராஜனை சந்திரதயமகாராஜன் எதிர்கொண் டழைக்கப்புறப்படுவதுகாண்க

பொது-விருத்தம்.

எண்ணருந்தளங்கள்சூழவிரவியன்குலத்துவேந்தன்
நண்ணருமானைசேனைலங்கமிழமைச்சரோடுந்
தண்ணருட்சபையைமேவிச்சகலரும்வருகக்கண்ட
அண்ணலன்மதிதயேந்திரனகமகிழ்ந்தெதிர்கொண்டானே

வசனம்.

அகோ கேளுந்தர்மபுத்திராதிகளே இந்தப்பிரகாரமாய்சேனைசைனியங்களுடனே வந்த அரிச்சந்திர மகாராசனுடைய ஆரபாரத்தைக்கண்ட மதிதய மகாராஜன் ஆனை சேனை துரகபதாதிகளோடே எதிர்கொண்டுபோய்அழைப்பதுகாண்க.

௰௫-தரு-இ-ம்-சுருட்டி-அடதாளம்.

பல்லவி.

மருகன்வருகைகண்டு
மகிழ்ந்தெதிர்கொண்டானே -மதிதயமன்னவன்

அநுபல்லவி.

அருகேயிருந்தவ	மச்சர்சூழஅரி
யாசனமிழந்துபே	ராசையுடனெழுந்து (மருகன்)

சரணங்கள்,

க, மன்னமன்னவர்களும்	மாதவத்தோர்களும்
பன்னரும்வீரரும்	பற்பலமுனிவரும்
அன்னியமாதர்களும்	அளிக்குமரந்தாணிபோல்
உன்னியிமைக்கொட்டாம	லுளகாளன்முகநோக்க(மரு)
உ, மாந்தருமாதரு	மமைச்சருமன்னரும்
எந்தலைப்பார்க்குங்கண்க	ளிமைத்திலர்சற்றேனும்
மாந்தளிர்நிகர்மேனி	வரனுதல்ரதியின்றன்
காந்தனிவனேவேறு	காமனுளனோவென்(மரு)
௩, இவனமக்கருளிய	திருவருளிவையென
விவனதிவானேயாகி	லின்றவனுமிவன்செய்
தவப்பயனிதுவென்ன	தரணியோரெவர்களும்
புவனத்திலிவனினை	யூபருள்ரோவென்ன(மரு)

பொது-விருத்தம்.

எதிர்கொடுபோ யழைத்துவந் தரசருக்கு மியாவருக்குமியற்கையான, கதிரொளிபோல் விடுதிவிடுத்தவரவர்க ளமர்ந்தபின்னேர்கன்னிகல்லாள், கதிர்கொடுபோய்ச் சந்திரமதிபொன்னடியில் முடிசூட்டிநகைநகைத்து, சதுர்பெறவேசதய அரிச்சந்திரன்றன்வடிவழகைச்சாற்றுவாளே. (உ௬)

வசனம்.

அகோ கேளும் சபையோர்களே இவ்விதமாய் வந்த அரிச்சந்திரமகாராஜனை யெதிர்கொண்டழைத்து வந்த மதிதயமகாராஜன் அவரவர்களுக்குத்தகுந்தவிடுதிவிடுவித்து அரண்மனைக்குள் போனபிற்பாடு சந்திரமதியின் சமுகத்தில் சஞ்சரிக்கிற ஒருமாதுசிரோமணியானவள் சந்திரமதியினுடையபாதாரவிந்தத்திலே தெண்டனிட்டு அரிச்சந்திரமகாராசனைவர்ணிக்கிறவிதங்காண்க.

௰௬-தரு-இ-ம-ஆனந்தபைரவி-ஆதிதாளம்

பல்லவி.

முன்னாளினில்நீசெய்ததென்னதவமோஎன்னால்
மொழியவரிதுமானே

அநுபல்லவி.

இந்நாளினிலுந்தனை	கல்யாணஞ்செய்யவந்த
இனகுலத்தரிச்சந்திர	னியற்கைசொல்லுவேனே-முன்

சரணங்கள்.

1 திருவளர்ந்தமுகமும்	திகழ்செம்பவளவாயும்
மருவளர்மாலைமார்பும்	மலர்தாமரைக்கரமும்
அரிவையரேயெவரு	மதிசயிக்குமிடையும்
சிறுவமாம்சேரமசேகை	சிறந்தமேனியுங்காண(முன்)

௨, புரந்தரன்சாபம்போற் புருவம்நுதற்பிறையாம்
நிரந்தரமுந்தேகத்தில் நிறைந்தவயிறுங்காய்ந்த
மரந்தழைத்திடநகைக்கும் மாமொழியும்வாயினல்
சுரந்தவமுதச்சொல்லுஞ் சோராநடையுங்காண(முன்)
௩, உள்ளந்துருகுமின்பத் திறைவனையுற்றுநோக்கின்
ளுள்ளமன்னவர்களை யுடன்களித்தெதிர்நோக்க
கள்ளர்க்குந்துணையான காரிருள்கடந்துஞ்சோதி
வள்ளலைக்கண்டகண்கட்கு வளர்தாரகைபோலாமே(முன்)

விருத்தம்.

ஈதுரைத்தால்லேந்திழையருகுறும்
போதுள்ளவணிற் புன்சிரிப்புற்றிட
வோதுகொய்திடும்பூவையர்சூழவே
மாதுசந்திர மதிசபைவந்தனள் (௨௭)

வசனம்,

இந்தப் பிரகாரமாய் சந்தோஷித்துச்சொல்லிய தோழியானவள் அருகே யிருக்கும்போது சந்திரமதியானவள் தனக்குள்ளே அடங்காத மகிழ்ச்சியினல் புன்சிரிப்புகொண்டு புஷ்பசாலங்கள் செய்துவரும் சகிமார்களோடு கூடிக்குலாவிக் கொண்டுகன்னிமாடத்திலுலாவ வருவதுகாண்க.

௰எ-தரு'இ-ம்-சங்கராபரணம்-அடதாளசாப்பு

பல்லவி.

வந்தனளே-சந்திரமதி-வந்தனளே

அநுபல்லவி,

வந்தனள்சபைதனில் சந்த்ரமதாகவே
கந்தமலர்க்குழலாள் கன்னிமாடத்துலாய் (வந்த)

சரணங்கள்-

௧, திங்கட்சடையோனருள் திகழ்ந்ததிறைற்பிறந்த
பங்கையபதத்தினற் பாவைதலகலென (வந்த)
௨. முல்லைநகையாள்நவ் மோகனுங்கியர்சூழ
வில்லைப்பழித்தவேல் விழியார்களுடுலாவி (வந்த)
௩, சித்ரப்பதுமைபோலே சேடியருடன்கொஞ்சி
பத்ரமிகவுடையும் பாவைசந்திரமதி (வந்த)

வசனம்,

அகோ வாருமம்மா பெண்கள் நாயகியே இப்போது வந்திருக்கிற அரிச்சந்திர மகா ராசாவி னுடைய ஸ்ரீகரம்பொருந்தியமுகத்தின தழகும் இந்திரன் தனுசு போல இசைந்த புருவமும்தாமரைமலரி னிதழைப்போற் கண்களும் செழும் பிறை போன்ற நெ

த்தியும் சங்குபோன்றகழுத்தும் விசாலமானமார்பும் கமுகுபோன்ற தோள்களும் காந்தள்மலர்போன்ற கரங்களும் பவழங்காய்போன்ற விரல்களும் பருத்த இடையும் பொருந்திய பிருக்கட்டிகளும் கதலியை இசைந்ததுடைகளும் பதுமமலர்போன்றபாதங்களும் தாயளயமாய் அரிச்சந்திராதிருதியான யிகங்களுமுள்ள அந்தராஜனைமும்பார்த்து இளைக்கினையாகவந்திருக்கிற இதாராஜாக்களையும் பார்க்கையில் அனேகங்கோடி நட்சத்திரங்களினடுவே செகத்ஜோதியாய் விளங்கிக் கொண்டிருக்கிற சந்திரனுக்குச் சமானமாய்வந்திருக்கிற உனது பிராணநாயகனைக்கண்டுவந்தேன்தாயே.

பொது-வசனம்.

இப்படி வந்த சந்திரமதியினுடைய இயற்கை எவ்விதமாயிருக்குதெனில்.

எண்சீர்க்கழிநெடில் விருத்தம்-இ ம்-பந்துவராளி.

விதம்விதமான பதுமைகல்யாண வேட்டைகாரிகமிகவிளைப்பாள், விளாந்தசம்பந்தியாருநற்றேழி மாத்தெலாம்விளைவினின்மிகுந்த, முதமுளவறுகளைப் போனகமளிப்பாள் முப்பழம்பால்நெய்தேனுடனே, முகிழ்ந்தறுகொழுந்துஞ்சோலைக்களமைத்து முனைந்துநுங்கொடிகளைப் புதைப்பாள், இதமுடனவரத்நமேடைமீதிருந்து இன்பமாயூசலாடிடுவாள், இணைபுரிவிலாநற் பாங்கியர்தம்மூ டெழினுயர்பந்துகளாடிப்பாள், படமிகுசாரிகாகீரங்கடமக்குப் பற்பலபாஷைகளயிற்றி, பரிவுளமயில்குயில்களங்களுட்களிக்கும் பான்மையிற்பற்பல விளைப்பாள், மதமாளங்கட்கிகமுருவிதமாய் மந்தகதிகள்பயில்விப்பாள், மதிதலத்திந்தநேர்மையாய்சந்திரமதியெனுமாதிருந்தனளே. (௨அ)

வசனம்.

இப்படியிருக்கிறசமையத்தில் இருவருக்குமஉடற்கூறுதொந்தநிலைமைஎப்படியிருக்கின்றதெனில்.

பொது-விருத்தம்.

இனகுலாதிபனெண்கொடிபடர்ந்திணிதிலங்க
இமகரன்குலத்திறைவிமெய்க்கொடிபடர்ந்திலங்கும்
கனமிகுந்தவனிதைய கமலமதுமலரக்
காமியாள்செழுங் கமலமாமுகமதுமலரும்
இனமிகுந்தவனிதையத்துட்காமத்திபெழும்ப
இறைவிமார்பிலைசனமுமுலையதுபுடைத்தெழும்புர்
ள

இனகரங் குலத்தலைவன்றன் வீரமுஞ்செருக்க
செல்வியன்றன் பிள்ளிடையாளுவளவெனச்சிறக்கும்
கன்னிதேரினாருசாபாசமாதிதரிக்க
எனக்குமெய்க்கட்டுகொள்மிகவுதிகரிக்கும்
வசாமித்ராநேலேக்கிரான்பாமையதுயினாய
வனிதைபெண்ணட்டருவவளமும்நிறைந்ததுவே.

வசனம்.

இவ்விதமாயிருக்கிற சந்திரமதியினுடன்றுக காமராஜன்பாணப் பிரயோகஞ்செய்ய மன்மதநாபத்தினால் மனதுவாயசந்திரனைத்தாவிக்கும்விதங்காண்க.

சந்திரமதிசொல்-தெலுங்கு நடை-சிபத்தியம்
இ-ம்-ஆனந்தபைரவி.

கடவளாருதங்கடைந்திடும்போதுமந்
தரகிரியாலேகிதவிடதாகின்
ஆலகாலவிஷாக்கினிஜ்வாலைதன்னை
முழ்கச்செய்திட்டதில்மூட்டுமோவில்
பரமேசன்சிரந்தனைப்பரிவுடன்றரிக்கையில்
நெத்திகண்ணைநப்பினால்நீறுசெய்யின்
மாயவர்க்கேவல்கிமகிழ்ந்துசெய்யும்போது
நாகாரிக்கினாயகில்னாவிலத்தில்
இந்தவாதனைசெய்திடவெய்திடாது
குருமனைவியைதொட்டால்குருவுன்னைப்
பங்கஞ்செய்யாமல்விட்டதாற்பயமிலாமல்
விரகியாவேதைசெய்கிறாய்வெண்ணிலாவே. (௧)

ஐஅ-தரு-இ-ம்-ஆனந்தபைரவி-அடதாளம்

பல்லவி.

இந்தமதிவந்தநேதடா சந்திரவுனக்கு (இந்த)

அநுபல்லவி.

இந்தமதிவந்தநேது அந்தமாரன்போதினையோ
வந்தடிக்கடியெந்தனைத்தொந்தரவுசெய்கிறாயுனக் (இந்த)

சரணங்கள்.

௧, பாற்கடலிலேபிறந்திட்டாய் தேவர்பணியும்
பரமன்சிரவாசியாய் விட்டாய்
தார்த்தனென்றும்பெற்றாய் தோகையர்களைவதைத்தாய்
கார்த்திகைக்கன்னிகைதன்னைக்கர்த்துளம்தவிக்கச்செய்தாய் (இந்த)
இலக்குமிக்குச்சோதரனாய் அழகையும்
ருக்மிணிக்குத் தக்கவனாய்

தக்கவனென்று பக்கம்வருமுன்னமென்னை
மொய்க்குமதனுக்குப்பயக் தொளிக்கவென்னைச்சிக்கவை
(த்தாய் (இந்த)

௩, பெண்பழிதன்னையே நேர்க்கிறாய் விரகமென்னும்
பெருங்கடலதிலேன் சேர்க்கிறாய்
பண்புறுமவனென்றுனைப் பாருளோர்புகழ்வதுபோய்
கணபற்றவனென்றுனையிந்தானிலத்துள்ளோரிகழ (இந்)

சந்திரமதிசந்திரனை நாஷணித்துச்சொல்-சிபத்தியம்.

கடிஜசித்தனேயுனைக் கண்ணுக்குக்கண்ணாக
வைத்திருந்தானே ஸ்ரீ வாசுதேவன்
நஞ்சுடன்பிறந்தநீயஞ்சாநெஞ்சனென்றலோ
சிரமிசைதரித்தனன் சிவனுமுன்னை
பாவியேஉந்தனை ப்ராணநாயகனென
அரிவைரோகிணிதேவியாசையுற்றாள்
கோமளமேனியனென்றலோ குருபாரி
தாராமாதுந்தனைச்சார்ந்தனைந்தாள்
கொடியபாதகாவுனை நுதற்குணமறிந்தும்
என்னமாய்க்காதலுற்றனர் கன்னிமார்கள்
நிமிஷமாவதும்பொறுத்திடார் நினதுமாய்கை
பூததயைசற்றுமிலையோ பூர்ணசந்திர (௨)

வசனம்.

இவ்விதமாய்நாஷணித்துமறுபடியும் தன்னிடத்திலிருக்கிற பிர பாவங்களைச்சொல்லிக்காட்டும்விதங்களைக்காண்க.

ஐகூ-தரு-இ-ம்-அடாணா-ஆதிதாளம்.

பல்லவி.

அதிதுரிதமாகவோடடா-அடாசந்திரா
அதிதுரிதமாகவோடடா

அநுபல்லவி.

கதியளித்திடுமீசன் கழுத்திலிருந்தநாகம்
சதிசெய்யவந்துனையே சடையிலொளித்திருக்கு (அதி)

சரணங்கள்.

௧, விம்பந்தனக்குப்பிரதி விம்பமொன்றிருக்கந்த
விம்பமெனதுமுக விம்பமென்றறியாயோ (அதி)
௨, காந்தியுளனென்று காந்திக்குநிகரான
காந்தியென்மேனியென்று ராயந்துபார்த்திடுமிக (அதி)
௩, அமுதமிருக்குதந்த னமுதத்துக்கிணையெந்தன்
அமுதமொழியேநேவ ரமுதமென்றறியாயோ (அதி)

வசனம்.

இவ்விதமாய்ச் சந்திரனைத் தூஷித்தபிறபாடு வசந்தனை நிந்திப்பது காண்க.

சீசபத்தியம்-இ-ம-எதுகுலகாம்போதி.

விரகியர்மீகப்பயப்படகாமுருவேளையில்
உனையேயன்படைத்தனன் ஊர்திபூத்தோன்
உலகையுண்டவனென்னவுயர்ந்தபெருமாளுமாயன்
உனையெங்குவிடுத்தனனெறுதுங்கிநின்றாய்
ஆனைகளைத்தத்தமுதுங்கிக்கியஆண்டவனை
அங்கயினனென்றுனை பதிவிலாரோ
எந்தகாளிலேனுமெந்தமாமுனியானுறு
சாபமிட்டுந்தனைச்சபித்திலரோ
கருசன்முதலானவர்களுமவனுசமீகா
ஆனையிறனையான சொல்லியாவதென்ன
யூகித்தறிகுதிலனுவ்வளவிதமில்லை
வாடயெனையானடாபோரில்வசந்தமன்னா. (௧)

உ௰-தரு-இ-ம-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

வாவாவாவசந்தா-உந்தன்வளமுயர்தளமுடன்-வாவாவாவசந்தா.

அநுபல்லவி.

ஆவலுடனேவந்தாய் ஆகாதீசெய்கொடுமை
பாவையானுறுவோர்கைபார்க்கிறேன்போர்க்களத்தில் (வாவா)

சரணங்கள்.

௧, உள்ளவும்மதிகெட்டு உறுவிலியைநேசித்தாய்
உன்னிலுமவன்மிக வுயர்ந்தவனோவசந்தா
வெள்ளமிருந்தாலரிப் பள்ளந்தூர்ந்துபோமென்ற
வள்ளலதிந்திடாயோ தாளர்தேபோர்க்களத்தில் (வா)
௨, நளினபங்கயங்கண்டு களித்தேதன்னெதிர்வந்தாயுன்
நாட்டங்கண்டாலென்முக வாட்டமடைவேனென்றே
பனிதமினைவிலக்கண்டு பயந்திடையிற்பதுங்கி
படந்தைவிரித்துப்பாம்பு பசித்துவந்திருக்குது (வா)
௩, அலைக்குளசைந்தசைந்து நிலைக்குள்கில்லாமலிதம்
கலைகுறைந்தானைச்சேர்ந்து கலங்கிறாயோவசந்தா
தலைகிறாதுபோதல் தலையேயெந்தன்முன்னேசென்று
சிலையுடனேவாமுலை மலையுடனமர்பொருத (வா)

கலித்துறை.

திங்கட்குடையுந்தென்றலுந்தேருந்திமிங்கிலத்தி
னங்கட்கொடியுமருங்கின்னாரூர்தியுமலைமுரசமு

29

றுங்கக்கரும்பின் றுலக்குநல்வில்லுநறுமலர்வண்டி
னங்களிறுநாணங்களைக்கண்டு நடுங்கிலனோ.

வசனம்,

இந்தப்பிரகாரமாய்ச் சந்திரமதியானவள் வசந்தனைநிந்தித்துக்கொண்டிருக்கும்போது சந்திரனைக் குடையாகவும் தென்றலைத்தேராகவும் மகரத்தைக்கொடியாகவும் கடலை முரசமாகவும் கருமபை வில்லாகவும் வண்டினங்களை நாணாகவும் நினைத்து சேனையையமாக்கிக்கொண்டுவந்த மன்மதனைக்கண்டு நடுக்கமுற்று பாணப்பிரயோகங்களுக்கஞ்சி கெஞ்சுவதுகாண்க.

உ௧-தரு-இ-ம-பியாக்-அடதாளம்,

பல்லவி.

எய்யாதடாமதனுகனை-எய்யாதடா

அநுபல்லவி.

எய்யாதடாமெய்யினிற் றையாதடாவிடுக்கந்
செய்யாதடாவென்மேற்கனை வையாதடாவம்புகள்
எய் வாயோ-ஐயாவுன்மனம்
நை வாயோ-செய்யாதவினை
செய் வாயோ- வையகத்தினி
லுய் வாயோ- (எய்யாதடா)

சரணங்கள்,

௧ பதிவிருதையர்களைப் பங்கஞ்செய்திடுமந்த
பதிபோதனையோமாரா மதிமோசமோசொல்வாய்
இது வேதோ-நீசெய்திடு
வது வாதோ-பெண்ணுய்ப்பிறப்
பது திதோ-பூமியில்வரி
யுத வாதோ- (எய்யாதடா)
௨, கன்னமாபுரியாளும் மன்னன்மகளாமென்னைச்
சின்னப்படுத்தவுறு முன்னையறியேனிக்கா
ளெக் காளோ-எவனுனக்குச்
சொன் னனோ-துசங்கட்டி
நின் றனோ மன்னர்வருநா
ளெக் காளோ-(எய்யாதடா)
௩, பெண்பழியோர்க்காதே கண்மீறுதபார்க்காதே
செண்பகமேனியைப் புண்படச்செய்வது
பண் பாமோ-பெண்பழிகொள்ளல்
விண் போமோ-விண்ணாவெனனல்

நன் பாமோ-கனவிலுமுனைக்
காண போமோ-(எய்யாதடா)

சந்திரமதிசொல்-வெண்பா.

மன்னவனீயாவாபோமானிலத்திலேமதியிம்
இன்னவனேயல்லாற்சிறந்தவனோ உன்னை
மதிப்பாரோபூவுலகில்மங்கையர்கட்கிவ்விதியை
விதிப்பாரோவேதன்விரைந்து. (௧)

வசனம்.

ஆகோகேளாய் மன்மதா நீ இராஜனுவாயா பூபதிகளாசேலே அர்
பபுத்திக்காரனேயொழிய கன்யமுனளவனு-உன்னிடத்திலே உலகத்
தாரியாவரும்சந்தோஷப்படுவார்களா அந்தப்பிரமதேவன்தான் ஸ்தி
ரீஜாதிகளுக்குமாத்திரம்இவ்வளவு விரகதாபத்தை உண்டாக்கலாமா
சகலசிவசெந்தாக்களும்உன்னுலேஎங்காளும் காமாந்தகாரமென்னுங்க
டலிலேயமிழ்ந்தி கரைகாணமல் மடியலாமாசிவசிவா-அரிகரி.

உ௨-தரு-இ ம்-பிலகரி-அடதாளம்.

கண்ணிகள்.

௧, மாதர்மேற்கணையெய்தல்-மன்னவர் குத்தகுமோமன்மதா- இந்த
நீதருனைப்போலானிலத்திலுங்காணலிலேனே மன்மதா
௨, குடியிருந்தவீ டைடக்கொளுத்தக்கோமுவாருண்டோமன் - என்
ன-பொடியிருக்குதோகைவிற்பூமாரிபொழிகிருய் மன்மதா
௩, வன்மிகாணேற்றுயே வல்லவனோமிக மன்மதா-உன்னை
கண்டவர்கைக்காரோகரும்புவில்லேலானென்றால் மன்மதா
௪, திங்கட்குடைபிடித்தாய்தென்றற்றேரேறினுய்மன்மதா இவையுங்
கள்குலத்தவர்க்குரியவிருதுகளோ மன்மதா

சந்திரமதிசொல்-சீசபத்தியம்,

மதிதலந்தனைக்காக்கும் மாயவன்றவத்தினில்
பங்குலுக்குப்பிறந்தாயேமன்போல
கணவனைக்கண்டிடாக்கன்னியர்தமைமசக்கும்
பாவியென்றேன்பெயாபடைத்துநின்றுய்
மாருதமதிவண்டுமயில்குயில்கிளியலே
இவைகளைத்தோழரா எங்களுற்றும்
மூவுலகிலுள்ளோருமோகிக்குமந்திரம்
உபதேசஞ்செய்ததாரோதுமதனு
நல்லதாகட்டுமேநீயும் நல்லவனேயானுல்
நங்கையரையிகவாட்டுதல்நியாயமல்ல

ஆறுவதாகினமென்மனந்தேறவுந்தன்
மாயைசெல்லாதுபோபோவுன்மந்திரத்தே. (௨)

உ௩-தரு இ-ம் அடாணு-அடதாளம்.

பல்லவி.

அடடாமதிகெட்டாபோடா மன்மதாமெத்த
ஆணவமுடையாதடாபோடா (அடடா)

அநுபல்லவி.

அடடாபோருக்குப்புறப் பட்டாசவரியத்தை
விட்டாமலர்க்கணைக ளெட்டாவுன்னிறுங்கேடா (அடடா)

சரணங்கள்.

௧, கன்னக்கென்னிமிக்கணையுன் கரும்பவில்லுக்குப்பருவம்
இணைக்கிணைத்தென்றற்றேர்க்கென் ஆலகுக்கேறிருக்குதா (அட)
௨, அம்புலிக்குடைக்கெங்க மைமிபாமனமங்கன்
மும்மதக்கருலானக்கெதிர் மலையானைவணங்குதக்கு (அடடா)
௩. வன்கிராணுக்கென்மேனி மலர்ச்செண்பகமென்கிறதன்
வெண்டிரைக்கடலுக்கிதே விரகாக்கினியிருக்கு (அடடா)

கலித்துறை,

குன்றாலவுநெகிழ்கொடிக்கெதன்றலோசையுங்குமுகன்னபன்
கன்றாலவுந்திரைகடன்மாபோசையுங்கன்னகல்லின்
சென்றாலமங்கமந்தைநாதிநேசையுங்கிகெகெகிறோ
நின்றாலவுக்கண்டுநேரிழைதோழியைபினோக்கனளே

வசனம்,

இவ்விதமாய் விரகதாபத்தினுல் சந்திரனேயும் மன்மதனேயம்தா
வித்தசந்திரமதியானவள் முன்தனக்கு சுபவர்த்தமான மூனைக்கசித்ரா
ங்கியென்னும் சகியானவள் வாராதிருப்பதுகண்டு துக்கமடைந்து விரக
வேதனையால் வருந்தப்படுகிறுகாண்க.

உ௪-தரு-இ ம்-பைரவி-ஆதிதாளம்

பல்லவி.

வந்தாளில்லையே-என்பாங்கி-வருத்தமறியாளோசித்ராங்கி

அநுபல்லவி,

நொந்தார்மனத்தினுன சந்தாபந்தீர்த்திதருளும்
சிந்தையுளமன்னவர் மந்தாரன்றவளின்னம் (வந்தாளி)

சரணங்கள்.

௧ கொன்னைடச்சொருக்கிற்பொல்லா வண்டினங்கள்சுழலக்
கொம்மைகண்மேற்பரவிக் குழுதன்னபுழைல

கொண்டைக்கொடியோன்செய்யுரு, சண்டையின்மனமடையக்
கேள்வர்க்குறிக்கைசெய்ய வெகுதானமாகுமங்(வந்தா)
உயிரியவிசுவந்தாமேன்னைச் சரியானசெயர்கொடு
பெருமையாகமக்குறுன்னைச்சிறு பேறுதானறிசெய்தோ
அரிசையமருமுமுதல்வமணிசெய்யு மனமகள்
செருவடைக்கியாருமு சேர்மவந்தாசென்றொனருமம்(வந்தா)
உடயகானந்தோயுற்ற மாலேப்புருவகாகன்மி
புகாமகன்மயுடைந்து இரதிகாந்தன்செய்போரில்
யோகமாமக்கவேறு முத்திநல்தருஅம்
பக்குமைகருக்கு பிரானேசாவந்தாமெய்ம(வந்தா)

விருத்தம்,

மதிமிருந்தசந்திரமதியிந்தவாறு
மனமகிழ்ச்சிதருமெனதுதோழிமார்கள்
விதிமிருத்தேதனயகன்றன்னேவேலை
வேறுமைகையேதாதோவதிலேனே
விதிமிருத்தவிருகாட்டிவேலைவிளம்பி
கொடுகருரும்வேயிணியினுமைபார்போலக்
கதிமிருத்தசுறவஞ்சிபொருந்திவந்து
கதிக்கின்றாயின்கொடிபோலுநிக்கின்றுனே. (கூ௰)

வசனம்.

அகோகேளும் சர்கபுத்திராதிகளே அதிசாதரியமுனளசந்திரம தியானவன் காகந்தசந்தோஷத்தைத்தரப்பட்ட பிராணநாயகனைந்திருக்கிரு மென்று சொல்லிப்போனசதியாகவன் இவ்வளவும் சம்மிடத்திக்குவராதவனைகன்னை இந்தமன்மதனை செயிக்கிறதற்கு முடியவில்லையே என்றுசிந்திக்கும்போது முக்காலகுறிகளையும் அறிந்துசொல்லப்பட்ட உமாதேவிக்கொப்பான வடிவையுடைய குறவஞ்சியானவள்சபைக்குவருகிறதுகாண்க.

உரு-குறத்திவருகிற-தரு-ஙி-ம சவராஷ்டகம் அடதாளம்,

பல்லவி.

வஞ்சிவந்தாளே-மலைக்குறவஞ்சிவந்தாளே

அநுபல்லவி.

செஞ்சிலேமாரனுக் கஞ்சிவிரகநோய்
மிஞ்சியருக்கிய வஞ்சியணையிதக்
கெஞ்சிக்களிப்புறக் கொஞ்சிமகிழ்ந்திடம்
ரஞ்சிதமோகன சஞ்சீவிமருந்திடும் (வஞ்சி)

வசனம் கூடையில்லையாம்மேகட்ட - கூடையில்லையாம்மே கட்ட கூடையில்லையாம்மேகட்ட.

சரணங்கள்.

க, பாரமுமேமுக மேருவிமயமாம்
பார்க்கவொண்ணுதசொற் பனமொமாயிடை
பாரினிமுலே நலணயொத்தனைக
பருசயானனுமஞ்சப் பார்க்குமிழிக்கை
குரத்தவத்தில் மிருத்தமடோ
குசனைவென்றந்தி குறியெனக்குற(வஞ்சி)

வசனம்-முறம்மில்லையாம்மேகட்ட-முறமில்லையாம்மேகட்ட-முறமில்லையாம்மேகட்ட.

உ, பங்கயத்தன்னைப் பழிக்கின்றபாதமும்
பரிவளநாபுற வொலியிசைகீதமும்
செங்கதிரைக்கண்டு செழித்தமலரைச்
சிந்தமுகமும்செய் பரியகரங்களும்
பொங்குமுளைவன்னைப் பூவைநிகர்செவி
பூங்குமிழ்நாசியைப் பெருந்துமெனக்குற(வஞ்சி)

வசனம். பச்சையில்லையாம்மேகுத்த பச்சையில்லையாம்மே குத்த பச்சையில்லையாம்மேகுத்த.

௩, மானைச்சடைபுடை யானைத்தொழுதேத்தி
வளிமறைன் மலர்ப்பதத்தைவாழ்த்தி
பூனைக்காசிவக்கர மணிசாமிசப்பூட்டி
பொற்புளமாத்திரைக் கோலுங்கையிற்காட்டி
தேனைப்பழித்தமொழி யாவெருமருட்டி
தெரிவையீதுள்ளமுன் னுரிமையைப்பாராட்டி(வஞ்சி)

வசனம், கூடையில்லையாம்மேகட்ட-முறமில்லையாம்மேகட்ட-பச்சையில்லையாம்மேகுத்த.

பொதுவிருத்தம்.

கொந்துகைந்து தளர்ந்துமெலிந்துக
சிந்துருகுந்சந்திர மதியைத்தேற்றப்
பந்துமாமுலே குலுங்கக்குறவஞ்சி
வந்துவாசல் வளந்துதாயவாள். (கூக)

வசனம்.

இந்தப்பிரகாரமாய் வந்த குறவஞ்சியானவள் மன்மதனுல்பீடிக்கப்பட்டு இந்தனையுறாதயக்கமடைந்த சந்திரமதியின் மலர்ப்பாதமுமம்படி மதிதயககாராஜனது வாசல் வளப்பம் கூறியிடுவதுகாண்க.

அ

௨௬-தரு-இ-ம-மத்தியமாவதி-ஆதிதாளம்

பல்லவி.

வாசலிலாகான்-மதியேந்திரன் வாசலிலாகான்

அநுபல்லவி.

நேசமிருந்தபாக சாலனன்முதலோர்களின்
வாசமுடன்பணியும் வள்ளிமணாளருள் (வா)

சரணங்கள்.

௧, அஷ்டலட்சுமிகளுஞ்சக அஷ்டிபுடனேவாழும்
இஷ்டாகதாகமிகு சிஷ்டர்மிகமுன்குழும் (வாச)
௨, சோதியில்லாதமனு நீதிநெறிமிகழும்
ஆதியயன்மால்போற்றும் சோதியருள்திகழும் (வாச)
௩, போதகுமாருரு பாதந்தொழுதாலு
வேதமோதுந்தெளம்ப ராதரவாயருளும் (வாச)

சந்திரமதிசொல்-விருத்தம்.

வாசலின்வளங்களலிதாய்ச்சொலி
பாசமுற்றுப்பரிவுடனேசெக
நேசனாருளாரிங்குவந்தவன்
நேசமியாதுநீ யாரெனக்கூறிடுவாள் (௩௨)

வசனம்.

அகோவாரும்பெண்ணே மகாசந்தோஷமாய் லோகநாதனுடைய இருப்பிடமாகிய எங்களரண்மனைக்குவந்த உன்னுடைய அனுபந்தமென்ன நீயார் எனக்கறியச்சொல்லுமம்மா துசிரோமணியே.

௨௭-தரு-இ ம-சங்கராபரணம்-அடதாளம்.

பல்லவி.

ஆரடி-அடிபெண்ணேநீ-யாரடி.

அநுபல்லவி.

ஆரடிநீயெந்த ஊரடி உனக்கென்ன
பேரடியென்முகம் பாரடி அடிமாதே (ஆரடி)

சரணங்கள்.

௧. நாககன்னிகையோமே னகையோ திலோத்தமையோ
மோகனாங்கியோசெகன் மோகினியெனவந்தாய் (ஆரடி)
௨. ஆவலுடனேயுனை யாவரறிவாரதை
மூவருமறியவுன் முழுமதியோமொப்பாய் (ஆரடி)
௩, மாத்திரைக்கோலுடன் மகிழ்ந்துவந்தாய்கைக்குறிச்
சாத்திரமுரைப்பாயோ சங்கரியோவந்தாய் (ஆரடி)

வசனம்.

அகோவாராய் மாதரசே உன்னுடைய ஊரேது பேரேது நீயார் நாககன்னிகையா திலோத்தமையா அல்லமோகனாங்கியோல்

31

வந்து எங்கள் வாசல்வளப்பஞ் சொல்லிவந்தாய் உனக்கு சாமுத்திரிகா லட்சணந்தெரியுமா கையிலேமாத்திரைக்கோலுடன்வந்த வகையென்ன உன்னுடைய சாதியென்ன இவையெல்லாம் விஸ்தாரமாய் தெரியப்படச்சொல்லிவாரும் பெண்ணே.

விருத்தம்.

ஆதிகொன்முதலாகவவனியில்
நீதிநெறி யாவுக்குமொப்பனே
சோதிபோல் விளங்குஞ்செகத்திலுன்
சாதியேதெனச் சாம்பவிகூறுவாள் (௩௩)

வசனம்.

பூர்வகாலம் முதலாக இந்த பூலோகத்திலே இராஜநீதிகளுக்குத்தக்க உன்னுடைய சாதியின்னிலைமை ஏதென்றுகேட்டபோது உமையவளைப்போலுள்ள குறமாது சொல்லுவதுகாணக.

௨அ-தரு-இ-ம-கல்யாணி அல்லது-சங்கராபரணம்-அடதாளம்.

பல்லவி.

ஆரென்றிருகிந்த-அவனியிலேயென்றும்
அறியாயோ நீமடமானே

அநுபல்லவி.

பாரெல்லாந்துதித்திடப் பற்பலருதிகளும்
பகுத்துரைத்திடுங்குறம் பாவையானவள்நானே (ஆரெ)

சரணங்கள்,

௧, மூவர்க்குஞ்செகதலப் புகழ்ந்திடுமுப்பத்து
முக்கோடிதேவர்க்கும் முனிவர்க்குங்குணாதிர
கோவர்க்கத்தோர்கட்குங் குறிகள்சொல்லதொடுத்து
குமரேசர்க்கொருபெண்ணைக் கொடுத்தோந்தனனருள்
(சேர (ஆரென்றிரு
௨, குறவள்ளிக்குலந்தனைத் திடவாங்கொடுப்போம்
செழுந்தினையழைத்தொரு குடிசைக்குட்படிப்போம்
உறமுடனருந்தவர்க் குபசரித்தமிப்போம்
உலகில்நாங்களேதெய்வ மெனச்சென்மமெடுப்போம் (ஆ)
௩, அளவில்லாமலையடி வாரங்கள்திரிவோம்
அன்புடனமுகன் பூசைகள்புரிவோம்
களவினைறைக்கனடால் கன்மாரிசொரிவோம்
காசினிதனிலாக்கியர்கள் மூக்கையரிவோம் (ஆரெ)
௪, விமலனவர்க்குமலை யாசாட்சிகொடுத்தோம்
விரும்பிவந்திடுத்தோர்கள் மனக்குறைவிடுத்தோம்

அமலன்முதலோரை யடிபணிந்தடுத்தோம்
அசுரர்குலத்தோற்கர சாட்சிதனைக்கொடுத்தோம் (ஆசெ)

விருத்தம்.

இனிமையென நெறியைச்சொன்னாயினி
மலைவளஞ்சொலி மனமகிழ்வாயெனத்
தலைவியானவதைப்பலநோக்கியே
கலைமகளெனக் காதலிகூறுவாள் (௩௪)

வசனம்.

இந்தப்பிரகாரமாய் சாதிவளப்பஞ்சொல்லிவந்த குறவஞ்சியை நோக்கி மலைவளப்பமேது தென்றுவினவிய சந்திரமதிக்குக்குறவஞ்சி மலைவளப்பஞ்சொல்லி வருவது காண்க.

இபதை-தரு இ-ம்-சங்கராபரணம்-திரிபுடைதாளம்.

கண்ணிகள்.

௧- எங்கள்மலை தங்கமலை இமையமலையம்மே
இப்புவியோர்களிந்துறையும் இடபமலையம்மே
இங்கண மல்லைசைலமலை திருமலையாமம்மே
தேவர்கள்வந்தனுதினமும் திரியுமலையம்மே
௨, நாகமலைசித்ரக்கூடம் நகரிமலையம்மே
நற்றவத்தோர்வீற்றிருக்க நாமமலையம்மே
தோகைமலைவெள்ளிமலை எங்கள்மலையம்மே
துறவோருறைபழனிமலை யருணமலையம்மே
௩- வெற்றிமிகுவேழமலை யருணமலையம்மே
வேதநூலும்ஓதியரும் விருத்தமலையம்மே
பத்திமிகுத்தவருறையும் பழவமலையம்மே
பஞ்சமாபாதகமொழிக்கும் பருதிமலையம்மே
௪- வல்வினைதீர்த்தருள்கொடுக்கும் விராலிமலையம்மே
வாரணவருணமலை சாமிமலையம்மே
தொல்வினையாவையுமொழிக்கும் தீர்க்கமலையம்மே
துதிப்போர்கள்குறைதவிர்க்கும் தருவமலையம்மே

விருத்தம்

இந்தவகைகூறிடவும் எந்தவாற்களித்து
உந்தனுரையாலென்று ஊழ்வினையொழித்தேன்
பந்தமரகன்றதெனைப் பாவியெனவஞ்சி
மந்தமலைகட்குளவதிசயங்கேளென்றாள் (௩௫)

வசனம்

இந்தப்பிரகாரமாய் மலைவளப்பஞ்சொல்லிவந்த குறவஞ்சியை அவைகளிலுள்ள அதிசயங்களைச் சொல்லிவாவென மலைகளினதிசயஞ் சொல்லிவருவது காண்க

௨௰ - தரு -இ-ம்-ஆனந்தபைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

மலைகளினதிசயங்கேளாய் அம்மேஇந்த (மலைகளி)

அநுபல்லவி.

மலைகளினதிசயங்கள் பலபலவிதங்களுண்டு
மாலேவிளம்பாயுத்தன் மனமகிழ்விப்பேனானே (மலைக)

சரணங்கள்

௧, தேனருவிவழிந்து தெளிந்தம்பரத்திற்பாயும்
செங்கதிரவன்றேரித் திகழ்ந்தகால்களுஞ்சாயும்
வானரங்கள்களித்து வளர்கனிகள்பறித்து
வானவர்க்குக்கொடுக்கும் வழிகளிற்போய்மறித்து (மலை)
௨. ஆடுமரவின்மணி யாலேவெயிலெறிக்கும்
அம்புலிமைக்கவள மென்றேதும்பிபறிக்கும்
நாடும்வனையாடுகள் நடித்தாக்கொம்பேறிப்பாயும்
நறுமணமீயும்பஞ்சத் தருவுமங்கங்குசேரும் (மலை)
௩, விந்தையாகக்கிளிகள். வேதாகமங்களோதும்
விளங்குங்குயிலினங்கள் விருவிப்பாடுமப்போது
சிந்தைத்துயரொழிக்கும் சிவசுப்பிரமணியமலை
சிங்காரஞ்சொல்லவாதி சேஷன்கூறுதேறுமலை (மலை)

விருத்தம்.

தாழும்பார்சடையண்ணலனார்புடைச்
சூழுமானிலந் தனில்மாதவர்களி
லேழுலோகத்துளோர்க்குமெழிலுற
வாழும்நாட்டுவளமதுகூறுவாள் (௩௬)

வசனம்.

மலையினதிசயஞ்சொல்லிவந்தகுறமாதினைப்பார்த்து நாட்டுவளப்பஞ்சொல்லென்னநாட்டுவளப்பஞ்சொல்லுவதுகாண்க.

௨௧-இபதை-தரு-இ-ம் சங்கராபரணம் ஆடதாளம்.

கண்ணிகள்.

௧. வேதமோதும்நாற்களாறும் விளங்குங்கௌநாடு
விமலனிலாவின்குலத்தோர் வெற்றியெறுமகநாடு
போதன்திருமாலாறும் புகழ்ந்திடுங்காடு
பொற்புமிகுவீந்தவனை பொருந்தியசெங்காடு
௨. தேசமன்பத்தாறினுக்குஞ் சிறந்தவனோநாடு
தீரன்சந்திரதமவர்சன் சேருலவுமாநாடு
கேசவஞ்டலட்சுமியும் நிலையாய்வாழுமநாடு
செறிதவருச்சரயுவெனும் நதிபெருகுமநாடு

௩. அருந்தவர்கட்கனுதினமும் — விருந்திடுங்நாடு
அமரர்கொண்டாட்டமுடனேவந் — தமர்ந்திருக்குநாடு
சுரந்தவருட்கடவிதெனச் — சொல்லியங்நாடு
சுக்ர்முதலோர்பூசைசெய்து — சுகிக்கவருநாடு
௪. சிலவளமும்பலவளமும் — சிறைகண்ணேறுநாடு
நித்தியானந்தங்கொண்டமனு — கீர்த்திகொள்நாடு
குலமன்னைகளனுவளவும் — குறைவிலாநாடு
குமாரகுருபதம்போற்றிக் — கொண்டாடுநாடு

விருத்தம்,

உலகிலுள்ளநன்னாட்டிலிலங்குநாடு
இலகியவிந்தையெல்லாமொழிந்தநீ
விலகியெந்தெக்குந்திசையிலோடினாய்
அலகிட்டாப்போலுரைவெனக்கூறினன். (௬௭)

வசனம்.

இந்தப்பிரகாரமாய்நாட்டுவளப்பஞ்சொன்ன குறத்தியைப்பார்த்து நதிவளங்கள்கேட்க நதிவளஞ்சொல்லிவருவதுகாணக,

௧௨-தரு-இ.ம-கேதாரகௌளம்-ஆதிதாளம்.

பல்லவி.

காருடியபுண்ய — நதிகளின்வளமைகேள்
தேனூர்மொழியுறை — தெரிவையர்க்கரசே (காருடிய)

அநுபல்லவி.

தேனுளித்செய்த — தவப்பலனுண்கிற
மெல்லியரேயித — மேதினியிலுற்றது (காருடிய)

சரணங்கள்.

௧. மங்களமிகத்தருந் — துங்கபத்திரைநதி
மகிமைமிகப்படைத்த — மாலாபாலறிநதி
செங்கதிர்குலத்தோரை — சிறக்கச்செய்யுங்காளிநதி
சிறுலாவியசொர்ண — முகிசிந்துஸரஸ்வதி (காருடிய)
௨. காதம்பினிகபினி — கபிலமகாநதி
கண்டவெம்பைநதி — காச்யபிகாவேரி
சௌந்தமிஷ்ணவேணி — கர்த்தமாலைகாயத்ரி
கௌசிகைகோமுகி — கனுதைசோமசனி (காருடிய)
௩. வேகவதிபவானி — வருணையசரயு
வேத்ரவதிமாய — காசனிரேணுகா
மேகமாலாநதி — மிகலைதருமகவேதம்
மேன்பதமதரும்பிம — ரதிபாகிரதிநதி (காருடிய)

விருத்தம்.

கலகலம்பாயுங்குழித்துகளித்துநீ
பலகளிகருகாநானர்க்கலைமே
உலகுமீதிலுனக்கிணையோரிலை
தலைமைமகன்சாற்றெனக்கூறினன். (௬௮)

வசனம்.

நதிவளஞ்சொன்னகுறத்தியைப்பார்த்து தலைமைமகன்சொல்லிவருவாபொன்றசந்திரமதிகரு ஆனைகபுரைய தலைமைமகளோசொல்லுவதுகாணக.

௧௩-தரு-இ.ம-தோடி-ஆதிதாளம்

பல்லவி.

பூதலத்தினிரமிகப் — புண்யதலங்களுண்டு
புகலக்கேளடி — யம்மே-அம்மே-(அம்மே)

அநுபல்லவி.

காதல்கொண்டொப்பேறுமன்கருத்தென்னிடத்திருந்து
களித்துக்கொண்டாடிமிக — காட்டிபெறுவாயம்மே (பூத)

சரணங்கள்.

௧. கண்டுதெண்டனிட்டே — களித்தவலம்வரக்
கருத்திலினைப்போரைக் — கருதியறைத்திடும்
காலதூதர்க்கிணக் — கனவிலும்விடுத்திடாக்
கருமஞ்செய்தேமிகக் — கருணைகறைத்திடுந்
தொண்டுசெய்தோரது — தொழிலுஞ்செய்வோர்பத
தூளியெனத்திரி — வார்க்குமுத்திதரும்
துறவோர்கள்வாழுந் — சிதம்பரமென்றெரு
தாய்யதலமுண்டு — தொல்லுலகினிலம்மே (பூத)
௨. ஊர்வனங்களாய்ப்பிறந் — தெந்தனைசெனனமோ
உத்தமச்செந்தவென் — றலகினில்வாழ்நாபின்
உயரப்பறக்கின்ற — பரவைகளாய்ப்பிறந்
துர்வியுள்ளோர்மகிழ் — தெங்குலும்புகழுற
பார்தனில்நடப்பன — வாகச்செனித்திடும்
பதவிதனிலிருந்து — பதவாய்ப்பூமிச்செனித்து
பரிவுள்ளமானிடச — செனனந்திருவாரூரிற்
பவித்தவர்க்கினியுண்டோ — பவமெனுமல்லலம்மே (பூத)
௩. வேதபுராணக — மாதியாமநாலும்
விளங்கியச்சொனகமார்த் — தாதிதனமெய்தரும்
விரிகடல்சூழ்ந்த — பூதலத்தினிற்பெரிய
வியலர்களரியரத் — தவங்களினிலக்கரும்

கோதாயக்குபாகாதி — க்குருக்கருடன்
குலமன்னமைகவுறுமத் — பிரர்க்கன்மர்கள்க்கழும்
குவலயமெறு நதிகள் — காசினிமரித்தோர்க்
குயர்முத்திதருமென்றே — புலவோர்முப்புகழும் (பூக)

௪. மூன்றெருநாலந்திற் — திருமாலும்விரிஞ்சியும்
அடியடிகாணவென் — நன்னவராகமாய்
முயர்ச்சிக்கொண்டுதேடித் — தேடிநெடுந்தூரம்
முடியாமலோடிவந் — தேரிகவேகமாய்
இவ்விருக்காலும் — படையோமிவ்வாணவம்
என்றுபணிந்தோரை — எற்றிக்காட்சிதந்த
ஈசன்குறை — லேசனுணனுறுமலை
நேசனேனெந்தோர்க்கு — நிறைந்தமுத்தியாமம்மே (பூக)

விருத்தம்.

பாரளந்தவருக்குமயனுக்கும்
சீரணிந்தலோசனர்க்குங்குறி
போரச்சொல்லிப்புகழ்ந்துநீவாங்கிய
பேரதென்னெனச்சேயிழைசாற்றுவாள். (௧௬)

வசனம்

அகோநேரம் தர்மபுத்ராதியரோதலமிகைமசொன்னகுறமாதை பார்த்து அந்தந்த இடங்களில் குறிசொல்லிவாங்கின வெகுமதிகளெ ங்கேயென்றுகேட்கவுங்கவைகளை விவரமாகச்சொல்லுவதுகாண்க.

௧௪-தரு-இ-ம்-அசாவேரி-திரிபுடைதாளம்

பல்லவி

அரிகரபிரம்மாதி — கட்குநான்குறிசொல்லி
அடைந்தவெகுமதிகள் — பாரம்மே

அநுபல்லவி

விரிகடற்சூழ்புவியில் — வெற்றியிருகண்ணுறவே
வேந்தன்றவத்துதித்த — விமலசந்திரமதியே (அரி)

சரணங்கள்

௧ நாமகள்மேற்பிரமன் — மோகித்துக்குறிகண்டு
நாயகியுடனைத் — தேடிசொன்னேர்குறி
நேமமாயவன்தந்த — நிறைமதிக்கலைமிகு
நெறிதவறுமப்புதி — மாலைதக்காளம்மே (அரி

௨ மிக்கவைகுந்தன்பிறு — விளக்குமியாவரின்வண்ட
மேன்மையறிந்துசொன்ன — மெய்க்குறியாவமகிழ்ந்து

கைக்கங்கணமுத்தங்கம் — பிதாம்பரமுமரத்ன
கணையுந்தந்தமனம் — களித்தாளிதோபாரம்மே (அரி)

௩. மலையரசன்மகள்மேல் — கைலையாளிமோகித்து
மனமயங்குவதறிந்து — மகிழ்ந்துசொன்னகுறிமால
விலைமதிப்பில்லாச்சந்திரக் — கலையளித்துகொண்டாடி
வெகுமதியாகத்தர — விளங்குமணிபிதம்மே

விருத்தம்.

நெறியெலாம்வெகுநேர்மையாமென்னுளம்
அறியச்சொன்னுயானந்தமிக்கொண்டேன்
வெறியனங்களை வெல்லவென்னக்கொரு
குறிசொல்வாயென்னக் கோதைகுறவிகூறினுள் (௪௰)

வசனம்

இவ்விதமாயவிடங்களில் வாங்கியவெகுமதிகளைக் காட்டினவு டனே சந்திரமதியம்மாள் தனக்குக்குறிசொல்லவகுறத்திபூசைசெ யக்கேட்பதுகாண்க.

௧௫-தரு-இ-ம்-பைரவி-அடதாளம்

பல்லவி.

குலதெய்வபூசைசெய்து — குறிசொல்வெக்காக்கேட்பதை
கொண்டுவந்துகொட்டியம்மே

அநுபல்லவி.

கறிவக்குணகாது — காரியசித்திபுண்டு
காமராஜனைவெலவும் — கண்வளினையனைவாய் (குல)

சரணங்கள்.

௧, கருமணக்சக்கிட்டுத் — தரைமொழுகிஅம்மே
நல்லசந்தனத்தினுக் — கோலமிட்டுஅம்மே
பெருங்கணவனைக்கட்டிப் — பிள்ளையார்பிடித்திட்டு
பெருமையாகத்தொழுது — பேசமனைகயதிந்து (குல)

௨, அருகுவில்வந்தும்பை — அருமைச்செம்பரத்தையும்
அலரித்தாமரைப்புட்ப — மகிழ்தெளித்துப்போற்றி
பருகும்பொரிகடலைப் — பயறுவல்முப்பழமும்
பாக்குவெற்றிலைத்தாம் — பாதகாணிக்கையிட்டு (குல)

௩, ஆதிபராபரியை — போதியுளங்களித்து
அறுசமயமிருக்குதங்கல் — மைஅப்பாவாடையிட்டு
பாதிப்பெண்ணுருவான — பரமனருளாலுண்டும்
பரிபூரணத்தை — பிரமனேசனைத்தெரிந்து (குல)

விருத்தம்.

கலநிதன்னைக்கவிக்கிழிக்கின்
றலநிலைக்கதலாதககுறையென
நலநிதன்னிலக்காலைவெனாட்டியபின்
குலதெய்வங்களைக்கும்பிட்டுக்கூறுவாள். (௬௪)

வசனம்.

இவ்விதமாய்ச்சகலமான பூஜாவிதானஞ்செய்து குலதெய்வங்களை கும்பிடுவதாவன.

௬௬-தரு-இ-ம-ஆனந்தபைரவி-அடதாளம்

பல்லவி.

ஆதிமூலப்பொருளான-விநாயகனே
அருள்தரவருவாயே

அநுபல்லவி.

சோதிச்சுடரொளி யாகவிளங்கிய
ஷண்முகனைகுரவம் காவேனுமண்முகனே (ஆதி)

சரணங்கள்.

௧. கந்தாகுமாரகுகா கடவரக்கதிபனே
கடைகண்ணாருளிக்காரையா
காளத்திப்புரளிமாள் புலிக்குகுறக்குல
கன்னிவள்ளிசாமியே
சங்காபமிர்க்கும்அர விந்தப்பொதசரணனே
சாம்பசதாசிவனே
சந்நுசகாரனே சகுசக்ரதரனே
சதுமுகதேவனே எண்றைபத்மநாபனே (ஆதி)

௨. திருமலைவாசனே தேவர்கள்சேனே
திருவருள்தருவோனே
திருக்குடந்தாபுரி வாழுஞ்சக்கதேவியே
தில்லையம்பலத்தாடியே
பெருமலைமேல்வாழும் அருமைப்பெண்களமுதே
பெருகுமுத்துமாரியே
பேசரியகல்லியாயும் மூழ்த்தாரும்
பெருந்தேவியேதிரு குருந்தவனத்தாயே (ஆதி)

௩. துலையக்கொண்டாடும் கோலமறுளியை
கும்பகோணக்காளியே
கொண்டாட்டமுட்னவரும் சக்கடனைபுநத்திட்ட
குன்றவில்லியின்பாதியே

கலையாவுமொழிக்கும் கனதுஷ்டிக்கறுப்பியே
கருணைப்பொன்னியம்மையே
கருத்திலிருந்தெந்தன் உளத்திநினைந்தருள்
காதலைமின்றஆநந்தவைபிரதியே (ஆதி)

விருத்தம்.

வையகத்தோரவாழ்த்தக்குலவுந்தி
ஐயதேவர்கள்பாதந்தொழுதபின்
செய்யமாமலர்தன்னைச்சிவத்திடுங்
கைகைக்காட்டெனக்காரிகைகூறுவாள் (௬௨)

வசனம்

இந்தப்பிரகாரமாய் குலதெய்வங்களை கும்பிட்டு சந்திரமதியின் கையைப்பார்ப்பதாவன.

௬௭ நியமைத-தரு-இ-ம,உசேனி-திரிபுடைதாளம்.

கண்ணிகள்.

௧. கைதரஅம்மைதாகமன் கன்னக்கரசேகைதா
கருணைதியெனமேனிய கமலமலர்கைதா
மைதாவியவிழியாளேசெம் மணிகள்தரும்கைதா
மன்னரஞ்சந்திரதயன்செய்தவ மகளேவைக்கைதா

௨. முல்லைநகையாளேகவ மோகனாங்கியுன்கைதா
முத்திக்குயர்வித்தேகிளி மொழியேசெழுங்கைதா
எல்லையில்லாத்தவமாதர்கள் இறையேயுந்தன்கைதா
ஈசன்குமரேசன்முனை எத்திதொழுங்கைதா

௩. சோமகுலக்கொழுந்தேகர்ப்பின் சோதியேஇருக்கைதா
சுருதிமுதலெலைவையும்புகழ் சுடரேயெழிற்கைதா
எமசபைபிசன்றந்த எங்கிழையேயுன்கைதா
இலையோர்புகழ்ச ந்திரகுலத்திலுதியேயருட்கைதா

௪. கோககமேயன்னமே குயிலனமேகைதா
குவலயமாதரசின்மிரு தேனேசிலியேகைதா
போகமாமயிலேதவ முத்தேலசெழுங்கைதா
முனிவர்பதம்போற்றுநு செங்குமுதமாமலர்கைதா

௫. கண்ணேசிநாடாளன்றவக் கடலேயருட்கைதா
கருதருணர்ந்தமரைப் பேறுந்தன் கருணைமிகுங்கைதா
விண்ணோர்க்குயர்முதேதஞ்ச விளக்கேவெற்றிக்கைதா
விரகமாய்நுகுதமேகட்டிட விரும்பிவந்தகைதா

விருத்தம்.

உறவின்மிக்காருணைக்கெவ்ந்திபோலிலத்
அறவிநென்னனத்தேமாற்றிதாமெனைப்

பறவின் றுமன் றுளோர்பிரமிக்கவே
குறவிமலைக்குறிய றுகூறுவாள (௪௩)

வசனம்

இந்தப்பிரகாரமாய் கைபார்த்து குறிசொல்லும்விதங்காண்க.

௩அ-தரு-இ-ம ஆனந்தபைரவி-சாப்புதாளம்.

கண்ணிகள்

௧,	திருவுளத்துநிந்தகுறி	சொல்லுகிறேன்கேளாய் குல
	தேவியைமனத்திலுன்னி	யாதரித்தாளாய்
	குருகுமாரதேவராட்	குறிகேளும்மே-அ
	கொண்டபெருங்கோலமனக்	கோலங்காணம்மே
௨,	அச்சாயமிகுந்தரேகை	தன்னைப்பாரம்மே-இது
	அஷ்டலட்சுமியுமுன்தோழமை	யகன்றிடாளம்மே
	சக்கராயுதமணியும்	ரேகையிதம்மே எனே
	நாடுவருமசக்காதேவி	நாட்டங்காணம்மே
௩,	வெற்றிபெறும்ரேகையிதின்	சுத்தம்பாரம்மே-மன
	வேதனையகற்றியாளுந	சோதியையம்மே
	பத்தினிப்பெண்களைக்	காக்கும்ரேகையிதம்மே-இக்க
	பாரினிலுந்தனதிலை	யோரில்லையம்மே
௪,	விசித்திரமனோசங்காட்டும்	ரேகையிதம்மே-இதின்
	விளங்குறவிதங்கள்மெத்த	வேடிக்கையம்மே
	பசித்திருப்போர்க்கன்னமிடு	ரேகையிதம்மே-மெத்த
	பாக்கியவதியார்க்குமிது	யோக்கியவதியம்மே
௫.	இந்தரேகைசத்யதர்ம	மேற்றிடுமம்மே உன்னை
	ஈரேழுலகமும்புகழு	மியற்கைதானம்மே
	வந்துவாவிந்தரேகை	சுந்தரமம்மே-இத
	வையகத்தோரிராருவருக்கும்	வாய்த்திடாதம்மே
௬,	அம்மேயிந்தரேகையி	லதிக்கம்கேளம்மே-புவியில்
	அரிவையர்க்கிதுலபிப்ப	திசயமம்மே
	செம்மையாகவேடபாயிக்க	ரேகைதானம்மே-உந்தன்
	சிந்தனையகற்றியாளும்	செல்வமுண்டம்மே
௭,	பூமிதன்னிலிந்தரேகைத்	தன்மைகேளம்மே-நீ
	புருடன்கொண்டதோனேமனம்	புணருவாயம்மே
	காமிதம்யாவுமுதவும்	ரேகையிதம்மே-இதைக்
	காலகாலனுமறிந்து	காரெண்ணாதம்மே
௮,	அண்டரும்மதியவொண்ணு	ரேகையிதம்மே-உன்னை
	அணையுமோர்னல்லாதெவரு	மதியோறுதம்மே
	தெண்டனிட்டுக்கொள்வாயகுல	தெய்வத்தையம்மே-நாடு
	செல்வமுமிகத்தழைக்கும்	சொல்வதென்னம்மே

விருத்தம்.

கந்தமார்சடைக் காரிழையேயுனை
இந்தவாறுரைத் தேகவேவேண்டினேன்
அந்தமாயெனை யாளவருபவர்
எந்தநாட்டிறைவருரையென்றாள் (௪௪)

வசனம்.

இந்தப்பிரகாரமாய் குறிசொன்ன குறவஞ்சியுடன் சந்திரமதிதர்க்கஞ்செய்வதுகாண்க.

௩௯-திபதை-தரு-இ-ம-பந்துவராளி-அடதாளம்

கண்ணிகள்.

௧, ஆகாசமெத்தச் சமர்த்தியடியுந்தன்
அசப்பும்பசப்புமனா னறியாமல்மோசம்போய்
வேகமாயுனைத் தொடர்ந்துவந்தேன்மன
விருப்பமறியாமல்வீண்பேசுபோக்கிறாய் (ஆகா)
௨, தோகையரோமதியூகத்திறனுந்தன்
தொல்வினைதீர்க்கத் தொடர்ந்துவந்தேனெந்தன்
ஆகமகிழ்ந்துசொல்வேனவனுண்டிடும்
அவனியின்மேன்மையா மயோத்திநாடம்மே (தோகை)
௩, வேள்வியின்மிக்கவல் வேந்தனியற்கையும்
விளங்கியவேதன்மா லரனும்புகழ்ந்திட
தாழ்வில்லாதுரைப்பாயிந் தாரணியோர்புகழ்
தையலேயெனைச்சுற்றும் மையல்தனைத்தீர்ப்பாய் (ஆகா)
௪, அந்தரியவனங்களித் தளித்தபொற்றேரேறி
ஆசைகொண்டுசதுரங்கதளத்துடன்
சுந்தரியேவந்தானுன்னைமணந்திடச்
சோர்வில்லாசத்தியரிச் சந்திரமன்னவன் (சுந்தரி)

விருத்தம்.

வந்தகுறவஞ்சியிந்த வண்ணஞ்சொல்லி
வனிந்தந்தவெகுமதிகளெல்லாங்கைக்கொண்
டந்தமடந்தையாம் மதியோத்ரன்
அடைந்தசபைக்குமார்முதலோரும்வந்தார்
தொந்தமுளசந்திரமதிதனையழைக்கச்
சொல்லுமெனுமவசிஷ்டருரைதனைவிரும்பி
கந்தமலர்க்குழலசனியா ரொழுந்துவந்து
கதிக்கின்றார்கன்னிகைமுன் குதிக்கின்றோர் (௪௫)

வசனம்.

இந்தப்பிரகாரமாய் சொல்லிவந்த குறவஞ்சிக்கு அனேகமாணா
க்கியாரணங்களை வெகுமதிகொடுத்து அனுப்பினபின்பு மதியமகா

ராஜன்சபைக்கு தேவர்கள்முனிவர்கள் இராஜாக்கள்முதலான ஸர்வத்சாரும் வந்திறைந்தார்கள், அந்தவேளையில் வசிஷ்டமகரிஷியானவர் சந்திரதயமகாராஜனைப்பார்த்து உமதுசௌபாக்கியவதியான சந்திரமதியை மணக்கோலத்துடன் சபைக்கழைத்துவரச்சொல்லுமென்றவாக்கியத்தைக்கேட்டிவுற்ற சித்ராங்கியென்னும சகியானவள் எழுந்துவருவதுகாண்க.

சஅ-தரு இ-ம்-செஞ்சுருட்டி-திரிபுடைதாளம்

பல்லவி.

சந்திரமதிக்குகந்த-சகிவந்தாளையா
சந்திரமதிக்குகந்த சகிவந்தாளையா

அநுபல்லவி.

அந்திவிலெழும்பூர்ண — சந்த்ரநிகர்முகார
விந்தமெனவேபிரம்மா — நந்தமடைந்திருந்த(சந்திர)

சரணங்கள்.

க, பாதச்சிலம்பொலிகள் — கொஞ்ச-விழித்துப்
பார்க்கும்பார்வைமிகப்பஞ்ச — பாணனுமஞ்ச
காதலானதன்னை — மிஞ்ச-மிகக்
களித்துக்காமிமையவள் — கைகூப்பிக்கெஞ்ச(சந்திர)

உ, சிலையுள்காமனைச்சினந் — தோங்கிக்கூட்டிச்
சேர்க்கப்பிரிக்கவொண்டுங் — தெரிந்தசித்ராங்கி
கலைகள்யாவுங்கறறுணர்ந்த — பாங்கிப்-பருவ
காலமதிந்நாளைக்கக் — கருதுமாத்சாங்கி(சந்திர)

ங, வண்டுநாணவேணி — லோதநி-வரசிர்
வனிதையர்மனத்தினை — வாகுடன்தேர்ந்தி
தன்டுளபார்பனைப் — போதர்க்கரூந்
தையற்சந்த்ரமதியைத் — தழுவுஞ்சம்ப்ரீதி(சந்திர)

விருத்தம்.

மங்கையிவ்வாறுவந்தவள்மன்னன் மதியிதுற்றவையறிந்தெழுந்து
செங்கதிர்குலத்துமன்னவவெருந் திறந்தகல்யாணமண்டபத்திற்
பொங்கமாய்விரைந்துவந்தனர்நீயும் புகப்பமேகிழந்தென்ன
மங்கையர்முதிக்கணடுவுளமதிபோன் மதிதயன்மகளும்வந்தனளே.

வசனம்.

இவ்விதமாய்வந்த சகியானவள் சந்திரதயமகாராஜன் சபையைநீந்து சந்திரமதியினந்தப்புரஞ் சேர்ந்து சகலமான சாசபாசகக்

ளும்வேதவேதாந்த வேதோத்தமரிஷிகளும் பிராமணர்களும் கல்யாணசபைக்கு வந்துவிட்டார்கள் காயேநீயும் கல்யாணசபைக்கு எழுந்தருளவாயென்றழைக்கச் சந்திரமதியானவள் கல்யாணசபைக்குவருகிறவிதங்காண்க.

சக-தரு இ-ம்-தர்பார்-அடதாளம்

பல்லவி.

வந்தாள்சந்திரமதி-மனமகிழ்ச்சி தந்தாளதிசமதி

அநுபல்லவி.

செந்தாமரைமலராம் — சிவந்தமலர்முகத்தி
சந்த்ரதயன்றலைநதியல — வந்தனந்தாகதி(வந்)

சரணங்கள்.

க. செண்பகமலரெனச் — சிவந்ததிருமேனி
செகத்திலொளிவளைப்போ — வில்லெக்கயானி
பண்புமிகுத்தப்பாரில் — பலர்க்குமிவளாமேமானி
பதிவருணைதகளிலுணடோ — பாரில்வளசமானி (வந்)

உ, மின்னைநிகரிடையா — ளன்னநடையுடையாள்
சன்னபின்னற்சடையாள் — சதுர்யமுடையாள்
கல்னல்பராவிய — காமனிகர்க்குடையாள்
கண்டோர்களிக்கச்செய்யுங் — காட்சிமிகவுடையாள (வந்)

௩. மூவுலகோர்கட்கு — மிவளதுகூலி
மும்மூர்த்திகளுமிவளை — முனிசநிடசோலி
பூவுலகினிலிவ — ளேபுண்யசாலி
புறக்குமபோதேகழுத்திற் — புனைந்தாள்புகழ்மாலை (வந்)

ச. [illegible]பூமிஇனில்ராதிதேவி — அன்பிலவனிதேவி
[illegible]தம்பனடபயதி — லக்ஷ்மிமாதேவி
பழு[illegible]பேர்மீறிற் — பார்வையில்ஸ்ரீதேவி
[illegible]லரிச்சந்திரற்காய்ப் — பண்ணாயதிவளாலி (வந்)

விருத்தம்.

உத்தமிப்படிவந்துபெற்றவளையடிபணிந்து
உடவினடுமதியனைபொருந்திருந்தாள
மத்தமதகரிபரிகள்ந்திவருஞ்சுறறமுடன்
மெத்தமயனுற்றரசர் மிகுந்துவந்தார்
மெத்தப்பெருஞ்சேனையுற்றவரிச்சந்திரனும்
வெற்றிமிகுசபைநோக்கிவிரைவில்வந்தான்
அத்தகையயுற்றசபைமத்தியிலோர்சித்திரிப்பெண்
ணெழுந்துயெழுந்தவரவர்களுடவுசொல்வாள. (௱)

வசனம்.

இந்தப்பிரகாரமாய் வந்தசந்திரமதியானவள் தன்னுடைய நன்னாயகனான சந்திரதயமகாராஜனைநமஸ்கரித்து, தாரகைக்கணங்களுக்குநடுவேயிருக்கிறசந்திரனைப்போலசபையிலேவந்திருக்கிற ஸ்திரீசெனங்களின்மத்தியிலேஅமர்ந்திருந்தாள் அந்தசமயத்திலேசகலமகாராஜாக்களும் சகலசேனைகளோடேவந்தார்கள், அரிச்சந்திரமகாராஜனும் ஆசைகொண்டிருந்தான் அந்தசமையத்திலே சித்ராங்கியென்னும் பாங்கியானவள் சந்திரமதிக்குசபையிலுள்ளோர்களினியல்பைச்சொல்லி வருகிறவிதங்காண்க.

சித்திராங்கிசொல்

௬௨-தரு-இ ம,உசேனி-ஆதிதாளம்

கண்ணிகள்,

௧, மாதுசிரோமணியே சந்திரமதியேநீவாராய்-இந்த
மன்னமன்னவரையுந்னிப்பார்த்து விடைதாராய்மனந்தேறிய

சந்திரமதிசொல் தரு.

அவனிடமிடம் வந்தவரார்கள்தங்கேதும் ஊருமே
ஆசைகொண்டிரைக்க சேயானதிப்போதே-வஞ்சிமாதே

௨, (சித்) வான்வர்புகழுதற் கானவரங்கள்பெற்றதாயே-இந்த
அவனியையுளோர்கதாகுருகுலிவர்களைப்பார்ப்பாயே காப்பாயே
(சந்தி) மாமேனமரகதமே மயிலேகுயிலினமே - இந்த
மண்டலீகருக்குள்கான் தெண்டனிடுந்தானாது - [illegible]

௩, (சித்தி) கன்னமாபுரியாளும்மன்னவன்தவந்தனித்த [illegible] இவர்
கவுடர்கன்னடர்மிக்ககலிங்கர்-தெலுங்கர்களைக்காணு- [illegible]
(சந்திர) மின்னேரிடையிலே பெண்ணமுதேயெனையுள் [illegible] இவர்மே
ததேமாகவே கொண்டதெத்திறத்தடைவோர்-கேளாய்-எனையா [illegible]

௪, (சித்தி) முசிலிவிவராயர்லெச்சைவலத்தைமமன்னர்தகூத்தலமுதி இவ
ர்-அருவர்புகழுதுசேரர முதிபாண்டியர்சேரர் - முன்னேர்சபை
தானேர்

(சா) அதிலச்சிசன்பகத்தைதக்கேதகைபயில்தந்தமேனியானே இ
வர்அன்னசமம்பிமுகைமலையாருமென்பனதயதியாயோருநியாயோ
௫- (சி) பாலிநேமமுகதாழம்பத்தைப் பறித்தமொழியாளேஇவர்
பாப்பார்தூர்ந்சராயாருசகலர்கேப்பாளர்-பாராயன்னக்காராய்

(சந்) வேல்விழிக்கிரன் விலலைப்பழித்தவிழியாளே-இந்த
வேந்தருருக்குள்திருக்குமரங் தருமெந்தன்சிறுதந்தை-பெருந்

௬, (சித்) அன்னந்தைநமதகரி யதனைப்பழித்தநடையாளே-இவர்
அவர்தியாகர்வங்கர் ஆரியர்கொங்கணர் அன்னேயிடையின்னே
(சந்) பன்னகந்தைப்பழித்த சன்னற்பின்னலுற்ற சடையாளே-இந்
த, பார்மன்னவரெவரையும் பார்க்கவெனக்குச்சிறு பாட்டன்-பெரு
ம்பாட்டன்.

௭, கொவ்வைக்குடத்தைப் பூர்ணக்கும்பத்தைச் சினத்தமுலையாளே
இவர், குடகர்வடுகர்சீனர் கோசலர்கூட்டமிதுகோதாய் எந்தன்தா
தாய
(சந்) பங்கயத்தைக்கூர்மத்தைப் பழித்தபதத்தையுடையாளே உந்
தன்,பார்வையின் முன்னேயுள்ளபதிபிலுள்ளவரைப்பாரு-கல்திரு

௮, (சித்) பருதிகுலத்துதித்த பாலரரிச்சந்திரரிவரோ-இந்தப்
பாரில்வருக்கிணையானோ புரைப்பேனிவர்க்கிவரோ-மிகுந்தவரோ
(சந்) சருதியப்படிக்குக்கண் காட்சியருளியகாந்தவேயிவரைக்
கண்டவுடனேப்ரமைகொண்டு யென்மதிமயங்குதடி-தயங்குதடி

வசனம்.

இவ்விதமாய் சபையில்வந்திருந்தவர்களை எல்லாம குறிப்பாகக் காட்டிக்கொண்டுவந்து அரிச்சந்திரமகாராசனிடத்தில் வந்துநின்று அவருடைய குணநிசயங்களைச்சொல்லும்போது ஆசையடக்கத்துணியாத அரிச்சந்திரமகாராஜன் ஏறெடுத்துமுகத்தைப்பார்க்கும்போது கழுத்திலேமின்னிய மாங்கல்யசூஸ்திரத்தைக்கண்டு திகைத்துச்சொல்லுகிறவிதங்காணக.

விருத்தம்.

தேர்முடனணியணியாயிருந்தவன்பத்
தானதேசத்திறைவரியல்புகூறி
வந்தீர்க்குதனதுமுகவனசநோக்கி
வள்ளதிரோமணிசந்திரமதிகைத்தாத்
தொழுமுளவவர்களனுபங்கூறித்
தொடர்ந்தவளைக்கடைப்பார்த்தேதோற்றங்காடி
எந்தன்மனக்கனவனிதோவென்றேமாலும்
எழில்கண்டானரிச்சந்திரனெழில்கொண்டானே. (௬௮)

வசனம்.

ஆகோகேளும் தர்மபுத்திராதிகளே இவ்விதமா யன்பத்தாறுதேசத்திராசாக்களி னியல்புகூறிய சகியினது வாய்மொழிகேட்டுக்கொண்டுவந்தவளாஅங்கங்குள்ளவர்களுடையகுணநுபவங்களைச்சொ
ல

லீக்கொண்டுவந்து கடைப்பந்தியிலேயிருக்கிற அரிச்சந்திர மகாராஜனைக் கண்டவுடனே நிறைபுற்று தன்னுளிதமனக்குறிப்பினாலேயிவர் தானென்னுடைய பிராணநாயகனென்ன [அரிச்சந்திரமகாராஜன் [ஆனந்தசந்தோஷ பரிதனானுகாண்க.

சஉ - திபதை - தரு - இ - ம் - ஆனந்தபைரவி இரட்டைதாளம்.

கண்ணிகள்.

க, கன்னிகைமனத்தானகருத்தையறிவித்திடக்
 கண்டகதிர்குலதேரன் — களித்தானே
உன்னிப்பார்த்தவ்வாறனத்துதித்தகாதலாலவள்
 உவமையில்லாமுகங்கள் — டொளித்தானே

உ, சங்குபிகர்கழுத்திலங்குந்தாலியின்ப்ரகா
 சத்திலேக்கண்டமனது — சலித்தானே
நங்குமொழிக்கவல்லேலமைபிற்கழைத்தானென்று
 காருதனமனத்து — டொலித்தானே

ந, கன்னிகாச்லாமதிதயனவ்வகையறிந்து
 தன்னியனுனுமென்று — நடித்தானே
அன்னியரெவர்களுமயர்வுறவரிச்சந்திரன்
 அரிவையின்பெருமையை — கொடித்தானே

ச, அவ்வுளாயேமெய்யாநலரசரொருவரேனும்
 அறியீரோகளென்றே — அறைந்தானே
ஒவ்வுமோயில்பானடம் ஒப்புவாருண்டோவென்றே
 உர்வியில்மதிதயன் — உறைந்தானே

ரு, அச்சபையோரெவரு மரிச்சந்திரமன்னவன்பொய்
 யறைந்ததென்னென்றேமனந் — திகைத்தாரே
முச்சகமும்புகழ முக்கண்ணாரன்றுதா
 மியன்றறிவ்விதமென்று — நகைத்தாரே

சு, அரசரொவருமனங்களிக்கச்சொல்லக்கேளென்
 றனைத்துங்கொண்டேடந் — செய்தானே
புரிசடையோனளித்த வரத்தினைமதிதயன்
 புகழ்ந்துகொண்டாடிமனத் — தூய்தானே

எ, தங்கத்தாலிபுடனித் தையல்பூவிற்பிறக்கத்
 தற்பரன்முன்னேவரம் — தந்தானே
இங்கதறிந்தவரிச் சந்திரனலதிவனோ
 எவருமினிக்கொணாதென் — றிசைந்தானே

அ, தேவாரியமிது தெரிந்தவரிலரெனத்
 திருவருள்படினைக் — கண்டாரே
காவலாக்தள்ளடைந்தகதிர்குலமன்குன்னிக்
 கருத்தினையோகியர்பாற் — கொண்டாரே

கூ, அத்தருணமிந்தசந்த்ர மதிகைப்புட்பமாலையை
 அரிச்சந்த்ரர்க்கென்றேவாணி — லெறிந்தாளே
கொத்தவன்றன்கழுத்திற் கோணுதப்புட்பமாலைக்
 குதிகொண்டுவிழுந்தவகை — யறிந்தானே

ம, தங்கத்திற்சிறந்தாளிவள் றனக்கிவண்மனைவியாகத்
 தருமென்றசரீரவாக் — குண்டாச்சே
பங்கத்திற்சிறந்தோளிவ னென்றேதேவர்பூமாரி
 பலதரஞ்சொரியவிட — முண்டாச்சே

மக, அக்காலக்கரசாகனுன் மகிமையறிந்திலோமிந்
 அம்மனையெங்கட்கென்றடி — பணிந்தாரே
முக்காலுமுநீயேயெம்மைப் பாதுகாத்திடவென்றும்
 முயல்வானென்றுரைத்திடத் — துணிந்தாரே

மஉ, அரிவைமதிதாசைகொண்ட அரசரெவருந்தம்முள்
 அடக்கமோகபாசத்தை — விடுத்தினரே
பருவந்தனிற்றேவர்களெவரும்மனங்களித்துப்
 பகருமாசிகூறி — வாழ்த்தினரே

வசனம்.

இவ்விதமாய்யோசித்தஅரிச்சந்திரமகாராஜனனவர் சந்திரதயமகாராஜனே உம்முடையபெண்ணினின்கழுத்தில் தாலியேதென்றுகேழ்க்கச் சந்திரதயமகாராஜன் அதிகசந்தோஷப்பட்டு இவரேயும்முடைய மகளுக்குப்புருஷரென்று மகிழ்ந்துகொண்டு இதாராஜர்க்களின் இதயமகிழும்படிக்கு ஐயராஜராஜர்களே இந்தஅரிச்சந்திரமகாராசன் எங்குமாரத்திகழுத்தில தாலியைக்கண்டோமென்கிறாரே உங்களுக்காருக்காவது அதுதெரியுதாவென்று கேழ்க்க அவர்களில்லாங்கள் யாதொருவரும் காணோமென்றுசொன்னவுடனே அரிச்சந்திரமகாராசனுனவர் தன்னையழைத்துக்கொண்டுவந்த முனிவர்களிருக்குமிடத்தைநோக்கிப்பார்க்கும்போது சந்திரமதியானவள்எழுந்து மாலையைக்கைகளிலெடுத்துக்கொண்டு ஆகாசவாணிபூமாதேவிமுதலான தேவர்களைப்பிரார்த்தித்து ஆகாசத்திலெறிய அந்தப்புட்பமாலையானது தர்ச்செயலாய் அரிச்சந்திரமகாராஜன் கழுத்திலவந்துவிழுந்தது, பிறகுசந்திரதயமகாராசன்சந்தோஷப்பட்டு எல்லாராசாக்களையும்பார்த்துத் தனக்கு ஈஸ்வரனருளிச்செய்த வரப்பிரசாதத்தின்மகிமையையும்சொல்லி யுபசரித்தார் பிறகுயாவரும் ஆனந்தமடைந்து தேவர்கள்முதலானவாகளும் பூமாரிதூவி ஆசிகூறிவாழ்த்தினார்கள். தவுமியாவசிஷ்டர்முதலான முனிவர்களும் அம்பதுகாதுதேசத்து ராஜாக்களும்வந்திருந்து கல்யாணம் நடப்பிவிக்கிற விதங்காண்க,

வசனம்.

(வசிஷ்டர்) தவுமியர்முதலானவர்களும் ராசராஜாக்களும் வேதவேதியரும்சொல்லுமல் (தேவர்கள்சொல்) அகோ வசிஷ்டமகாமுனீஸ்வரரே (வசி) ஏன் (தவுமியரே) (ஏல்-கல்யாணசாமக்ரியமெல்லாம்வந்திருக்கிறதோ (தவுமியர்) ஸமஸ்தஸம்பத்தும் வந்திருக்குறது (வசிஷ்டர்) புண்யாகவாசனத்துக்கு ஏதாம்பண்ணலாமோ இல்லையோ (தவுமியர்) முன்னேமுன்னே பிள்ளையாத்துகல்யாணந்தான் ஆரம்பிக்கவேணும் (வசிஷ்டர்) ஆம் சரித்தான் பரத்வாசரெங்கே-கௌதமரெங்கே - வாலகில்லியரெங்கே (தவுமியர்) அவர்களெல்லாரும் எங்கேயோதெரியாது விசுவாமித்திர மகாரிஷிஸ்வரர்மாத்திரம் வந்திருக்கிறார் (வசிஷ்டர்) ஓகோய் அத்தான் அவன்பேச்சைசொற்பனத்திலேகூடச் சொல்லாதையும் அவனென்ன தபஸ்வியோ என்ன-தேவதைகளுடைய உபத்திரவத்துக்காக ஆனால் பிர்மரிஷிதானென்று சொன்னேன் (தவுமியர்) ஆமாமா நானுமுன்னேயே அப்படித்தான் கேள்விப்பட்டேன் (வசிஷ்டர்) நல்லது-இஷ்டமித்ரபந்துவர்களதிதி அப்யாகதாதி சகலஜெனங்களும் வந்திருக்கிறார்களா விசாரித்துக்கொள்ளும் (தௌமியர்) சந்திரதயமகாராஜனே சமஸ்தமானபெயர்களும் வந்திருக்கிறார்களா (சந்திரதயமகாராஜன்) சுவாமிதேவர்களும் முனிவர்களும்-அவந்திமுதலானஅின்பத்தாறுதேசத்துராஜாக்களும்பந்துவர்க்கஇஷ்டமித்திராதியாவரும்வந்திருக்கிறார்கள்,கலயாணமுகூர்த்தத்துக்கு(ஆரம்பிக்கலாமா) (சந்திரதயமகாராஜன்) அப்படியேஆரம்பிக்கலாம் (தௌமியர்) ஏன்அரிச்சந்திரமகாராஜனே முகூர்த்தத்துக்கு ஆரம்பிக்கலாமா (அரிச்சந்திரமகாராஜன்)சுவாமிகளேசபையாருடையஅனுமதியின்படிமுப்பத்துமுக்கோடிதேவர்கள்நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள்முதலானவர்களுக்கும் உபசாரஞ்செய்துஅநுக்ஞைபெற்றுக்கொண்டு என்னுடைய நமஸ்காரஞ்சொல்லி அன்பத்தாறுதேசத்து ராசாக்கள்முதலானசர்வத்ராளுடைய அனுமதியின்பேரில் முகூர்த்தத்துக்குஆரம்பிக்கலாம் (தௌமியர்) புண்ணியாகவாசனம் சிவாபஸ்வஸன்று - நாந்தி - உபநயனம் இவைகளுக்கெல்லாம் வேண்டிய சாமக்கிரியைகளை வாங்கிக்கொள்ளுங்கள் (வசிஷ்டர்) அப்படியே அப்படியே நீர் மகாசமர்த்தரோ அந்நோ இப்படிப்பட்ட கல்யாணங்களிலே லட்சோபலட்சம் கோடாநுகோடி நடப்பித்திருப்பீர்கள் சந்திரசூரியவம்மிசத்திலேகல்யாணவிமரிசையேமகாசிரேஷ்டம் அரிச்சந்திரசேிவாபஸ்வர்துநாந்தி உபநயனம்முதலானதுசகளுமாசக்காரி

யாத்திரைக்கு புறப்படலாமா அரிச்சந்திரமகாராஜன் அப்படியே புறப்படுவோம் சுவாமி (தௌமியர்) சந்திரதயமகாராஜனே மாப்பிள்ளையை எதிர்கொண்டழைக்கசகலசந் தோஷத்துடனே எழுந்தருளுங்கள் (சந்திரதயமகாராஜன்) அப்படியேவருகிறோம்சுவாமி (தவுமியர்) அக்கினிக்காரியம நடப்பிவிக்கிறதுதானே (வசிஷ்டர் கல்யாணப்பெண்ணை மணவறைக்கு அழைத்துக்கொண்டு வரவேணும் (தவுமியர்) அம்மா குழந்தையை அழைத்துக்கொண்டு வாருங்கள் (வசிஷ்டர்) தௌமியரே அக்னிகாரியங்களெல்லாம் ஆச்சோ இல்லையோ ஆயிட்டுது (வசிஷ்டர்) சந்திரதயமகாராஜனே பாணிக்கிரகணம் பண்ணிக்கொடுக்கிறதுக்கு ஆகவேண்டியசாயக் கிரியைகள் அழைப்பித்துக்கொள்ளும் (சந்திரதயமகாராசன்) அகோவாரும்கருணாநிதியென்னும் மந்திரி(மந்திரி) மையாப் (சந்திரதயன்) கோதானாதி சமஸ்தமானதானங்களுக்கும் பிராமணாளை மேகம்பண்ணிவாரும் மந்திரி (மந்திரி) அப்படியே நேமகம்பண்ணியாய்விட்டது(சந்திரதயன்) அவாளவாள் இஷ்டப்படிக்கு இஷ்டப்படிதானதருமங்களைக்கொடுபித்து விடும் மந்திரி (மந்திரி) அப்படியேமகாபாக்கியமகாராஜனே (வசிஷ்டர்) சந்திரதயமகாராஜனே சுவாமி (வசிஷ்டர்) விவாகசாலமாய்விட்டதுகன்னிகாதானத்துக்கு எதுகைப்படும் இந்த இடத்தில் கன்னிகாதானம் செய்விக்கிற ஸங்கல்பம செய்துக்கொள்ளவேண்டியது (சந்திரதயன்) அரிச்சந்திர மகாராஜனே எமக்கு ஸர்வசௌபாக்கியத்திலேயேவிதமாயிருக்கிற ஸவுபாக்கியவதியான சந்திரமதியென்னும் எனதுபுண்ணியகுமாரியை பாணிக்ரகணஞ் செய்து தருகிறேன் மனமகிழ்ந்து வாங்கிக்கொள்ளும் மகாராஜனே (அரிச்சந்திரன்) அப்படியே மனமகிழ்ந்தேன் மகாராஜனே இனி அவரவர்கள் போஜனத்துக்கு எழுந்திருக்கலாம்.

அஸ்தமித்தபிறகு நடப்பதுகாண்க.

வசிஷ்டர்சையாக்கிரக ப்ரவேசித்துக்கு சமயமாய் விட்டது கேட்பாதான் மனோற்சவத்திற்கு யாவரும்வாருங்கள் இவ்விருமயு தம்பதிகளை பள்ளியறையில் சேர்வைத்தபின்பு யாவரும் கொந்தமபூலாதி வாங்கிக்கொண்டு அவரவரை வீடுகளுக்குசென்ற பிறகு கல்யாணசம்பிரமத்தை புகழ்வதுகாண்க.

புஹூசனி-ராகம்-இ-ட-தோடி-ஏகதாளம்.

இருநாட்கண்ணிகள்.

௧. சந்திரதயோ சந்திரன்றன் — செந்தவத்துதித்தபூர்ண
சந்திரமதியையரிச — சந்திரன்மணம்புணர

மந்திரமுறைக ளுரைத்தார் வெகு
சுந்திரமதாய்ககரை யலங்கரித்தார்

௨, கல்யாணபேரிகை யடித்தார்-சந்திரதயன்
சொல்லியபடியேவேலை எல்லாமுடித்தார்
எல்லோருமானந்த மடைந்தார்-ஆதிசேடனும்
சொல்லரியமுனிவர்மண வுறைநாடர்ந்தார்

௩, வாழைக்கமுகுகள் நாட்டினார்-பாவுநெடும்
வானமட்டும்பந்தலையுலாவ வோட்டினார்
ஆழிபோலேதிரை யமைத்தார் மிக்கவலங்
காரமாய்வேதிகைபடவுடன் சமைத்தார்

௪, தாணுக்குத்தாணுவை பூட்டினார்-பூரணச்சந்திர
சூரியர்போலநிலைக்கண்ணாடிகள் மாட்டினார்
சாணுக்குச்சாண்மாலை தொடுத்தார் தங்கமயமாய்
தாலமுங்கும்பமுந்தக வாகவெடுத்தார்

௫, பொன்னரிமாலைகள் தேக்கினார்-கன்னயமான
பொற்பதுமைசித்திரப்படம் பொறபாய்த்தூக்கினார்
கன்னபுரியோர்கள் நிறைந்தார்-அணியணியாய்
காவலர்சேனைகளுடன் கலந்தங்குறைந்தார்

௬, பூரணகும்பங்கள் பதித்தார்-முனிவர்வேத
பூசுரர்வேதாகமங்கள் புகழ்ந்துதுதித்தார்
தோரணத்தால்வெளி மறைத்தார்-வரிவரிவீதி
தோறுஞ்சொர்ணமாரி பொழியவேயிறைத்தார்

௭, மாணிக்கதீபங்க ளேற்றினார்-முகமலர்ந்து
மணங்கமழுவாடை கஸ்தூரிபுனுகுநீக்கினார்
ஆணிப்பொன்னுடைகள் சாற்றினார்-வீதிவீதியாய்
ஆனபனிநீரின்மாரி யாகவூற்றினார்

௮, சந்தனத்தாற்கோலந் தீட்டினார் மணவறையைச்
சார்ந்தற்பகத்தினர சணிபூட்டினார்
சுந்திரப்பிகை கூட்டினார்-நறுமணமும்
தூபமுந்தீபமுந்தூரி சாகக்காட்டினார்

௯, பொன்னினாலவட்டம் வீசினார்-மகரந்தம்
பொழிந்திடும்புட்பசாலங்க ளெங்குந்தூசினார்
மத்தளமல்லரி தாளங்கள்-பேரிகையோடு
உத்தமத்தளங்கைந்தாள முகவீணைகள்

௰, நாகசுரம்பில்லாங் குழல்கள்-நவரத்தினக்கள்
நகராடமருகங்கள் நந்துமொத்துக்கள்

